வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால்நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12



மில்க்வைற் நீலசோப்
பிரகாசமாய் சலவை செய்கிறது!
மில்க்வைற சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 மார்கழித் திங்கள் 27-ம் நாள் (10—1—1965) ஞாயிற்றுக்கிழமை றம்ழான் 6 | இதழ் 33

# தமிழுரிமைகாக்கப் புறப்பட்ட தமிழரசுப்படை

கோப்பாய்
சி. கதிரவேற்பிள்ளை

தாய்மொழியாம் தமிழை அரியணையிலேற்றும் உறுதியான கொள்கையினை உள்ளத்தில் தேக்கி தேர்தற்களம் நோக்கும் வீரர்களின் பட்டியலை தமிழரசுக் கட்சி தேர்தற் குழு வெளியிட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களின் துயர் துடைக்கும் நோக்குடன் செயற்படும் ஒரே கட்சியான தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களான இவ்வீரர்கள் அனைவரும் தேர்தற் களத்திலே வெற்றி வாகை சூடுவார்கள் என்பது நாடறிந்ததே.



பட்டிருப்பு
சி. மு. இராசமாணிக்கம்



வட்டுக்கோட்டை
அ. அமிர்தலிங்கம்



நல்லூர்
டாக்டர் இ. மு. வி. நாகநாதன்



உடுவில்
வி. தருமலிங்கம்



மட்டக்களப்பு
செ. இராசதுரை



பருத்தித்துறை
க. துரைரத்தினம்



காங்கேசன்துறை
சா. ஜே. வே. செல்வநாயகம்



திருகோணமலை
[illegible] மாணிக்கராசா



மூதூர்
எம். ஈ. எச். முகம்மதலி.



மன்னார்
வி. அ. அழகக்கோன்



கல்குடா
பொ. மாணிக்கவாசகர்



கல்முனை
எம். இசட். மசூர் மௌலானா



உடுப்பிட்டி
க. ஜெயக்கொடி



பொத்துவில்
எம். எஸ். காதர்



யாழ்ப்பாணம்
சி. சே. மாட்டின்



வவுனியா
ஜே. பி. வின்சன்ட்



கிளிநொச்சி
கா. பொ. இரத்தினம்

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத் தலைமைப் பொறுப்பு கிடைத்தற் கரிய பேறு

உடம்பெல்லாம் தூசு. உடை எல்லாம் அழுக்கு; சிந்தனை தோய்ந்த முகம்; அதில் அடுப்புக்கரி கரும் புள்ளிகள். இந்தக் கோலத்துடன் குழாயில் உட்கார்ந்திருக்கிறார் ஒருவர். அவரெதிரில் பற்றுப்படிந்த பாத்திரங்கள் குவிந்து கிடக்கின்றன. அவற்றை அவர் துலக்கிக்கொண்டிருக்கிறார். அதே சமயத்தில், அடுத்த அறையில், ஒரு பெண்-அதுதான் அவரது மனைவி-சோபாவில் சாய்ந்துகொண்டு கால்மேல் கால் போட்டு உல்லாசமாகப் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறாள்.

இது போன்ற காட்சியைப் பத்திரிகைகளில் சிரிப்புப் படங்களாக நாம் அடிக்கடிப் பார்க்கிறோம். இது சித்திரக்காரரின் கற்பனைக் காட்சியல்ல; வாழ்க்கையில் அன்றாடம் காணும் நிகழ்ச்சி!

மேற்கு ஜெர்மனியில் திருமணமான ஆண்களில் 50 முதல் 75 பேர் வீட்டு வேலைகளில் மனைவிக்கு உதவி செய்வதில் பெருமை கொள்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில், வீட்டு வேலைகளில் கணவர்கள் போதிய அளவில் உதவுவதில்லை எனப் பெண்கள் கருதுகிறார்கள். குடும்பப் பெண்களில் 33 விதம் பேர் மட்டுமே குடும்பத் தலைவிக்குக் குடும்பத் தலைவர் ஒழுங்காக உதவி செய்வதாகக் கூறுகிறார்கள். எனினும் குடும்பத் தலைவர்களில் ஏறத்தாழப் பாதிப் பேர் வாரந் தோறும் வீட்டில் பாத்திரங்களைக் கழுவுவது மட்டும் உண்மை.

"மனைவி திறமைசாலியாகவும் மதிநுட்பம் நிறைந்தவளாகவும் இருக்க வேண்டும் என்பதே பெரும்பாலான கணவன்மார்களின் ஆவல். சிரித்த முகமும், சீரான போக்கும், எதையும் தாங்கும் இதயமும், சூழ் நிலைக்குத் தக்கவாறு நடந்து கொள்ளும் சாதுரியமும் ஒரு நல்ல குடும்பத் தலைவியிடம் அமைய வேண்டிய இன்றியமையாத அம்சங்கள்" என இவர்கள் கருதுகிறார்கள்.

தங்கள் மனைவியர் கவர்ச்சியாக உடை அணிய வேண்டுமென 64 விதம் பேர் விரும்புகிறார்கள். மனைவியர் அடிக்கடித் திரைப் படம் பார்ப்பதையும், முடி அலங்காரம் செய்வதையும், அதிகமாக சிகரெட் குடிப்பதையும் 16 விதம் கணவர்கள் வெறுக்கிறார்கள். அலுவலகங்களில் மனைவியர் பணியாற்றுவதை 30 விதம் பேர் மட்டுமே ஆதரிக்கிறார்கள். 60 விதம் பேர் இதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

ஒரு குழந்தை பெறும் வரை மனைவி வேலைபார்க்கலாம் என்பது 10 விதமான பேரின் கருத்து. "குடும்பத் தலைமைப் பொறுப்பும், தாய்மையும் மாதர்களுக்குக் கிடைத்தற் கரிய அரும் பேறு என்று 78 விகிதமான கணவன்மார்கள் கருதுகிறார்கள். பெண்கள் அனைவருக்கும் குடும்பப் பணிகளில் பள்ளி இறுதி வகுப்பிலேயே பயிர்ச்சி அளிக்க வேண்டும் என்று ஆண், பெண் இருபாலரும் ஒருமனதாகக் கருத்துத் தெரிவித்தார்கள்.

—யு. பி. எஸ்.

# விடுதலைப் போருக்கு நமது பங்கு

சகோதரிகளே!

தமிழ் பேசும் இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் வகையில் இவ்வருடம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையப் போகிறது. தமிழ் பேசும் இனத்தைச் சேர்ந்த மங்கையரும் நம்மாலானவற்றைச் செய்து நமது மொழியையும் இனத்தையும் காக்கும் பணிக்கு உதவ வேண்டுவது அவசியமாகிறது.

தேர்தற் காலங்களில் மங்கையர் சங்கம் பகுதியில் பலப்பல மாற்றங்கள் இடம் பெறும். சில சகோதரிகள் இன விடுதலைப் போருக்கு ஏற்ற கருத்துக்களையும் இப்பகுதிக்கு இனிமேல் நல்கலாம். அடுப்பூதும் பெண்களுக்கு அரசியல் ஏது? என்று நாம் வாழா விருக்கலாகாது. நமது மொழிக்கும் நமது இனத்துக்கும் ஏற்ற பணி புரிய நாம் தயார் என்பதை 'மங்கையர் சங்கம்' மூலம் வெளிக்காட்டுவோமாக.

சுருக்கமாகவும் தெளிவாகவும் உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.

—செல்வி அக்கா.

## மங்கையர் சங்கம்

# நீங்காத வடு

தாயின் மடியில் தவழ்ந்து விளையாடிய காலம் முதல் தருமனின் பிடிவாத குணம் தனியானது. அந்தப் பிடிவாத குணத்தை பரீட்சித்துப் பார்க்கும் வாய்ப்பை அவனுடைய நண்பர்கள் அன்று அவனுக்கு அளித்தனர்.

வெள்ளிக்கிழமை பள்ளிக்கூடம் முடிந்ததும் நண்பர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டனர். பரீட்சைகளும் முடிவடைந்து விட்டன. நிம்மதியாக அடுத்த புதன்கிழமைக்குப் பின்னர் வீடுகளில் ஓய்வெடுக்கலாம். ஆனால் பள்ளிக்கூடத்தை விட்டுச் செல்லுவதற்கு முன்னர் நீங்காத நினைவாக நின்று நிலவக்கூடிய ஒரு குறும்பு செய்தாக வேண்டுமே!

தருமனின் பிடிவாத குணத்தையே அம்முறை குறும்புக்கு ஏற்ற வாய்ப்பாகப் பயன்படுத்தும் திட்டத்தை பாலன் கொண்டு வந்தான். தருமனின் பிடிவாதத்துக்கு இலக்காக விருப்பவள், தெரு மூலையில் புதிதாக வந்து குடியேறியிருக்கும் பொலீஸ் இன்ஸ்பெக்டரின் மகள் லலிதாதான். அப்பாவைப் போலவே பெண்ணும் ராங்கிக்காரி. எப்பொழுதும் சிடுசிடு என்றே இருப்பாள். எவரிடமும் இன்முகம் காட்டுவது அவள் சுபாவத்திலேயே இல்லை.

நீண்ட கதை

அப்பேற்பட்ட லலிதாவின் தலையிலேயுள்ள இரு பின்னல்களின் ரிபன்களையும் திங்கட்கிழமை தருமன் பறித்து எடுத்து விடவேண்டும். அதுவும் நண்பர்கள் அனைவருக்கும் முன்னிலையிலேயே நடைபெற வேண்டும். இதுதான் தருமனுக்கு விடுக்கப்பட்ட கட்டளை. தருமனும் ஒப்புக் கொண்டு விட்டான்.

திங்கட்கிழமை வழக்கத்துக்குமாறாக அதிகாலையில் சகலரும் பாடசாலைக்கு முன்னால் திரண்டு விட்டனர். அதோ, லலிதாவும் பள்ளிக்குப் புறப்பட்டு விட்டாள். வழக்கமாக அவள் தனியே தான் பள்ளிக்கூடம் போவாள்.

அமைதியாக நின்ற நண்பர்கள், தருமன் லலிதாவின் பின்னலிலிருந்து ரிபனை வெற்றியுடன் உருவி எடுத்தவுடனே ஆரவாரித்து அல்லோலகல்லோலப்பட்டனர். லலிதாவோ இலகுவில்விட்டு விடவில்லை. ஒரே தாவில் தருமனின் கையைக் கடித்து விட்டாள். வேதனை தாங்காமல் ரிபன்களை பறிகொடுத்து விட்டான் தருமன்.

தருமனின் உறுதியும் பிடிவாதமும் தளர்ந்து போய் விட்டது. நண்பர்களின் கேலியும் கிண்டலும், லலிதாவின் பற்கள் கொடுத்த வேதனையும் அவனை அழ வைத்து விட்டது. ஓவென்று அழ ஆரம்பித்து விட்டான்.

பள்ளிக்கூடம் ஆரம்பமாவதற்கு அறிகுறியாக மணி அடித்தது. நண்பர்களுடன் நான்காம் வகுப்பறையை அடைந்து தன் இருப்பிடத்தில் அமர்ந்து கொண்டான் தருமன். எதிரேயிருந்து அவனைப் பார்த்துக் கேலிசெய்த லலிதாவை அவன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பத்து வயதான தருமனின் நீங்காத நினைவாக அவனுடைய கையிலே ஏற்பட்ட வடு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

—விஜயா

# துரைரத்தினத்தின் பணி

சூறுவளியினால் வடபகுதியிலுள்ள மீனவர்கள் பலர் கடலில் சிக்கியுள்ளார்கள் என்ற செய்தி பரவியதும் பருத்தித்துறை முன்னாள் பிரதிநிதி திரு. க. துரைரத்தினம் அவர்களும் மல்லாகம் வழக்கறிஞர் திரு. சு. நடராசாவும், வல்வெட்டித்துறையிலுள்ள இயந்திரப் படகுகளின் உதவியை நாடினார்கள். இவர்களின் வேண்டுகோளை ஏற்று படகுகளின் சொந்தக்காரர்கள் காணாமற்போன மீனவர்களைத் தேடும் முயற்சியில் முழுமனதுடன் ஈடுபட்டனர். திரு. க. துரைரத்தினமும், திரு. சு. நடராசாவும் ஒரு வள்ளத்தில் சென்று கடலிற் தேடுதல் நடாத்தினார்கள். பின்னர் திரு. துரைரத்தினம் காரைநகரிலுள்ள கடற்படையினரின் இயந்திரப்படகில் தனுஷ்கோடி சென்று அக்கரையில் சிக்கிய பிரேதங்களைப் பார்வையிட்டுத் திரும்பினார். வரும் வழியில் கடலில் மிதந்த ஒரு சடலத்தையும் எடுத்துவந்தனர்.

# கிடுகிடுக்க யானைவெடி!

பாராளுமன்றத்தில் திருவாளர்கள் சி. சுந்தரலிங்கம், ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோர் இருந்திருந்தால் தமிழ் அரசாங்க ஊழியர் பற்றிய பிரச்சினையில் பாராளுமன்றம் கிடுகிடுத்திருக்கும் என்று திரு. மு. சிவசிதம்பரம் ஒரு கூட்டத்தில் பேசியுள்ளார்.

"பாராளுமன்றத்தைக் கிடுகிடுக்க வைத்து தமிழர் உரிமை பெறலாம் என்றால் பாராளுமன்றத்திற்குள் வைத்து வெடி கொழுத்த வேண்டியது தானே! அதிலும் கைக்குண்டைப் போட்டால் உயிருக்கு ஆபத்து. ஆகவே நல்ல பெரிய யானைவெடியை ஒவ்வொரு நாளும் பாராளுமன்றத்திற்குள் வைத்துக் கொழுத்தினால் பிரச்சினை தீர்ந்தது. பின்னர் தமிழுரிமைக்காக வெளியில் போராட்டம் நடத்தத் தேவையில்லை. இதுதான் தமிழுரிமை பெற தமிழ்க் காங்கிரஸ் காட்டும் வழி" என்று வெடிகள் தயாரிக்கும் நிபுணர் ஒருவர் நமது நிருபரிடம் கருத்துதெரிவித்தார்.

# இறையும் மறவேனே!

—புரட்சிக்கமால்—

என்னுட லாவி கலந்துகு லாவி
இலங்குவ தென் தமிழே—வையம்
தன்னொடு பிறந்து, வான்புக ழுழந்து
தளிர்த்தது மென்தமிழே—அதன்
பொன்னெழில் தாங்கி எண்ணுயர் ஞானம்
பொலிந்தது மென்தமிழே—அதற்(கு)
என்னுயி ரீந்தும் கண்ணென ஓம்ப
என்றுந்தவ றேனே—பொல்லா
இன்னல் வரினும் அன்னையை வாழ்த்த
இறையும் மறவேனே!

கொஞ்சு மிளமையில் கூடி மகிழ்ந்து
குலவிய தென் தமிழே—அன்னை
பிஞ்சு வயதினில் மதலைகள் சிந்தி
பெருக்கிய தென் தமிழே—உமறின்
நெஞ்சிடை வாய்ந்து செஞ்சொலி லாய்ந்த
'சிறு' என் தமிழே—கொல்லும்
நஞ்சையும் தேனாய் நடத்திடும் காசிம்
நா நலம் என் தமிழே—பொல்லா
இன்னல் வரினும் அன்னையை வாழ்த்த
இறையும் மறவேனே!

ஆலிம்புலவ ரகத்திடை இன்பம்
ஆர்த்தது மென் தமிழே—ஞானம்
பாலித் துதயம் போக்கிய குணங்குடி
ஞானிய ரென் தமிழே—போற்றும்
வேலிப்படை யென விளங்கிய பிச்சை
இபுறுகி மென் தமிழே—தூய்மை
காலித் தருளும் 'நாகைக் கலம்பக'
நாவல ரென் தமிழே—பொல்லா
இன்னல் வரினும் அன்னையை வாழ்த்த
இறையும் மறவேனே!

செந்தமிழ் வானோர் இந்தினை நேரும்
நெய்னு ரென் தமிழே—வேத
சிந்தைய "ராரிபு நாயக" மீந்த
செல்வரும் என் தமிழே—நூறு
விந்தைகள் கணத்தே விளைத்திடு செய்கு
தம்பிய ரென் தமிழே—மேலும்
எந்தையர் தாவுத் சா,திருப் பணியால்
இலங்குவ தென் தமிழே—பொல்லா
இன்னல் வரினும் அன்னையை வாழ்த்த
இறையும் மறவேனே!

சிந்தை அரும்புகள் விந்தை மலராய்ச்
செழித்தது மென் தமிழே—முன்னோர்
பந்தங்களியப் பயந்தவை யாவும்
பரந்தது மென் தமிழே—இன்று
தந்தையர் வழியாய் தளிரும் பணிகள்
தழைப்பது மென் தமிழே—நாளை
செந்தமிழ் மரபாய்ச் சிந்தனை பெருக்கும்
செல்வரு மென் தமிழே—பொல்லா
இன்னல் வரினும் அன்னையை வாழ்த்த
இறையும் மறவேனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'




**ந. தங்கேஸ்வரி, ஏருவூர்**

கே: வாழ்வதனலாய பயனென்ன?

ப: இறப்பதை விட வாழ்வதில் பயனுண்டு. இறப்பதில் எத்தகைய பயனுமில்லையாதலின் வாழ்வதே சிறப்பு.

ஃ

**வி. ஆர். அருள், வவுனியா**

கே: சுந்தர் அறிக்கைவிட்டிருக்கிறரே! வாசித்தீர்களா?

ப: தேர்தல் சீசன் தொடங்கிவிட்டதல்லவா! இனி அவர் அறிக்கைகளை சரமாரியாக அள்ளி வீசுவார். இந்த "அறிக்கை வீரனின்" அறிக்கைகளை வாசித்து, வாசித்து புளித்துப் போய் விட்டதால், அவரது அறிக்கைகளைப் பற்றி யாருமே (ங்களவர் உட்பட) இன்று கவலைப் படுவதாயில்லை. இந்த அறிகைகளை யார்தான் இன்று மதிக்கிறர்கள்?

ஃ

**எல். ஏ. ரகீம், யாழ்ப்பாணம்**

கே: திரு. பொன்னம்பலத்தைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பினல் பாராளுமன்றம் அதர்ந்து போகும் என்று பழைய உடுப்பிட்டியார் கூறியிருக்கிறரே பாராளுமன்றத்தை அதிர வைக்க வேறு வழி கிடையாதா?

ப: ஏன் கிடையாமல்? இரண்டு கப்பல் வெடியை வாங்கிக் கொழுத்தி விட்டால் பாராளுமன்றக் கட்டடம் அதிர் அதிரென்று அதிர்ந்துவிடுமே! போயும் போயும் இதற்காகவா பொன்னம்பலத்தை அனுப்பி வைப்பது? எதற்கும் நீர் ஒருமுறை அந்த பழைய உடுப்பிட்டிப் பேர் வழியைச் சந்தித்து பாராளுமன்றத்தை அதிர வைத்துவிட்டால் சிறுபான்மையோரின் உரிமைகள் அனைத்தும் கிடைத்துவிடுமா என்பதைக் கேட்டறிந்து எனக்கு எழுதுவீரா?

ஃ

**எம். சி. அந்தோனிப்பிள்ளை, யாழ்ப்பாணம்**

கே: திறமையான மதி நுட்பம் மிகுந்தவர்களைத் தேர்ந்தெடுத்தால் பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் கிடுகிடுக்கும் என்று தனிப்பெருந் "தலைவர்" யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தில் கூறினரே. இக் கிடுகிடுப் பேச்சுப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: அவர் உடனடியாக ஒரு "கிடு கிடுப்பான் கட்சி"யை ஆரம்பித்து, திறமையான சில குடுகுடுப்பாண்டிகளைத் தெரிவு செய்து அனுப்பினல், அவர்கள் பிரதமரின் காலைக் கையைப் பிடித்து அமைச்சரவையுள் நுழைந்து சதா "கிடுகிடுத்து"க் கொண்டிருப்பார்களே! அந்தச் சுருக்கமான வழியை விட்டு ஏன் இந்த "ஸ்டன்ட்" சாகசங்கள்?

ஃ

**குமாரச்செல்வன், ஏழாலை மேற்கு**

கே: யாழ். முற்றவெளிக் கூட்டத்தில் தந்தை செல்வா'வுக்கு 10 நாள் தவணைகொடுத்த "திறமைசாலித் தலைவரைப் பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

ப: சகலதும் அறிந்த, சர்வ வல்லமை பொருந்திய சர்வேசுவரனைப் போலல்லவா பேசுகிறர் இந்தத் தலைகனத்த மனிதன். தமிழரசுத் தலைவருக்கு தவணை கொடுக்க இவர் எந்த ஊர் சர்வாதிகாரி? ஜனநாயகம் பற்றி பேசினலும் தானென்ற அகங்காரமும் சர்வாதிகாரப் போக்கும் இன்னும் அவரை விட்டுப் போகவில்லையே!

கே: பச்சோந்திக்கும், முற்போக்கு என்று கூறும் கும்பலுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமை என்ன?

ப: பச்சோந்திக்கு 4 கால். முற்போக்கு 2 கால். இது வேற்றுமை. அது அடிக்கடி நிறத்தை மாற்றும். இது அடிக்கடி கொள்கையை மாற்றும். இது ஒற்றுமை.

கே: கொழும்பு தெற்கில் என்றல் வீட்டிலிருந்தே வெல்லலாம் என்று கூறும் திறமைசாலி, ஏன் யாழ். நகருக்குக் கஷ்டப்பட்டு வந்து, போட்டியில்லாமல் அனுப்புங்கள் என்று ஓலமிடுகின்றர்?

ப: எல்லாம் வெறும் "கப்சா", யாழ். நகருக்கு வந்து வெறும் "ஜம்பம்" அடித்திருக்கிறர். கொழும்பு தெற்கில் நின்றல் மண் கவ்வுவதுடன் மூக்கும் உடைபட்டு போகுமென்பது அவருக்குத் தெரியும்.

கே: 'திறமைமிக்கவர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்புங்கள்' என ஒரு பழைய குரல் யாழ்-நகரில் கேட்டது. ஓரணியில் நின்று உரிமைப் போரைப் பலவீனப்படுத்த முழு, அரை, கால் பெறும் திறமை மிக்கவர்களையா?

ப: காட்டிக் கொடுப்பதற்கும் ஒரு "திறமை" வேண்டுமல்லவா? பெரிய சேனநாயக்காவின் பாதாரவிந்தங்களில் சரணடைவதற்கும் ஒரு "மதி நுட்பம்" வேண்டும். அத்தகைய "திறமைமிக்க" கோழைகளைத்தான் அந்தக் குரல் குறிப்பிடுகிறது.

> **திருவாளர் குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் விஞக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ஃ

**'தமிழன்', எட்டியாந்தோட்ட.**

கே: இதுகாலவரையும் 'தனிப்பெருந் தலைவரை' மறந்திருந்த முன்னுள் உடுப்பிட்டி பா. உ., இப்பொழுது அவருக்காக பரிந்து பேசுவதேன்?

ப: திடீரென அவரை நினைவுவந்துவிட்டது. ஆனுல் தேர்தலில் மண் கவ்வியதும் மறந்துவிடுவார்.

ஃ

**வெ. சுப்பிரமணியம், கொட்டாஞ்சேனை**

கே: அம்மையார் பதவிக்கு வந்த இந்த ஐந்தாண்டு காலத்திற்குள் இந்நாட்டை சீர்குலைத்து விட்டாரே. இன்னும் ஏன் சில மூட நம்பிக்கையாளர்கள் அவரின் கொள்கையைப் பின் பற்றுகிறர்கள்?

ப: காரணத்தை நீங்களே! கூறிவிட்டீர்களே! அதுதான் மூட நம்பிக்கை.

ஃ

**எஸ். என். கே. பாலசுந்தரம், பதுளை**

கே: ஏழைக்கும் பணக்காரனுக்கும் சமநிதி எங்கே கிடைக்கும்?

ப: ஏழையென ஒருவன் இல்லாத ஆட்சியில்...!

ஃ

**அக்கரையூர் ஆதம், அக்கரைபபற்று**

கே: எதிர்வரும் தேர்தலில் யு என். பி. யின் கதி என்னவோ?

ப: தற்போது கூறுவதற்கில்லை. தேர்தல் காற்று வீசும் திசையை அவதானித்து பெப்ருவரி மாதக் கடைசியில் கூறக் கூடியதாயிருக்கும். தற்போதைய நிலையில் கிராமாந்தரப் பகுதிகளில் அக் கட்சிக்குப் போதிய ஆதரவு இன்னும் திரளவில்லை என்றே தெரிகிறது.

ஃ

**ஆர். டி. எஸ். ஹமீத், திருமலை**

கே: சுந்தரர் இவ்வாரம் விடுத்துள்ள ஓர் "அனுமார் வால் அறிக்கை"யில் தமிழரசுத் தந்தையைத் தனிப்பட்ட முறையில் தாக்கியுள்ளாரே, ஏன்?

ப: தமிழரசுத் தந்தைக்கும் சுந்தரருக்குமுள்ள வித்தியாசங்களில் அதுவும் ஒன்று. தந்தை இதுகால வரை பத்திரிகைகளுக்கு விடுத்த எந்த ஒரு அறிக்கையிலும் எந்த நபரையும் தனிப்பட்ட முறையில் தாக்கியதே கிடையாது. அரசியலில் நேர்மையையும் ஒழுங்கையும் கடைப்பிடிப்பதில் கண்ணும் கருத்துமாயிருக்கும் அவர் அரசியலில் எதிரிகளுக்கு அரசியல் ரீதியாகவே பதிலளித்திருக்கிறர். அந்தப் பண்பாடோ நேர்மையோ சுந்தரரிடம் பூஜ்யம்! கடந்த வாரம் தீவுப் பகுதி எம். பி திரு. நவரத்தினம் ஓர் அறிக்கை மூலம் கொடுத்த சூடு சுந்தரரைக் கதி கலங்கச் செய்துவிட்டது அவருக்குப் பதிலளிக்க முடியாத சுந்தரர் தமிழரசுத் தந்தையைக் கன்னபின்ன என்று தாக்கி தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டார்.

ஃ

**ச. அம்பலவி, அல்வையூர்**

கே: திரு சிவசிதம்பரம் யாழ்ப்பாணக் கூட்டத்தில் பேசுகையில் தென்னிலங்கையில் சனநாயகக் கட்சிகளோடு ஒத்துழைக்கக் கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களைத்தான் அனுப்ப வேண்டுமென்று கூறியிருந்தார். அப்படி அவர் எக்கக் கட்சிகளை கருத்தில் வைத்து இவ்வாறு பேசியிருப்பார்?

ப: ஜே. ஆரின் யு. என். பி., பிலிப் குணவர்த்தனவின் எம். ஈ. பி., இராஜரத்னவின் ஜே. வி. பி. ஆகிய கட்சிகளே அவரது ஜனநாயகக் கட்சிகள். யு. என். பி. ஆட்சிக்கு வந்தால், தனக்கும் தனது அவருக்கும் இரு மந்திரிப்பதவிகளை அடித்துக் கொள்ளலாமென்பதே இந்த ஒத்துழைப்பின் அர்த்தம். இரகசியங்களைக் கண்டு பிடிக்கும் ஓர் "அஞ்சனம்" (மை) என்னிடமிருக்கிறது. அந்தப் போட்டுப் பார்த்ததில், அவருக்கும் அவரது குருநாதருக்கும் பின்னுல் ஐ. தே. கட்சி என்று சிங்களத்தில் நெஞ்சிற் பொறிக்கப்பட்ட ஒரு பெரிய பூதம் நின்று கொண்டிருந்தது கையில் ஒரு பையுடன். அந்தப் பையில் என்னவோ......?

ஃ

**எஸ். எஸ். நாதன், ஏருவூர்-4**

கே: தமிழரசுக் கட்சியை எதிர்த்து தேர்தலில் போட்டியிடுவதில் உதிரிக் கட்சிகள் எல்லாம் கூட்டு சேர்வதன் நோக்கமென்ன?

ப: கைலாசம் போகும் போதும் கூட்டோடு போவது நல்லதல்லவா?

ஃ

**க. இரத்னசிங்கம், கிளிநொச்சி**

கே: அந்தக் காலத்து நாடகத்தில் கணவனை மனைவி 'சுவாமி' என்று அழைத்தார்கள். இந்தக் காலத்து நாடகத்தில் 'அத்தான்' என்று அழைக்கிறர்களே ஏன்?

ப: கணவனேடு மனைவி சரி நிகர் சமானமாகிவிட்டதால்...

ஃ

**வ. இராசையா, தெல்லிப்பழை**

கே: இன்றைய நிலைமையில் திரு. பொன்னம்பலத்தின் பெருமை உமக்கு விளங்குகிறதா?

ப: ஆகா! விளங்குகிறதே அவரது தற்பெருமை! 10 இலட்சம் தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறிக்க உடந்தையாக இருந்த அவரது பெருமையை யார்தான் விளங்கிக் கொள்ளாதிருக்க முடியும்?

ஃ

**சுதந்திரவீரன், ஏழாலை மேற்கு**

கே: வட, கிழக்கில் மீண்டும் மீண்டும் சூறவளி ஏற்படுவதன் காரணமென்ன?

ப: அரசியலைக் கண்டு பயந்து, தோல்வியைத் தாங்க முடியாமல், ஐந்தாண்டுகள் தலைமறைவாக இருந்த தனிப் பெருந் தலைவர்கள் திடீரென மேடையில் தோன்றி "நான் தான் இவ்வுலகத்தில் ஒரே திறமைசாலி" என்று வரட்டு ஜம்பம் அடிப்பது இயற்கைக்குப் பொறுக்கவில்லை. அதுதான் காரணம்.

ஃ

**வே. ஞானப்பிரகாசம், திருப்பளுகாமம்**

கே: எதிர்வரும் தேர்தலில் போட்டியிடத் துணிந்த ஜீ. ஜீ. யை எதிர்த்து வங்கி ஊழியர்கள் பிரசாரம் செய்ய விருப்பதேன்?

ப: வங்கிகளில் பணி யாற்றும் ஊழியர்களிற் பெரும்பாலோர் தமிழர்கள் என்பது தெரிந்திருந்தும், வங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின் போது, அவர்களின் கோரிக்கைக்கு மாருக வங்கி முதலாளிகளுக்குச் சார்பாகப் பேசினராம் இந்தத் "தமிழபிமானி". அந்தத் துரோகம்தான் காரணம்.

## நியாயமான கோரிக்கை

தனிச் சிங்கள மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும் பாராளுமன்றத்தை விடுத்து வெளியே போராட்டம் நடத்துவோம் என்று திரு. செல்வநாயகத்திடம் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் நானும் சொன்னேம். ஆனுல் அவர் ஏற்கவில்லை.

—திரு. சுந்தரலிங்கம்

பொன்னம்பலத்துடன் தானும் அமைச்சராகவிருக்கும்போதே சிங்களம் மட்டும் சட்டம் உருப்பெற்ற இரகசியத்தைத் திரு. செல்வநாயகம் பாராளுமன்றம் சென்றல் கண்டு பிடித்து விடுவாரே என்ற அச்சத்தினுல்தான் போலும் இக் கோரிக்கையை அப்போது விடுத்தார்.

## முத்திரை குத்த...!

ஆசிய கொம்யூனிஸ்ட் நாடு ஒன்று பெருமளவில் இலங்கையில் புதிதாக வெளியிடப்பட்ட ஐந்து சத முத்திரைகளை வாங்கியிருக்கிறது.

—செய்தி

தங்களுடைய வியாபாரப் பொருட்களுக்குச் சந்தை பிடிக்க இம் முத்திரைகளை பொருட்களின் மீது ஒட்டி அலங்கரிக்கப்



போவதாகக் கூறப்படுகிறது.

## இடம் காலி

நியூயோர்க் நகரில் பிச்சைக்காரர்கள் தினசரி ரூபா 130/-வரை சம்பாதிக்கின்றனர். அத்துடன் வரி நீங்கிய நிவாரண நிதியும் ரூபா500/-வரை கிடைக்கிறது.

—செய்தி

நியூயார்க் நகரில் பிச்சைக்காரர்களுக்குரிய இடங்கள் காலியானுல், அந்த இடங்களுக்கு விண்ணப்பிக்க ஏற்றவகையில் இலங்கை அரசாங்க வர்த்தமானியில் விளம்பரப்படுத்த வே[illegible] என்று இங்குள்ள [illegible]மத்துப் பிச்சைக்காரர்களை வழி நடத்தும் 'முதலாளி'கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தோஷமருந்து

கூடிமனையும் 'புளு' காய்ச்சலையும் விரட்டுவதற்குப் புது மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

—செய்தி

உடனடியாக இரண்டு 'கேஸ்' மருந்துகளைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு திரு. சி. சுந்தரலிங்கம் கேட்டுள்ளாராம். ஏனெனில், தேர்தல் காலங்களில் திரு. சுந்தரலிங்கத்தின் ஜீப் வண்டிகக்கும் புகையிலிருந்தும், புழுதியிலிருந்தும் வாக்காளர்களுக்கு சலதோஷம் ஏற்பட்டாலும் அவற்றை நீக்க வாக்காளர்களுக்கு இம் மருந்துகள் விநியோகிக்க.

## அபாய அறிவிப்பு

கடந்தவருடம் இலங்கையில் மட்டும் தெருவிபத்துக்களில் 500க்கும் அதிகமானேர் பலியாகியுள்ளனர்.

—செய்தி

கடந்த வருடம் போக்கு[illegible] இச் செய்தி எடுத்துக் காட்டுகிறது.


# உங்கள் கவலை என்ன?

எந்த விதமான மனக்கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினுலும் மந்திர சக்தியினுலும் தகுந்த நிவாரணம் செய்து கொடுக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப் படமாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசநாயக்க,**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருத எண்ணெய் காரியாலயம்

கம்பளை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அம்மான் அமைக்கும் 'அறிவாளர்' கட்சி

# சில விண்ணப்பங்கள்

தகுதியானவர்கள், திறமையானவர்கள், அறிவாளிகள் போன்றவர்களைக் கொண்ட ஒரு தேர்தல் காலக் கட்சியை அமைக்க அம்மான் உத்தேசித்துள்ளார். திட்டங்கள்பற்றி ஆலோசிக்க முன்னமே சில விண்ணப்பங்கள் வந்துகுவிந்துவிட்டன.

கட்சியில் சேர விரும்புபவர்களின் விண்ணப்பங்களில் காணப்பட்ட பகுதிகளைச் சுருக்கித் தந்துள்ளோம்—உங்கள் பார்வைக்கு.

### தகுதியாளர் இல...1

'பல தவறுகளைச் செய்த நான் சட்டத்தால் குற்றவாளியாக்கப்படாமல் தப்பியுள்ளேன். இத்துறையில் எனக்கு உடந்தையாகவிருந்தவர்கள் அனைவரும் தண்டனை அடைந்து விட்டனர். எனது கெட்டித்தனத்திஞல் நான் தப்பித்துக் கொண்டேன்.

அரசியலில் பல வருடங்கள் புகுந்து பலதரப்பட்ட குத்துக்கரணங்களையும் அடித்துள்ளேன். எனது தகுதியையும் திறமையையும் நான் அமைச்சர் பதவியிலிருந்தபோது நன்ருக நிரூபித்துவிட்டேன். நாட்டின் பத்திரிகைகள் யாவும் எனது அமைச்சில் ஏற்பட்ட ஊழல்களை அம்பலப்படுத்தியுள்ளன. (பத்திரிகையில் வெளிவந்த செய்திகளைச் சேர்த்து ஒரு பெரிய பொதியாகக் கட்டி உங்கள் பரிசிலனைக்கு அனுப்பியுள்ளேன்.)

வாக்குறுதிகளை அள்ளிவீசுவது எனதுவழக்கம். ஆனுல், அவை எவற்றையும் நிறைவேற்ருது விடுவது எனது திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

எந்தக் கூட்டத்திலும் எவரும் என்னிடம் கேள்வி கேட்க முடியாது. உருட்டு விழிப் பார்வை ஒன்றிஞலேயே எல்லோரையும் சுருட்டிவிடும் தகுதி என்னிடம் உண்டு.

இன்னும்எண்ணற்ற தகுதியும் திறமைகளும் உடைய என்னை உங்கள் கட்சியில் சேர்த்துக்கொள்ளும்படி கோருகிறேன்.

### தகுதியாளர் இல...2

நானும் ஒரு குத்துக்கரணப் பயில்வான் தான். ஆரம்பத்தில் நான் ஒரு கொம்யூனிஸ்ட்டாக விருந்தேன். தோழர் கந்தையாதான் எனது மாஜிக் குருநாதர். அவருடன் சேர்ந்து தமிழ்காங்கிரஸ் வாதிகளை குறுகிய மனப்பான்மையினர் என்று திட்டினேன். எனது உறவினர் ஒருவருக்காக சுயேட்சையாகவும்விருந்தேன்,சிலகாலம்.எனதுகுருநாதர் ஒரு தேர்தற் தொகுதியில் கொம்யூனிஸ்ட்டாக போட்டியிட முற்பட்ட போது அவருக்கு ஆரம்பகால உதவிகளனைத்தையும் செய்துவிட்டு நானேஅவரை சுயேச்சையாக எதிர்க்க முனைந்தபெருமையைநானே விளக்க வேண்டியதில்லை

உயிரற்ற ஒரு கட்சியான தமிழ்காங்கிரசில் பின்னர் சேர்ந்துகொண்டு எப்படியோ பாராளுமன்றத்துக்கு நான்மட்டும் வந்துவிட்டேன். பின்னர் மக்களின் கண்களில் மண்ணைத் தூவ தமிழ்

---

அப்பாக்குட்டி அம்மான் அமைக்கும் புதியகட்சியான அறிவாளர் கட்சியில் சேர இப்பகுதியில் தரப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர்களின் யோக்கியதாம்சமுடையோர் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு:-

கட்டுப்பணம் திரும்பப் பெறுவது பற்றி நாம் உத்தரவாதமளிக்கமாட்டோம்.

அம்மான்.

---

பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்குப்பெற்ற கட்சியுடன் ஒட்டி உறவாடினேன்.

இந்தக்கட்சி ஒரு பெரிய போராட்டத்தை நடாத்திய போது, எனது தற்காலக் கட்சித் தலைவரின் திட்டுதல்களையும் வசவுகளையும் பொருட்படுத்தாது நானும் அக்கட்சித் தலைவர்களுள் ஒருவரைப் போல் நடித்தேன். இக்கட்சித் தலைவர்கள் யாவரும் அரசியற் கைதிகளாக்கப்பட்டபோது நான் மட்டும் எனது திறமையிஞலும் தகுதியிஞலும், சந்திரோபாயங்களிஞலும் தப்பித்துக்கொண்டு சுதந்திரமாகச் சுற்றித்திரிந்தேன்.

எனது தந்திரோபாயங்களை இக்கட்சித் தலைமைப் பீடமும் பொதுமக்களும் தெரிந்துகொண்டதும் இப்பொழுது எனது தலைவரைச் சரணுகதியடைந்தேன். அவரும் என்னை ஏற்றுக்கொண்டார். இன்று அத்தவிப் பெரும் தலைவருக்கு இரண்டாவது இடத்தில் இருக்கிறேன்.

இன்னும் தங்களுக்கு எனது தகுதியிலும் திறமையிலும் நம்பிக்கை ஏற்படவில்லையானுல் எனக்கு ஒரு வரவேற்புக் கூட்டம் வைத்துப் பாருங்கள். பேச்சாளர் பட்டியலில் மட்டமாக 102 பேர் பேசுவார்கள் என்று ஒரு விளம்பரத்தை எனது செலவிலேயே அச்சிட்டுத் தருகிறேன்.

இவைபோன்ற பல தகுதிகளைக் காண்பித்து வடக்கிலிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன.

### கற்றுக்குட்டி

கிழக்கிலிருந்தும் சில குத்துக்கரண வீரர்களின் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

முதலாவதாக கிழக்கில் பெரிய பட்டினமாக விளங்கும் ஒரு தொகுதியிலிருந்து ஒரு 'கற்றுக்குட்டி' தனது வீர தீர பராக்கிரமங்களை விபரித்துள்ளது. பணத்தாலும் உடலாலும் பெருத்துவிட்ட ஒருவருக்கு மகனுகப் பிறந்து தறிதலைத்தனத்தில் தன்னிகரில்லாதவனுக வளர்ந்துவருகிறது 'இது.' இடையில் தனது விண்ணப்பத்தை வாபசாக்கிவிடவும் 'இது' எண்ணியிருப்பதால் தற்காலிகமாக விட்டு விடுவோம்.

வடக்கிலிருந்து விண்ணப்பித்தவர்களுடன் இணைந்து நிற்கக்கோரும் மற்றும் மூவருடைய விண்ணப்பங்களில் தலையானது ஒன்றுண்டு.

அறிவூட்டும் ஆசாஞக விளங்கி, ஆசாபாசங்களைத் துறந்து அறநெறியில் செல்லுவதே ஆத்ம ஈடேற்றத்துக்கு வழி என்றிருந்து, பின்பு அரசியலில் பிரவேசித்து அற்பர்களின் கூட்டால் அறிவிழந்து, குடித்து வெறித்து கும்மாளமிட்டு, சாக்கடைகளிலே புரண்டு கிடந்த வீரப் பிரதாபங்களை இவர் வர்ணித்திருக்கிருர்.

பதவியிலிருக்கும் போதே போதை மேலிட்டு பேதை ஒருத்தியின் சூழ்ச்சிக்குள் விழுந்த வரலாற்றையும் கூறி தமது தகுதியை எடுத்துக்கூறுகிருர். அரசியலில் தமக்குள்ள போதையைவிட மதுவியலில் உள்ள போதையே மேல் என்றும் கூறியிருக்கிருர்.

### எட்டப்பர்

அடுத்துவருபவரும்மேலே கூறப்பட்டவருக்குத் தம்பி தான். ஆனுல் அரசியலில் அகரமே தெரியாது என்பதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிருர்.

மீசை நரைத்தாலும் ஆசை நரைக்காது என்பது போல் தனது உடல்தளர்ந்து போய்விட்டாலும் பாராளுமன்றக் கதிரையில் உட்காரும் ஆசை விடவில்லையாம் இவருக்கு. தேர்தல்களில் வேட்பாளராக நின்று நின்று ஏற்பட்ட கடன்களையெல்லாம் அடைக்க இம்முறை மட்டும் ஒரு சந்தர்ப்பம் தந்துவிட்டால் போதும் என்று விண்ணப்பித்துள்ளார்.

'எட்டப்பர்' என்ற பட்டப்பெயர் தமக்குக் கிடைத்த கதை ஒன்றே போதும் தமது திறமையை எடுத்துக்காட்ட, என்று கூறுகிருர்.

### பரிதாபம்!

மற்றுமொருவர், நமது அனுதாபத்துக்குரியவராவார்.பாராளுமன்றம்செல்ல வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும்தான் ஏற்படுகிறது. அந்த ஆசைக்கு இவர் இதுவரை இலக்காகாதிருந்தவர் என்றும் சொல்லமுடியாது. அவருடையஆசையை ஓரளவு தூண்டிவிட்ட பெருமை முன்னுள் அரசாங்க உத்தியோகத்தரையே சாரும்.

திரண்ட சொத்திருந்தும், ஆஸ்தியை அனுபவிக்க யாருமே இல்லை. ஆகவே, தமக்குள்ள 'நகர பிதா' என்ற நாம கரணத்தையே மூலதனமாக வைத்து தேர்தல் களத்தில் குதிக்க முயலுவதாகக் கூறுகிருர். 'பாவம்! கள்ளமில்லா உள்ளத்தவர் சில கயவர்களின் சூழ்ச்சிக்குப் பலியாகிருர்' என்று இவரையிட்டு ஒரு மருமகன் சிபார்சு பண்ணியிருக்கிருர்.

### அங்குரார்ப்பண ஆலோசனைக் கூட்டம்

அறிவாளர் கட்சி அங்குரார்ப்பண-ஆலோசனைக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சில பெரிய தலைகள் சமூகமளித்திருந்தன.

இக்கட்சிக் கொள்கைகள் பற்றிய ஆலோசனைகளின் போது வீரகேசரி ஆசிரியர், டெயிலி மிரர் ஆசிரியர், ஈழநாடு ஆசிரியர் ஆகியோருக்கு நியமன அங்கத்தவர் பதவிகளை வாங்கிக் கொடுப்பதெனை முடிவெடுக்கப்பட்டது. இம் முடிவு எடுக்கப்பட்ட நேரத்தில் கூட்டத்தில் கை தட்டல்களும் கூக்குரல்களும் எழுந்தன. அவற்றை எழுப்பியவர்கள் யார் என்பது தெரியவில்லை. தலைமை தாங்கிய 'தலை' தலையிட்டு ஒன்பது மணிக்குள் குழப்பத்துடன் கூட்டத்தை முடிவாக்கியது.

குறிப்பு:-

கடந்த 13-12-64 திகதி சுதந்திரனில் 'டெயிலி மிரர்' ஆசிரியர் திரு. ரெஜி மைக்கல் யாழ்ப்பாணத் தொகுதிக்கு வேட்பாளராக முன் வருகிருர் என்றுசெய்தி கொடுத்திருந்தோமல்லவா? இப்பொழுது அவர் திரு. பொன்னம்பலத்துக்காக விட்டுக் கொடுத்துள்ளதாக சிலர் பேசிக்கொள்ளுகிருர்கள்.

திரு. பொன்னம்பலத்தின் பிரசாரங்களிலிருந்து யு. என். பி. கட்சியோடு அவர் ஒத்துழைக்கப் போவதாகவே நாம் கருதமுடிகிறது. அடுத்தமுறை ஆட்சியை யு. என். பி. கைப்பற்றி, அதிர்ஷ்டவசமாக திரு. பொன்னம்பலமும் பாராளுமன்றத்துக்கு வந்தால், அவருக்கு அமைச்சர் பதவி ஒன்று கிடைத்தாலும் ஆச்சரியப்படத்தேவையில்லை.

திரு. பொன்னம்பலம் மந்திரியாகும் பட்சத்தில் திரு. ரெஜிமைக்கல் பொன்னம்பலத்தின் வாஸ்பிடி மந்திரியாகலாம் என்றும் கூறப்படுகிறது.

---

# இவ்வாரப் பிரமுகர்

## ஜனுப் எம். எஸ். காதர்

தமிழ் பேசும் மக்கள் என்ற ஒரே அணியில் இந்நாட்டில் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட சகல இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்களும் இணைந்து வாழ வேண்டும் என்ற பெரு நோக்குடன் செயற்படுபவர்களுள் ஒருவராகத் திகழ்பவர் மட்டக்களப்பு நிந்தவூரைச் சேர்ந்த ஜனுப் எம். ஷரீப் காதர் அவர்கள்.

மட்டக்களப்பிலே 'கொழும்பு ஹாஜியார்' என்று வர்ணிக்கப்பட்டு வந்த புகழ் பெற்ற நகை விற்பனையாளரின் மகனுகப் பிறந்த ஜனுப் காதர் மட்டக்களப்பு மத்திய கல்லூரியிலும், சிவானந்த வித்தியாலயத்திலும் கல்வி பயின்ருர். கைத் தொழிலிலும் வர்த்தகத் துறையிலும் பெரும் ஈடுபாடு கொண்டு ஜப்பான், சீனு போன்ற தூர கிழக்கு நாடுகளுக்கெல்லாம் பிரயாணம் செய்திருக்கிருர்.

நிந்தவூரில் இஸ்லாம் மதத்துக்கான சேவைகள் புரிவதில் தலைமை தாங்குபவர்களுள் ஜனுப் காதரும் கண்டிப்பாகக் காணப்படுவார். கடந்த வருடம் மீலாத் ஷரீப் ஒழுங்குகள் யாவற்றையும் ஜனுப் காதர் கவனித்ததுடன் வாராவாரம் பள்ளியில் மார்க்க போதனைகள் நடைபெறுவதற்கான ஒழுங்குகளையும் செயதுள்ளார்.

சகல மக்களுடனும் சரளமாகப் பேசவும், வேண்டிய உதவிகளை வேண்டிய போது வேண்டியவருக்குச் செய்யவும் வல்லவர் ஜனுப் காதர்.

ஜனுப் காதர் தமிழரசுக் கட்சியுடன் நீண்ட காலமாகத் தொடர்ப்பு கொண்டு பணி புரிந்து வந்திருக்கிருர். எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொத்துவில் தொகுதிக்கு ஜனுப் காதர் தமிழரசுக் கட்சி வேட்பாளராகத் தோற்றுகிருர்.

அவருடைய சேவையை பொத்துவில் வாழ் மக்கள் மட்டுமின்றி, இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் பெறும் வாய்ப்பினை பொதுத் தேர்தல் அளிக்கும் என்று நம்புகிருேம்.

---

## நீர்கொழும்பு வாலிபர்களின் புயல் நிவாரண உதவி

கோரப்புயலில் சிக்கித் தவித்த வடக்குக் கிழக்கு மாகாண மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியில் நீர்கொழும்பு வாலிபர் முற்போக்குச் சங்கமும் ஈடுபட்டுள்ளது. நான்கு மூடை அரிசியும், 100 தேங்காய்களும், இருபொட்டலம் துணி மணிகளும், ரூ 170 ரொக்கமும் சேர்த்து கொழும்பு அதிமேற்றிராணியார்மூலம் புயல் நிவாரணத்துக்கு இச்சங்கம் அனுப்பியுள்ளதாக செயலாளர் அறிவித்துள்ளார்.

---


**வேல் படை மருந்து**

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை, தழுவணி, பித்தவெடிப்பு, நாட்பட்ட சுக்கூஸ்பத்று, தண்ணீர்கடி, கரப்பான்

முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் செலவு வேறு

தயாரிப்பவர்கள்:

**S. P. S. ஜெயம் அன் கோ.,**

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,**

34, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்குச் செய்த நம்பிக்கைத் துரோகம்

## திரு. சிவசிதம்பரம் கூண்டில் நிறுத்தப்படுகிறார்

கரவைச் சோமு

**உடுப்பிட்டித் தொகுதியின் முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரத்தின் அரசியல் நடவடிக்கைகள் பொது மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினுல் அதில் ஒன்றும் வியப்பில்லை. சூதுவாதறியாத பொது மக்கள் திரு. சிவசிதம்பரத்தின் நல்லெண்ணத்திலே நம்பிக்கை வைத்தால் அதற்காக அவர்கள் மீது குறை கூற முடியாது.**

**தமிழ் காங்கிரஸ் உறுப்பினராக கடந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்டாலும் தமிழரசுக் கட்சியினருடன் சேர்ந்து வேலை செய்தார் எனப் பொது மக்கள் நம்பினர். ஏன் அவர் தமிழரசுக் கட்சியில் சேர்ந்தே விடுவார் என்று கூடப் பலர் வீணுன நம்பிக்கை வைத்திருந்தனர். தமிழரசுக் கட்சியினருடன் இணைந்து நடப்பதைபோல் திரு. சிவசிதம்பரம் காட்டிக் கொண்டமையினுல் பொது மக்களிடையே அவர்பால் ஓரளவு நல்லெண்ணம் வளர்ந்தது.**

**ஆனுல், சரியான சந்தர்ப்பம் வந்த வேளை தமது உண்மை உருவை திரு. சிவசிதம்பரம் காட்டி விட்டார். தமிழ் காங்கிரஸ் 'லேபளுக்கு' தலை முழுக்குப் போட்டு விட்டார் திரு. சிவசிதம்பரம் என்று நம்பியிருந்த பொதுமக்கள் தேர்தல் நெருங்கியதும் திரு. சிவசிதம்பரம் மீண்டும் காங்கிரஸ் 'லேபிளை' ஒட்டி கரணம் அடிப்பதையும் கண்டபடி பேசித் திரிவதையும் கண்டும் கேட்டும் அருவருப்புக் கொண்டுள்ளார்கள். அவர் மீது பொதுமக்கள் கொவத்திருந்த நம்பிக்கையும் பொடிப் பொடியாகப் போய் விட்டது.**

அரசியல் அரங்கில் நடைபெறும்நிகழ்ச்சிகளை தூரத்திலிருந்தும் மேலெழுந்தவாரியாகவும் பார்ப்பவர்களுக்கு வெளுத்ததெல்லாம் பாலாகத்தோன்றலாம்.

ஆனுல் அரசியல் துறை அவ்வளவுசுலபமாக அறிந்துவிடக்கூடிய தொன்றல்ல. உள்ளத்தில் கள்ளமும் உதட்டில் வெல்லமும் கொண்டு திரிபவர்கள் ஏராளம்.

பொது மக்களைக்கவர செய்யும் ஒவ்வொரு நடவடிக்கையின் பின்னணியிலும் ஒவ்வொரு சூழ்ச்சித் திட்டம் இருக்கலாம். இவற்றையெல்லாம் அரசியலை மேலெழுந்தவாரியாக மட்டும் அறிந்தவர்கள் தெரிந்து வைக்க முடியாது போய்விடும்.

ஆயினும் அரசியலை நுணுக்கமாக ஆராய்வோர்-அரசியல் நிகழ்ச்சிகளை ஊன்றி கவனிப்போர்-வெறும் வெளிப்பகட்டில் நிகழ்ச்சிகளின் பத்திரிகை வர்ணிப்பில் ஏமாந்து விடமாட்டார்கள். உண்மை நிலையைத் தெரிந்து கொள்வார்கள். வேண்டிய நேரத்தில் எடுத்துச் சொல்வார்கள்.

### இலட்சியவெறி அற்றவர்

இது திரு. சிவசிவதம்பரம் உணராதது, அவர் போட்ட அரசியல் தப்புக் கணக்கே. அதற்காக யாரும் வருந்தத்தேவையில்லை-அவரைத்தவிர!

சுட்ட காட்டில் நட்டமரமாக—உயிரிழந்த தமிழ் காங்கிரசின் ஒரே சடலமாக திரு. சிவசிதம்பரம் சென்ற பொதுத்தேர்தலின் பின்பு அரசியல் அரங்கில் பிணமாகக்காட்சி கொடுத்தார்.

தமிழ் காங்கிரசின் 'தனிப் பெருந்தலைவர்' தேர்தலில் தலைகுப்புற விழுந்து விட்டார். காங்கிரசின் வழி தமிழ் பேசும் மக்களுக்கு அழிவு நிலையைத் தவிர வேறெதுவும் காட்டவில்லை. இந்நிலையில் திரு. சிவசிதம்பரம் என்ன செய்வதென்று தெரியாது விழித்தார்.

தமிழினத்தின் அடிமை நிலையைத் தகர்த்தெறிந்து, ஒரு தாயகமும் தன் அரசும் பெறும் குறிகோடனும்-அதை அடைய சரியான நெறியுடனும் இயங்கி வந்த தமிழ் பேசும் மக்களின் விடுதலை இயக்கமான தமிழரசுக்கட்சி 1960ம் ஆண்டு பெற்றிருந்த அரசியல் கேந்திர நிலையும்-எடுத்து வந்த நடவடிக்கைகளினுலும் மக்கள்மனதில்பெற்றிருந்த மதிப்பும்-திரு. சிவசிதம்பரத்துக்கு ஒரே வழியை-சரியான வழியைச் சுட்டிக்காட்டின திரு. சிவசிதம்பரம் தமிழரசுக்கட்சியுடன் சேர்ந்து விடுவதென்பது தான் அந்த ஒரே வழி. சரியான வழி! ஆனுல் அந்த வழியிலே செல்வதற்கு வேண்டிய யோக்கியதாம்சங்கள் திரு. சிவசிதம்பரம் பெற்றிருக்கவில்லை.

தமிழ் பேசும் மக்கள் விடுதலை பெற்று தமது ஆட்சி தழைத்தோங்கும் தமிழரசு பெற்ருக வேண்டும் என்ற இலட்சிய வெறி திரு. சிவசிதம்பரத்துக்கு அறவே இருக்கவில்லை.

### அறப்போரில் சிவசிதம்பரத்தின் பங்கு

பாராளுமன்றமும் பதவிகளும் பத்திரிகை-விளம்பரங்களும் விடுதலை இயக்கமாகி விடமுடியாது என்பதை அவர் தெரிந்திருக்கவில்லை. விடுதலை இயக்கத்தின் வளர்ச்சி பேச்சில் அல்ல செயலில் தான் உண்டு என்பதும் அவருக்குத் தெரியாமலிருந்தது.

ஆனுல் திக்குத் தெரியாத காட்டில் நின்று திண்டாடியவனைப் போல அரசியலில் குறியும் நெறியுமின்றி கோணங்கித்தனம் செய்து மக்கள் மன்றத்திலிருந்து வெளியேற விரும்பாத திரு. சிவசிதம்பரம் தமது விருப்பமின்றியே தமிழரசுக்கட்சியின் வழி செல்ல வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குள்ளானுர். ஆயினும் உள்ளத் தூய்மையின்றியே தமிழரசுக் கட்சியின் பின் முடவனைப் போல் நொண்டிநொண்டி நடைபோட்டார்.

1961 ம் ஆண்டு தமிழரசுக்கட்சி மக்கள் இயக்கத்தைவலுப்படுத்தி சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதுராக அறப்போர் தொடுத்தது. ஈழத்தமிழகம் ஒன்று திரண்டது. சிங்கள அரசு செயலிழந்தது.

இந்த அறப்போராட்டத்திலே திரு. சிவசிதம்பரமும் கட்சிக்கு வெளியேயிருந்த ஏனைய தமிழர்களைப்போல கலந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அறப்போரில் வவுனியா சிவசிதம்பரம் கலந்து கொண்டதைப்போல அல்பிரட் துரையப்பா கலந்து கொண்டதைப் போல, நிந்தவூர். பொத்துவில் மஜீதுகள் கலந்து கொண்டதைப்போல உடுப்பிட்டி சிவசிதம்பரமும் கலந்து கொண்டார்.

### அரசியற் சதி

அறப்போருக்கான திட்டத்தை தமிழரசு தலைவர்களுடன் சேர்ந்து திட்டவுமில்லை. அறப்போரை ஆரம்பிக்கவுமில்லை. உண்மையில் அறப்போர் ஆரம்பித்து வெற்றிகரமாகநடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது இடையில் வந்து ஒட்டிக் கொண்டவர் தான் திரு. சிவசிதம்பரம்.

அறப்போரில் கொண்ட திரு. சிவசிதம்பரம் எந்த அளவுக்கு தமிழரசுக்கட்சியுடன் உள்ளத் தூய்மையுடன் இணங்கி நடந்தார் என்று ஆராய்ந்தால் அணுவளவும் இல்லையென்று இப்போ அடித்துக் கூறலாம்.

அறப்போர்க் காலத்தே தமிழரசுக்கட்சியின் மூவர்ணக்கொடிக்கீழ் போராட திரு. சிவசிதம்பரம் இணக்கம் தெரிவிக்கவில்லை. கறுப்புக்கொடியின் கீழ் போராடத்தான் மக்களை அழைத்தார். அறப்போர் காலத்தே திரு. சிவசிதம்பரம் பிறரைப்போல ஒரு சாதாரண அறப்போர் வீரனுகவே இருந்தார். ஆனுல் தமிழரசுக் கட்சிக் கொடியை அவர் மிகச் சாதுர்யமாகத் தட்டிக் கழித்தார்.

அறப்போர்வீரர்களை அறவழி சந்திக்க முடியாது போய்விட்ட சிங்கள ஏகாதிபத்திய அரசு அடக்குமுறைச்சட்டத்தை அள்ளி வீசி-தலைவர்களை தடுப்புக் காவலில்வைத்து-தமிழ்ப்பிரதேசத்தை இராணுவ ஆட்சியின் கீழ்க்கொணடு வந்த பின்புதான் திரு. சிவசிதம்பரம் நாடறிந்தவரானுர். கண்ட கண்டவர்களையெல்லாம் கண்ணிவைத்துப் பிடித்து தடுப்புக்காவலில் வைத்த அரசு திரு.சிவசிதம்பரத்தை எதுவும்செய்யவில்லை. தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளன் என்று கூறிக்கொள்ளும் அன்றைய யாழ். முதல்வர் திரு. துரைராசாவை தடுப்புக்காவலில் வைத்த அரசு ஏன் சிவசிதம்பரத்தை தடுப்புக்காவலில் வைக்கவில்லை? அதே நேரத்திலே இதர தலைவர்கள் சிறைச்சாலையில் வாடிய வேளை திரு. சிவசிதம்பரம் எவ்வித இடர்ப்பாடுமின்றி தமது நடவடிக்கைகளைமேற்கொள்ளக்கூட சிறிமாவின் இராணுவ ஆட்சி தடையாக இருந்ததில்லை.

இதைத் தமிழ்பேசும்மக்கள் நன்ருக சிந்திக்க வேண்டும். ஏனெனில் இதன் பின்னணியிலும் பெரிய அரசியல் சதியின் நிழல் தெரிகிறது. உண்மையைக் காலங்காட்டி விட்டதென்றே சொல்லலாம்.

### மாநாடும் பாதயாத்திரையும்

தடுப்புக் காவலிலிருந்த தமிழரசுத் தலைவர்கள் திரு. சிவசிதம்பரத்தையும் இணைத்து அரசியலைக்கவனிக்கும்படி வெளியிலிருந்தகட்சி உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, கட்சியின் அமைப்பு அவரை ஏற்றுக்கொண்டது. அவரும் கட்சியின் அமைப்பை பயன்படுத்தி தம்மை வளர்த்துக் கொண்டார். கட்சிக்கு எவ்வித ஆக்கத்தையும் அவர் அளிக்கவில்லை.

திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து நடத்திய அரசியல் ஜாலவித்தை தம்மை விளம்[illegible] செய்யவல்ல என்பதை இன்னும் ஒரு சில நிகழ்ச்சிகளிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

தடுப்புக் காவலிலிருந்து தலைவர்கள் வெளி வந்ததைத் தொடர்ந்து கட்சி மன்னுரில் நடத்திய மாநாட்டிற்கு திரு. சிவசிதம்பரத்துக்கும் அழைப்பு விட்டிருந்தது. கேவலம் 'அழைப்புக் கிடைத்தது' என்ற ஒருவரிகூட எழுதிப்போட திரு. சிவசிதம்பரத்துக்கு எண்ணம் வரவில்லை. கட்சி பாத யாத்திரை நடத்திய பொழுது கட்சிக் கொடிக் கீழ் வர மறுத்தார். கட்சி உடுப்பிட்டியில் நடத்திய கூட்டம் திரு. சிவசிதம்பரத்தின் ஆதரவாளர்களால் குழப்பப்பட்டது.

### கறுப்புக்கொடியின் மர்மம்

1964-ம் ஆண்டு சனவரி திங்கள் முதலாம் நாள்-தனிச் சிங்கள அமுலை எதிர்த்து கட்சி ஈழத் தமிழக கச்சேரிகளின் முன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியது. அந்நாளைத் துக்க நாளாகக் கொண்டாடும்படி மக்களை தமிழரசுக்கட்சி கேட்டுக்கொண்டது.

பிற இடங்களிலுள்ள கடைகள் யாவும் அடைக்கப்பட்டு-கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்ட நேரத்திலே-இவருடைய சொந்த ஊரில்-கரவெட்டி, நெல்லியடி கிராமங்களில், கடை அடைப்புக்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படவில்லை. யாழ்ப்பாண ஊர்வலத்தில் பங்கு பற்ற வந்த திரு. சிவசிதம்பரத்துக்கு யாழ்ப்பாண பட்டினத்தில் தான் கறுப்புக் கொடி கிடைத்தது.

அந்தக் கொடியும் ஊர்வலம் முடிந்து திரு. சிவசிதம்பரம் வீடு செல்லும் பொழுது வழியிலேயே மறைந்துவிட்டது.

இவையெல்லாம் திரு. சிவசிதம்பரம் ஆரம்பத்திலிருந்து கட்சியுடன் உள்ளத் தூய்மையின்றியே உறவாடினுர் என்பதைக் காட்ட உதவுகின்றன.

### விருந்தினரும் வீட்டுப்பிள்ளையும்

திரு. சிவசிதம்பரம் கடந்த நான்கு ஆண்டுகள் அரசியல் அரங்கில் ஆடித் திரிந்தாலும் அவர் சுயசிந்தனையில்-எந்த வித அரசியல் திட்டமுமின்றியே இருந்தார். தமிழரசுக் கட்சி வேண்டிய முடிவுகளை எடுத்து ஒவ்வொரு இயக்கத்தையும் நடத்திய பொழுது கட்சிக்கு வெளியே இருந்தவராதலால் அவரைச் சேரும்படி அழைப்பு விடுத்தது. அவரும் வந்தார். தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டார்.

இன்னெரு கட்சி உறுப்பினர் என்ற முறையில்-வீட்டுப் பிள்ளைக்குக் கொடுக்காத கௌரவத்தை விருந்தினருக்குக் கொடுப்பதுபோல தமிழரசுக் கட்சியும் தனது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேடை கொடுக்காவிட்டாலும் திரு. சிவசிதம்பரத்துக்குக் கொடுக்கத் தவறவில்லை.

இப்படி அடித்த யோகத்துடன் திரு. சிவசிதம்பரம் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ள (தமிழர் அரசியல் விடுதலையைப் பெற அல்ல) கையாண்ட சில முயற்சிகள் மிகக் கேவலமானவையாகவும்-அருவருக்கத் தக்கவையாகவும்-அரசியல் நாகரிகமற்றவையாகவும் இருந்தன.

### தமிழ் ஊழியர் பற்றிய விவாதம்

திரு. சிவசிதம்பரம் இவ்வகையில் செய்த "ஸ்டன்டுகள்" பாராளுமன்றத்தில் பல நிகழ்ந்தன. இரண்டு உதாரணங்கள் கூறி விளக்கினுல் புரியும்.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் சம்பந்தமாக திரு. சிவசிதம்பரம் ஒரு தீர்மானத்தை முன் மொழிவதற்கு பாராளுமன்றத்தில் முன்னறிவித்தல் கொடுத்தார். இத்தீர்மானத்தை ஒட்டிய முன்னறிவித்தல் கொடுக்கு முன்பு திரு. சிவசிதம்பரம் ஏனைய தமிழ் பாராளுமன்ற குழுவினரை கலந்தாலோசிக்கவில்லை. தமிழ் அரசாங்க ஊழியர்களை அமைப்பு ரீதியாக ஒன்றுபடுத்தி அவர்கள் உரிமைப் போராட்டங்களை நடத்தி வரும் தமிழ் ஊழியர்களின் தொழிற் சங்கங்களைக் கூட கலந்தாலோசிக்கவில்லை.

வெறும் விளம்பர நோக்கத்தோடு தீர்மானத்தை கொடுத்தார். தீர்மானம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வந்த சமயம் கூட தமது தீர்மானத்துக்கு ஆதரவு திரட்ட எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

ஆனுல், தமிழரசுக் கட்சியை கலந்தாலோசியாமலே திரு. சிவசிதம்பரம் கொடுத்த தீர்மானம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்த தினத்தன்று தமிழரசுக்கட்சி தனது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட செய்தி அனுப்பி முடிந்தவரை எல்லா உறுப்பினர்களையும். பாராளுமன்றத்துக்கு அழைத்தது.

தீர்மானம் விவாதத்துக்கு வந்த சமயம் திரு. சிவசிதம்பரம் முன்மொழிந்து பேசினுர். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திருவாளர்கள் அமிர்தலிங்கமும் தருமலிங்கமும் பேசினுர்கள். விளம்பரம் பெறுவதே முக்கிய நோக்கமாகக் கொண்டவர் தாம் என்பதை மிகத் தெளிவாகக் காட்டி விட்டார் திரு. சிவசிதம்பரம்.

### சிகரட்டும் பாக்குவெட்டியும்

அன்றைய தினம் தாம் கொண்டு வந்த தீர்மானத்துக்குத்தாமே வாக்களிக்கத் தவறிவிட்டார். தமது தீர்மானத்துக்குச் சாதகமாக இயன்ற அளவு வாக்குகளைப் பெறுவதற்கு முயற்சி எடுத்திருக்க வேண்டிய திரு. சிவசிதம்பரம் தாமே வாக்களிக்க நிற்காது வெளியே சென்றுவிட்டார்.

அப்படி அவர் வாக்களிக்காமல் வெளியேற

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் வர்க்க ஒற்றுமை என்பது வெறும் கற்பனை

1964-ல் ஐந்தே கால் இலட்சம் தொழிலாளர்களை, அவர்கள் தமிழ்த் தொழிலாளர்கள் என்ற ஒரே காரணத்தினால் இந்தியாவுக்கு கப்பல் ஏற்றப்படுவதற்கு சாத்திரியும்-சிறிமாவும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை வரவேற்று பாமாலை பாடி புகழ் மாலை சாத்தியது ஏன்? இனவுணர்ச்சி வென்றது, வர்க்கவுணர்ச்சி மறைந்தது தான் காரணம், இல்லையா? என்ற கேள்வியை வர்க்க ஒற்றுமை பற்றிக் குரல எழுப்பிய மராமத்து அமைச்சர் திரு. சம்ளி குணவர்த்தனவிடம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் இக் கட்டுரையில் கேட்கிறார்.

லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனின் இருபதாவது ஆண்டு மாநாட்டையொட்டி மராமத்து அமைச்சர் திரு. சம்ளி குணவர்த்தன தமிழ்த் தினசரி ஒன்றில் ஒரு கட்டுரை வரைந்துள்ளார். அக் கட்டுரையில் அமைச்சர் தொழிற் சங்க இயக்கத்தைப் பற்றிய சில அடிப்படைப் பிரச்சினைகளைக் குறித்து தமது மேலான கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இன அடிப்படையில் அமைந்த தொழிற் சங்கங்கள் அமைச்சரது விமர்சனத்துக்கு இலக்காகி இருக்கின்றன. இன அடிப்படையில் அமைந்த தொழிற் சங்கங்கள் பற்றி அமைச்சர் கூறுகையில்:

## அமைச்சரின் கருத்து

'ஏகாதிபத்திய, பிற்போக்கு வாதிகளும், முதலாளித்துவ சக்திகளும் ஒன்றுதிரண்டனர். தங்களது வழக்கமான முறையைப் பின்பற்றி வர்க்கரீதியில் போராடிய தொழிலாளர்களை இன அடிப்படையில் பிளவு படுத்தினர். இனரீதியான தொழிற்சங்க இயக்கங்கள் உருவாகின. போதிய அரசியல் ஞானமன்ற காரணத்தினால் தொழிலாளர்கள் இந்த முயற்சிக்குப் பலியாயினர். தொழிலாளர்களை இன அடிப்படையில் பிளவு படுத்தியவர்களினால் இப்போது அவர்களை சரியாகத் தலைமை தாங்கி நடத்த முடியவில்லை. எனவே அந்தத் தொழிலாளர்களை மீண்டும் வர்க்கப் போராட்டத்திற்கு வருமாறு அழைக்கிறேன்!'

அமைச்சர் அவர்கள் மலை நாட்டு தமிழ்த்தொழிலாளர்களை மனதில் வைத்து அழைப்பு விடுத்தாலும், ஏனைய தொழிலாளர்களுக்கும் அமைச்சரது அழைப்பு பொருந்தும், பொருந்த வேண்டும் என்றே கொள்ள வேண்டியிருக்கிறது.

இன அடிப்படையில் எழுந்த தொழிற் சங்கங்கள் பற்றி யாரோ, எவரோ கருத்துத் தெரிவித்திருந்தால் நாம் கவலைப்படவோ, கவனத்துக்கு எடுக்கவோ காரணம் இருந்திருக்காது. ஆனால், பொறுப்பு வாய்ந்த அமைச்சர் இந்தக் கருத்தை, அதுவும் இடதுசாரி மாக்சீச கட்சியை சார்ந்த அமைச்சர் ஒருவர் இவ்வித கருத்தை தெரிவிக்கும் பொழுது அதை அலட்சியப்படுத்த முடியாது, அலட்சியப்படுத்தவும் கூடாது.

## இன அடிப்படை ஆட்சி

தொழிலாளர்கள், தொழிலாளர்கள் என்ற காரணத்தினால் வர்க்க அடிப்படையில் ஒன்றுபட வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டு ஒரு நூற்றுண்டு காலம் கடந்து விட்டது. கம்யூனிச சித்தாந்தத்தின் தந்தையான காரல் மார்க்ஸ் அவர்களே இந்த வர்க்கப்பிரிவினையை தொழிலாளி-முதலாளிப் பிரிவினையை முதன் முதலில் வலியுறுத்தியவர்.

தொழிலாளர்கள் எந்த இனத்தையோ அல்லது மதத்தையோ சார்ந்தவர்களாக இருந்தாலும் தொழிலாளர்கள் என்ற ரீதியில் அவர்கள் அமைப்பு முறையில் ஒன்றுபடவேண்டும். அது இயற்கையானதும் தவிர்க்க முடியாததும் என்பது அவர் கருத்து. இதையே வேறு மாதிரிச் சொல்ல வேண்டுமென்றால் அமெரிக்காவிலுள்ள அமெரிக்க இனத் தொழிலாளியும், பிரான்சில் உள்ள பிரான்சு இனத் தொழிலாளியும், சீனாவிலுள்ள சீன இனத் தொழிலாளியும் முறையே அமெரிக்க, பிரான்சு, சீனநாட்டு முதலாளிகளால் சுரண்டப் படுகிறார்கள், அந்தச் சுரண்டலை ஒழித்து தொழிலாளரது ஏகபோக அரசாட்சி ஏற்படுத்துவதற்கு வர்க்க ரீதியில் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு போராட வேண்டுமென்பதே.

சில நாடுகளில் தொழிலாளரது எழுச்சி காரணமாகவும், புரட்சி காரணமாகவும் தொழிலாளரது ஆட்சி ஏற்பட்டது உண்மையே. ஆனால் அமைச்சர் சொல்வது போல அவை வர்க்க அடிப்படையில் அமையவில்லை, இன அடிப்படையிலேயே அத்தகைய தொழிலாளர் ஆட்சி ஏற்பட்டது.

## தேசிய உணர்வு வென்றது

உருசிய நாட்டுத் தொழிலாளர்கள் தாங்கள் உருசியர்கள் என்ற காரணத்தினால் ஒன்று திரண்டு ஜார் ஆட்சியை கவிழ்த்து தங்கள் சொந்த ஆட்சியை நிறுவினார்கள். அப்படியே சீன

வே. தங்கவேலு
பொதுச் செயலாளர்
அ. எ. வி. சங்கம்!

நாட்டுத் தொழிலாளர்களும் சீன இனத்தவர்கள் என்ற காரணத்தினால் ஒன்றுபட்டு சியாங்காய் சேக்கை விரட்டி விட்டு தங்கள் ஆட்சியை அமைத்தார்கள்.

உருசிய—சீன நாட்டுத் தொழிலாளர்கள் தங்கள் தங்கள் நாட்டில் ஆட்சியை கைப்பற்றிய பொழுது, அண்டையிலுள்ள நாட்டுத் தொழிலாளர்கள்-உதாரணமாக ஜெர்மனிய, ஜப்பானிய இனத் தொழிலாளர்கள் இவர்களோடு சேர்ந்து வர்க்கரீதியில் போராட முடியவில்லை. அதாவது அந்தந்த நாட்டுத் தொழிலாளர்கள் அந்தந்த நாட்டு தேசிய இன எல்லைக்குள்ளேயே ஒன்றுதிரண்டார்கள். தேசிய இன எல்லையைக் கடந்து வர்க்கரீதியில் (Class solidarity cutting across racial barriers) ஒன்று திரளமுடியவில்லை.

## உருசிய—சீன மோதல்

அது மட்டுமல்ல 1918 ல் உருசியாவிலும், 1949 ல் சீனாவிலும் தொழிலாளர் ஆட்சி ஏற்பட்டது. இருந்தும் இரண்டு நாடுகளது எல்லைகள் அழிக்கப்பட்டு ஒரே தொழிலாளர் ஆட்சி வர்க்கரீதியில் அமைய முடியவில்லை. அமையவும் மாட்டாது இன்னும் சொல்லப்போனால் உருசிய-சீன இனம் என்ற இனவுணர்வு தலை தூக்கி உருசியாவும்-சீனாவும் பல துறைகளில் மோதிக் கொண்டன முதலாளித்துவ அமெரிக்காவுக்கும், உருசியாவுக்கும் உள்ள நட்புறவுகூட இன்று தொழிலாளர் ஆட்சி நடக்கும் உருசியாவுக்கும்-சீனாவுக்கும் இடையில் இல்லை. சீனாவுக்கு தொழில் நுட்ப பொருளாதார உதவி நல்க உருசியா மறுத்து விட்டது. எல்லைத் தகராறே இரண்டு நாடுகளுக்குமிடையில் இருக்கிறது.

இவை எதைக் காட்டுகிறது? எதை நிரூபிக்கிறது? அமைச்சர் சொல்வது போல் வர்க்க ஒற்றுமையையா? இல்லை. இனப்பிரிவினைக்கு, இனவுணர்ச்சிக்கு அருமையான சான்று உருசிய-சீன மோதல், அமைச்சரது கவனத்துக்கு இன்னொரு உதாரணம்.

[illegible] மனிய நாட்டு தொழிலாளியும் உருசிய நாட்டு தொழிலாளியும் தங்கள் நாட்டுக்கு தேசபற்று இனப்பற்று காரணமாக போரிட்டு இலட்சக்கணக்கில் சாவை தழுவியது எதைக் காட்டுகிறது? மீண்டும் ஒரே பதில்தான், மொழி, நாடு, இனம் இவற்றை அடிப்படையாகக் கொண்ட பற்று வர்க்க ஒற்றுமையுணர்ச்சியை விட ஆழமானது அசைக்கமுடியாதது.

## உள்ளூர் விடயம்

உள்ளூர் தொழிற் சங்க வரலாறறுக்கு வருவோம்.

அமைச்சர் சார்ந்திருக்கிற கட்சியின் நேரடி ஆதிக்கத்துக்குள் இயங்கிற அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், தனிச் சிங்களச் சட்டத்தை வரவேற்று அதற்கு ஆராத்தி எடுத்ததன் மூலம், தமிழ் பேசும் ஊழியர்களை கைவிட்ட—காட்டிக் கொடுத்த வரலாற்றைச்சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஒரு தொழிற் சங்கத்தின் அடிப்படை கொள்கை அதனது உறுப்பினர்களது உரிமைகளுக்கு வாதாடுவது—பாடுபடுவது. தனிச் சிங்களச் சட்டம் சரியோ-பிழையோ அது தமிழ் ஊழியர்களுக்கு புதிய நிபந்தனைகளை, இடார்ப்பாடுகளை விளைவித்தது. வர்க்க ஒற்றுமையில் அக்கறை கொண்டோர் அதை ஏன் எதிர்க்கவில்லை? பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் சார்பில் ஏன் உரிமைக்குரல் எழுப்பவில்லை?

அமைச்சருக்கு சொல்லிக் கொள்கிறோம். அ.லி.செ.சங்கத் தலைமைப் பீடத்லை அலங்கரித்தவர்களை அவர்களது இனவுணர்ச்சி வென்றது! போலிவர்க்கவுணர்ச்சி தோற்றது! அதே நேரத்தில் அந்தச் சங்கத்தை சேர்ந்த தமிழ் ஊழியர்கள் வெளியேறி இன மொழி அடிப்படையில் தனி இயக்கம் கண்டனர். அப்படிச் செய்தவர்கள் படித்தவர்கள். அரசியல் அறிவு வாய்ந்தவர்கள்.

## டில்லி ஒப்பந்தம்

1948-ல் இந்தியத் தமிழ்த் தொழிலாளர்கள் பிரச்சினையை வர்க்கக் கண்ணேட்டத்தில் அணுகிய சமசமாஜிஸ்டுகள்

1948 ல் இந்தியத் தமிழ் தொழிலாளர்கள் பிரச்சினையை வர்க்கக் கண்ணேட்டத்தில் அணுகிய அமைச்சரது கட்சி 1964 ல ஐந்தே கால் இலட்சம் தொழிலாளர்களை, அவர்கள் தமிழ்த் தொழிலாளர்கள் என்ற ஒரே காரணத்தினால் இந்தியாவுக்கு கப்பல் ஏற்றப்படுவதற்கு சாத்திரியும்—சிறிமாவும்செய்து கொண்ட ஒப்பந்தத்தை வரவேற்று பாமாலைபாடி புகழ்மாலை சாத்துவது ஏன்? இனவுணர்ச்சி வென்று, வர்க்கவுணர்ச்சி மறைந்தது தான் காரணம், இல்லையா?

சில வாரங்களுக்கு முன்னர்தானே பார்த்தோம், தமிழ்த் தொழிலாளர்களை வேலைக்கு எடுக்கவேண்டாமென்று அமைச்சரது தொழிற் சங்கத்தை சார்ந்த சிங்களத் தொழிலாளர் திருமலையில் சத்தியாக்கிரகம் செய்தார்களே! அமைச்சர் ஏன் அவர்களுக்கு வார்க்க ஒற்றுமையைப்பற்றி உபதேசம் செய்யவில்லை?

## வர்க்க ஒற்றுமை பழங்கதை

மலைநாட்டுத் தமிழ்த்தொழிலாளர்கள்தான் இந்த வர்க்க ஒற்றுமை மருந்தை உட்கொள்ள வேண்டும், சிங்களத் தொழிலாளர்களுக்கு அதுதேவையில்லை யென்பதுதானே அமைச்சரது மௌனத்துக்குக் காரணம்?

இனவேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமை கதையாய் பழங்கலவாய் போய் விட்டது. தமிழ்த் தொழிலாளர்கள் ஒற்றுமைப் போர்வையில் தங்கள் தனித்தன்மையை இயற்கையான இனவுணர்ச்சியை இழக்க ஆயத்தமாகவில்லை. சுட்ட மண்ணும்—ஈரமண்ணும் ஒன்று சேர முடியாது. இதுவரை இது தெரியாவிட்டால் அமைச்சரும் அவரது குழாமும் இனியாவது தெரிந்து கொள்ளட்டும்!




# ரிஷி
## அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

குறிப்பு

அசல் R. S. பதிமருந்துக்களும், திருச்சினாப்பள்ளி குரு மருந்துகளும் கேசவர்தனி எண்ணெயும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைகள் கிடைக்கும்.

விலை 1 ருத்தல் ரூபா 36/00
விலை ½ ருத்தல் ரூபா 22/00
விலை ¼ ருத்தல் ரூபா 12/00
(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்
63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.
ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.


## மக்கள் குரல்

# தீவுப்பகுதி மக்கள் அறிவிலிகளா?

இன்றைய தமிழ் மக்களின் அரசியல் திறனைக் கிண்டல் செய்வதைப் பார்க்கும் பொழுது வேதனையும் வெட்கமும் அடைய வேண்டியிருக்கிறது.

28-12-64ம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஒருவர் அரசியல் மேடையிலே அரசியலுக்கப்பால் பட்ட, ஒழுக்கமற்ற, கீழ்த்தரமான வாக்கியங்களைப் பிரயோகித்ததை கேட்டதும் அவர்களின் அரசியல் ஞானத்தைக் கண்டு மக்கள் அனுதாபப்பட வேண்டியதாயிற்று. நியாயவாதி எஸ். ஆர். கனகநாயகம் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த குரலில் நடைபெற்ற சத்தியாக்கிரக நிகழ்ச்சியைக் கிண்டல் செய்ததுடன், தீவுப்பகுதி மக்களை அறிவற்றவர்களாகவும், படிப்பற்றவர்களாகவும், ஏமாளிகளாகவும் கருதிக் கிண்டல் செய்தார்.

அவர் பேசும் பொழுது "சத்தியாக்கிரகத்தின் பொழுது தீவுப் பகுதியிலிருந்து ஆண்களையும், பெண்களையும் ஏற்றிக் கொண்டு வந்து அறப்போர் தொடுப்போம் என்று சொல்லிக் கொடுத்தார்கள். அதனை தீவுப் பெண்கள் சொல்லத் தெரியாமல் அறுப்போம்...!" என்று தெருவெல்லாம் கூறி வந்தார்கள், என்று கேலியும் கிண்டலும் செய்தார்.

தீவுப்பகுதி மக்கள் அவ்வளவு கேலிக்கிடமானவர்களா? சுதந்திர எழுச்சி கொண்ட வீரப் பெண்மணிகளின் விடுதலை நாதத்தைக் கேட்டு ஏனோ இத்தகைய கிண்டல்? இதுதானோ படித்த அரசியல்? இதுதானோ பண்பாடு? இவ்வித இழுக்கான வார்த்தைகளை இனியேனும் கொட்டாது இருக்கட்டும்! யாகாவாராயினும் நாகாக்க!

தீவுப்பகுதி மக்கள்,
மு. மாணிக்கவாசகர்,
கே. இராமசாமி,
சு. பரராசசிங்கம்,
க. சாந்தலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னர்கள் செய்ததை இனி மக்களே செய்ய வேண்டும்

## தமிழ் தந்த பயணம் 8

பேராசிரியர் கா. பொ. இரத்தினம்
எம். ஏ., பி. ஓ. எல்.

‘கோலாலம்பூரில் உலகத் தமிழ்மன்றத்தை அமைக்க நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எங்கள் ஆதரவையும் ஒத்துழைப்பையும்நல்குகிறோம். தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இப் பெரும் பணிக்கு நாங்கள் எவ்வெவ் வழிகளில் உதவிசெய்தல் வேண்டும். உடனே அறிவியுங்கள். துடிப்பும் விழிப்பும் நிறைந்த ஆயிரம் ஆயிரம் தமிழ் இளைஞர்கள் உங்கள் ஏவலை எதிர் பார்த்துக் காத்திருக்கிறார்கள்.’ இஃது ஒரு இளைஞர் மன்றத்தினர் அனுப்பிய மடல். பன்னூற்றுக் கணக்கான அன்பர்கள் தங்கள் உதவியையும் ஆதரவையும் எனது பணிக்கு நல்குவதாக எழுதி அறிவித்தனர். பலர் என்னைக்கண்டு நேரில் உறுதி கூறினர். இந்தத் தமிழ் அன்பர்களின் ஆர்வமும் ஆதரவும் என்னைப் பெரிதும் ஊக்கின. எவ்வண்ணமும் உலகத் தமிழ் மன்றத்தை விரைவில் உருவாக்குவதென உறுதி செய்து உழைத்தேன்.

### ஆதரவும் அழைப்பும்

‘தமிழருக்கென ஒரு தனி அரசு இல்லை. இதனால் மன்னர் செய்யவேண்டியதை மக்கள் செய்யவேண்டியிருக்கிறது. தமிழரசு செய்ய வேண்டிய பணியை நீங்கள் மேற்கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு மக்களின் ஆதரவு நிறையக் கிடைக்கும். தளராது முயலுங்கள். ‘எங்கள் ஊருக்கு வருகை தந்து உலகத் தமிழ்மன்றம் பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்துங்கள்...’ இவ்வாறு உலகத் தமிழ் மன்றத்துக்கு ஆதரவு தெரிவித்து என்னைச் சொற்பொழிவு நிகழ்த்த வருமாறு அழைத்த முடங்கல்கள்பலப்பல.

இந்த அழைப்புக்களை ஏற்கவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் நான் இடர்ப்படும் நிலை உண்டாயிற்று. இவற்றுக்குத் தனித் தனி மறுமொழி அனுப்புதலே பெரும் வேலையாயிற்று. எனவே இடர்ப்பாட்டை அறிந்த அகில மலாயத் தமிழர் சங்கச் சிலாங்கூர் மாவட்டப் பேரவைச் செயலாளர் திரு. எஸ். பி. துரை அவர்கள் எனக்கு நல்லுதவி செய்தார்.

ஒரு வேண்டுகோளை அவர் பத்திரிகைகளில் வெளியிட்டார். இதனால் நூற்றுக்கணக்கான மைல் தூரத்திலுள்ள இடங்களுக்கு அடிக்கடி செல்லாமல் விடுமுறை காலத்தில் வட மலாயாவிலும், தென் மலாயாவிலும் இரண்டு மூன்று கிழமைகள் சுற்றுப் பயணஞ் செய்து விரிவுரை நிகழ்த்தும் வாய்ப்பு உண்டாயிற்று. எனினும், கோலாலம்பூரிலும் அயலிலுள்ள இடங்களிலும் உள்ள அன்பர்களின் அழைப்புக்களை மறுக்க முடியவில்லை.

### பகவத் கீதையும் பரிபாடலும்

யான் கோலாலம்பூருக்குச் சென்ற சில நாட்களின் பின் கோவைப் பெரியார் திரு. கிரிதாரி பிரசாத் அவர்கள் மலாயாவுக்கு வருகை தந்தார்.

அவருடைய செந்தமிழ்ச் சொல்மாரி மலாயாவின் பல பகுதிகளிலுமுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களை ஈர்த்து ஈர்த்து இன்புறுத்திற்று. கோலாலம்பூரிலே இலங்கைத் தமிழர் பல பொது நிலையங்களை நிறுவிச் சிறப்புற நடத்தி வருகின்றனர். இவை பெரும்பாலும் சைவ சமயச் சார்புடையன. இவற்றுள் விவேகானந்த ஆச்சிரமமும் ஒன்றாகும். இந்த ஆச்சிரமத்தில் ஒரு பெரு மண்டபமும், விருந்தினர் உறைதற்குப் பலஅறைகளுமுள. இந்த ஆச்சிரமத்தினர் ஒரு பாடசாலையையும் நடத்தி வருகின்றனர். தமிழ் மக்களுக்கு இந்த ஆச்சிரமம் அளப்பரிய தொண்டுகளைச் செய்து வருகிறது. கோலாலம்பூரிலே ‘ஆச்சிரமம்’ என்று கூறினால் எல்லோரும் விவேகானந்த ஆச்சிரமத்தையே எண்ணுவார்கள். இவ்வாறு மக்கள் உள்ளத்தில் மதிப்புக்குரிய இடம் பெற்று விளங்கும் இந்த ஆச்சிரமத்திலே கிரிதாரி பிரசாத்து அவர்கள் தொடர்ந்து பகவத் கீதைச் சொற்பொழிவுகள் ஆற்றினார். சில சொற்பொழிவுகளைக் கேட்டேன். ஒரு சொற்பொழிவுக்குத் தலைமைதாங்குமாறும் ஆச்சிரமத்தார் பணித்தார்கள்.

எனது தலைமை உரையில் பகவத் கீதையின் உயிர்க் கருத்துக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பரிபாடலில் மலர்ந்துள்ளன என்பதை விளக்கினேன்.

“தீயினுள் தெறல் நீ
பூவினுள் நாற்றம் நீ
கல்லினுள் மணியும் நீ
சொல்லினுள் வாய்மை நீ
அறத்தினுள் அன்பு நீ
மறத்தினுள் மைந்து நீ
அனைத்து நீ
அனைத்தினுட்பொருளும்நீ”

என்று மலரும் பரிபாடற் பாட்டு உயர்ந்த தத்துவங்களை நயமுற விளக்கும் அருமையான பாட்டாகும்என்று குறிப்பிட்டேன். நிகழ்ச்சிகள் முடிந்தபின் அன்பர்கள் பலர் இப்பரிபாடற் பாட்டைக் கேட்டுத் தம் குறிப்பு ஏடுகளில் எழுதிக்கொண்டார்கள்.

## தமிழனாகப் பிறக்க விரும்பும் பிறமொழிப் பெரியார்

### வள்ளுவர் விழா

ஆச்சிரமத்தில் பகவத் கீதைச் சொற்பொழிவு நிகழ்ந்தபொழுது வண்ணை முத்தமிழ் மணி மணிபாகவதர் அவர்களுடைய இயலிசைவிருந்து கோலாலம்பூரிலுள்ள மாரியம்மன் கோவிலில் நடைபெற்றது. பாகவதர் அவர்கள் இராமாயணத்தைப் பற்றித் தொடர்ந்து விருந்தளித்தார்.

கோலாலம்பூரில் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நிலையங்களில் இந்த மாரியம்மன் கோவில் முன்னணியில் விளங்குகிறது. இக் கோயிலின் ஓர் உறுப்பான சமயப் பிரசாரசபை திங்கள் தோறும் சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள் முதலியவற்றை நடத்தி வருகின்றனர். இக்கோயில் நிருவாக சபைத் தலைவர் திரு. பழனி வேற்பிள்ளை அவர்கள் பேருள்ளம் படைத்தபெருந் தொண்டர். எமது தமிழ் மறைக்கழகவேண்டுகோளுக்கிசைந்து வைகாசித் திங்களில் வள்ளுவர் விழாவையும் சிறப்புற நடத்திவந்த பெருந்தகையாளர் இவர்.

பகவத்கீதைச் சொற்பொழிவுகள் நிறைவேறிய பின்னர் திரு. கிரிதாரி பிரசாத்து அவர்கள் ஆச்சிரமத்தில் திருவாசகம், அருட்பா முதலியன பற்றியும் சிறப்புரைகள் நிகழ்த்தினார். ‘அப்பர் அருள்வாக்கு’ எனும் பொருள் பற்றி அவர் பேசிய பொழுது தலைமைதாங்கும் பணி எனக்குக் கொடுக்கப்பட்டது.

### தாய்மொழியும் காதல் மொழியும்

கிரிதாரி பிரசாத்து அவர்களின் தாய்மொழி இந்தியாகும். தமிழ் நாட்டிலே வாழ்ந்து தமிழைப் பயின்று தமிழ்நாட்டவர்போலச் செந்தமிழ் பொழியும் ஆற்றல் கைவரப்பெற்றவர்அவர். அடுத்த பிறப்பிலே தாம் தமிழ்நாட்டிலே தமிழனாகப் பிறக்கவே விரும்புவதாகக் கூறுபவர். இவ்வாறு அவர் கூறுவதற்கு தமிழ்மொழியிடத்தும் தமிழிலுள்ள பக்திப் பாடல்களிடத்தும் அவர்கொண்ட மண்டுபெருங் காதலே காரணம். இத்தகைய தமிழ்க் காதல் உடையவரெனினும், அவருடையமனைவியாருக்குந் தமிழ்நன்குதெரியுமெனினும் அவர் மனைவியாருடன் பேசும்பொழுது தம் தாய் மொழியாம் இந்தியிலேயே பேசும் பெரும்பண்பு உடையவர்.

இவருடைய தமிழ்க்காதலும் தாய்மொழிப்பற்றும் எனது தலைமை உரைக்குக் கருவாய் அமைந்தன. கோலாலம்பூரிலுள்ள தமிழர்களிற் சிலர் தாய்த்தமிழைப்போற்றாமல் போலி நாகரிகத்தால் மயக்குற்று அங்கிலத்தை வீட்டு மொழியாக்கிப் பெருமை அடைய முயல்கின்றனர். இவர்கள் நல்ல உள்ளம் படைத்தவர்களெனினும்தமிழின்உயர்வும் உலக நிலைமையும் அறியாதவர்கள். எனவே இவர்கள் உள்ளத்தைத் தொடுதற்குக் கிரிதாரி பிரசாத்து அவர்களின் பண்புகள் எனக்கு வாய்ப்பளித்தன.

தமிழ்மொழியின் இனிமையையும் ஏற்றத்தையும் உணர்ந்தன்றோ கிரிதாரி பிரசாத்து அவர்கள் தமிழ் நாட்டிலேதமிழனாகப்பிறக்க விரும்புகிறார். அஞ்ஞானிகளை மெய்ஞ்ஞானிகளாக்குதற்கு தமிழர்களைக் கிறித்தவ சமயத்துக்கு மாற்றுதற்குத் தமிழகம் வந்த போப் எனும் சமயத் தொண்டரை ஈர்த்து இன்புறுத்தியதும் எம் தமிழ் மொழியன்றோ! தம் கல்லறையில் தம்மை ஒரு ‘தமிழ்மாணவன்’ என்று பொறித்து வைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார் எனின் அவருடைய தமிழ் ஆர்வத்தை அளவிட்டுக்கூறமுடியுமா? இத்தகைய தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இதைப் புறக்கணிக்கலாமா? திரு.பிரசாத்து அவர்களுக்குத் தமிழிலே பெருங் காதல் உண்டெனினும் அவர் தம் தாய்மொழியாம் இந்தியைத் தக்க முறையில் போற்றுவதைப் பாருங்கள்! மலேசியாவிலுள்ள சீன மக்கள் யாவரும் தங்கள் தாய்மொழிக்கே தம் வீடுகளில் முதலிடங் கொடுக்கின்றனர். நம் தமிழர்கள் சிலரோ தமிழை ஒதுக்கி ஆங்கிலத்தை வீட்டு மொழியாக்குகின்றனர். இது பெற்ற தாயை இகழுதலைப் போன்ற பழிதரும் செயலாகும்.




# அன்று மூவேந்தர் ஆற்றிய பணி இன்றும் தொடருகிறது

## பதவிக்கு ஆசையா அன்றி பொருமைக் காய்ச்சலா?

வீராதி வீரர்கள் என்றும் சூராதி சூரர்கள் என்றும் பண்டையத தமிழ் மன்னர்கள் போற்றப்படுகிறார்கள். வாட் போரிலும், விற் போரிலும், மற்போரிலும் ஈடு இணையற்றுத் திகழ்ந்தார்கள் என்று அவர்களுடைய பராக்கிரமங்களை ஏடுகள் வர்ணிக்கின்றன.

இந்த வீர திலகங்கள் தங்களுடைய வீர தீரங்களை யாரிடம் காட்டினார்கள்? எந்த எதிரிகளை மடக்குவதில் இவர்களுடைய விற்களும், வாட்களும், அணிபுரவிபடைகளும் பயன் படுத்தப்பட்டன? எந்த நாட்டு மன்னனை இந்த வேந்தர்கள் தங்கள் படையெடுப்பினால் பணிய வைத்தனர்?

இக் கேள்விகளுக்கு விடை காணுமிடத்தில் நமது முடியுடை மூவேந்தர்கள் விட்ட பணியினை நாம் தொடர்ந்து நடாத்தத் தலைப்பட்டுள்ளோம் என்ற உண்மை புலப்படுகிறது.

தமிழகத்து மன்னரை இழித்துரைத்த வட நாட்டு மன்னர்களாம் கனக விசயரை வென்று, இமையத்தில் வில், கயல், புலி பொறித்து, கண்ணகி சிலைக்குக் கல்லெடுத்து, கங்கையில் நீராட்டி கனகவிசயரின் தலையில் சுமத்தி தமிழ் நாடு கொண்டுவந்த வரலாற்றைத் தவிர முடியுடை மூவேந்தர் எவ[illegible] அந்நியரையும் [illegible] வைத்த வரலாறு உண்டா?

கிடையவே கிடையாது. இப்படியிருக்கையில் சேர சோழ பாண்டிய மன்னர்களின் வீரத்தையிட்டு வர்ணனைகள் எங்கனம் எழுந்தன?

நிலத்தை உழுது நல்ல பயிர் வளர்த்து நாட்டை வளப்படுத்தும் பணியில் சோழன் சிறந்திருப்பான். சோரனின் பெருமையையும் அவனுடைய நாட்டின் வளப்பத்தையும் கேள்வியுற்ற பாண்டியன் பொறாமைத் தீயால் பொசுங்கி சோழனை எதிர்க்க புறப்படுவான்.

—பரணர்—

கலை வளம் சிறக்க கோயில்களை எழுப்பி கடவுளுக்கு அஞ்சலி செய்யும் பணியினை பாண்டியன் கைக் கொண்டு வருகிறான், என்ற செய்தி சேரமன்னனின் காதுகளில் நாராசமாகப் பாயும். யானை குதிரைப் படைகளை நடந்திச் சென்று செருக்களத்திலே பாண்டியனை மோதுவான் சேரன்.

சேர மன்னன் செங்கோலோச்சும் முறை கேட்டு சீறியெழுந்து சினமடங்கப் போர் தொடுப்பான் சோழன்.

இப்படியே தான் மூவேந்தர்களும் தங்களுக்குள் [illegible] ணித்துவந்தனர். தமிழ் மன்னர்களான அவர்கள் தங்களுக்குள்ளேயே பொருமைக் காய்ச்சலை வளர்த்து, ஒருவரை ஒருவர் பொருதி ஒற்றுமைக்கு ஊறு தேடி அந்நியரின் படையெடுப்புகளுக்கு வழி சமைத்தனர். சகோதரர்கள் தங்களுக்குள்ளேயே சண்டையிட்ட சரித்திரமே நமது வீரத்தை விளக்கும் ஏடுகளாக இன்று கிடைக்கின்றன.

பண்டைய மன்னர்களின் தன்மை இன்றும் நம்மை விட்டு அழிந்தொழிந்து போகவில்லை. வாழையடி வாழையாக நமது இரத்தத்திலே ஊறிக்கிடக்கிறது அப் பண்பு. இதனாலேதான் நாமும் இன்று ஒருவரோடு ஒருவர் போரிடுவதிலேயே கண்ணும் கருத்துமாகவுள்ளோம்.

தாழ்வுற்று, இழிவு கண்டு, தவித்துவாடும் தமிழ் பேசும் இனத்தை வாழ வைக்க வழி கண்ட தமிழரசுக் கட்சியின் வளர்ச்சி தமிழ் பேசும் இனத்தைச் சேர்ந்த சிலரிடத்திலேயே பொறாமைத் தீயை வளர்த்து விட்டுள்ளது. தமிழரசுக் கட்சியை வீழ்த்துவதையே தமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வரிந்து கட்டிக் கொண்டு போர் முகாம் அமைக்க முற்பட்டுள்ளனர் ஒரு சிலர்.

தாம் சார்ந்த இனத்துக்கு நன்மை புரிய தியாகத் தீயில் குளித்தெழும் தமிரசுத் தலைவர்களைத் திட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் சொந்தச் சகோதரர்களின் சூரத் தனத்தை யாரிடம் சொல்லி அழுவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1965 ஜனவரி மாதம் 10ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் : 3411 த. பெ. 1183


## தவிர்க்க முடியாத கடமை

"போட்டித் தவிர்ப்பு, ஐக்கிய முன்னணி, திறமை, மதி நுட்பம்" என்று கோஷங்களைக் கிளப்பிவிட்டுள்ளனர் திருவாளர்கள் பொன்னம்பலமும், சுந்தரலிங்கமும். இக்கோஷங்களின் அடிப்படை ஒன்றே ஒன்றுதான். அதுதான் இந்த இருநபர்களும் எப்படியோ பாராளுமன்றத்துள் நுழைந்து கொள்ளுவது.

மேற்கண்ட இருநபர்களுடன் சேர்ந்து தமிழரசுக் கட்சித் தலைவரையும் போட்டியின்றித் தெரிவு செய்தால் உலகம் திடுக்கிடும் என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார் திரு. பொன்னம்பலம்.

பொதுத்தேர்தலில் திரு. செல்வநாயகம் தெரிவுசெய்யப்படுவது நிச்சயம். போட்டித் தவிர்ப்பில்லாவிட்டால் திரு. செல்வநாயகம் தோல்வியடையப்போவதில்லை. திரு. பொன்னம்பலம் இதுவரை காலமும் அரசியல் அரங்கில் அடித்த குத்துக்கரணங்களால் மக்கள் மன்றத்தில் அவருக்குத் தலைகாட்ட முடியவில்லை. ஆத்திரமடைந்த மக்களிடம் வாக்குப்பிச்சை கோரி அதனால் விபரீதங்களை வாரிக்கட்ட விரும்பாத திரு பொன்னம்பலம், போட்டித்தவிர்ப்புமூலம் எப்படியோ பின்கதவால் பாராளுமன்றத்துள் நுழையவே இப்பொழுது மகுடி விளையாடுகிறார்.

1956ம் ஆண்டுக்குப் பின்னர்தான் திரு. பொன்னம்பலத்துக்கு ஒற்றுமை, ஐக்கியம், போட்டித் தவிர்ப்பு போன்ற சொற்களுக்குப் பொருள் தெரிந்திருக்கிறது போலும். 1952ம் ஆண்டின் பொதுத் தேர்தலின்போது இவற்றையிட்டு திரு. பொன்னம்பலம் கனவிலும் கருதியது கிடையாது. அப்பொழுது தமிழரசுக் கட்சி மூன்றாண்டுக் குழந்தையாகத் தவழ்ந்துகொண்டிருந்தது. அது வளர்ந்துவிட்டால் தங்களுக்கு அபாயம் ஏற்பட்டுவிடலாம் என்பதை அன்று உணர்ந்ததனாலேயே, முளையிலேயே கிள்ளி எறிந்துவிட தமது சக்திகளனைத்தையும் ஒன்றுதிரட்டி முயன்றார் திரு. பொன்னம்பலம். தமிழரசுக் கட்சியை முறியடித்துவிட துணிவும் தகுதியும் வல்லமையும் தன்னிடம் உள்ளன என்று அவர் கறுவிக்கொண்டிருந்தார் அன்று.

1947ம் ஆண்டிலும் அதற்குப் பிற்பட்ட காலங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியை யாழ்ப்பாணக் குடாநாட்டில் தலைகாட்டவே விடமாட்டேன் என்று கங்கணம் கட்டிக்கொண்ட திரு. பொன்னம்பலம், திரு. செல்வநாயகத்தை 1952ம் ஆண்டுத் தேர்தலில் தோல்வியடையச் செய்ய, யூ. என். பி. வேட்பாளராக காங்கேசன்துறைத்தொகுதியில் போட்டியிட்ட திரு. சு. நடேசபிள்ளையை தமது சக்திகளெல்லாவற்றையும் திரட்டி ஆதரித்தார் — வெற்றியும் கண்டார்.

அன்று திரு. செல்வநாயகம் அடைந்த தோல்வி தமிழ்பேசும் இனத்தின் தோல்வியேயாகும். திரு. செல்வநாயகம் தோல்வி காண அவர் செய்த துரோகம்தான் என்ன? தமிழ்பேசும் மக்களில் சரிபாதிக்கு மேலான மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளத் தமிழ் மக்களின் குடியுரிமையைச் சூறையாடிய கொடிய சட்டத்தை எதிர்த்துப்பேசியதையும், வாக்களித்ததையும் தவிர அவர் வேறு எவ்வித கெடுதியும் செய்யவில்லையே!

தமிழ்பேசும் மக்களின் விமோசனத்துக்கு பாடுபடவல்லவர்கள் யார் என்பது 1952ம் ஆண்டுக்குப் பின்னர் மக்களுக்கு மெல்ல மெல்லத் தெரிய ஆரம்பித்தது. தமிழரசுக் கட்சி மக்கள் மத்தியில் மகத்தான செல்வாக்குப்பெற்று வளர்ந்தது. சூரியனைக் கண்ட பனிபோல் போலி வேடதாரிகளின் சுய உருவம் மக்களுக்குப் புலப்பட்டதன் அறிகுறி 1956ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில்தோன்றியது. அமோகமான வெற்றியை ஈட்டி தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள் பாராளுமன்றம் சென்றனர். இதன் பின்னரே திரு. பொன்னம்பலம் தன் சுயநிலையை உணர்ந்து, தன் பதவியை ஸ்திரமாக்கிக்கொள்ள ஒற்றுமை, ஐக்கியம்போன்ற போலிக் கவசங்களை அணிய முற்பட்டார்.

இவை பழங்கதை — விட்டுவிடுவோம். இன்றைய நிலையில் திரு. பொன்னம்பலத்தின் போட்டி தவிர்ப்பு சாத்தியமா என்பதனையும் ஆராய்வோம்.

1. தமிழரசுக்கட்சியின் இலட்சியம் சமஷ்டி ஆட்சிதாண்டதே. சமஷ்டி ஆட்சி முறையே சிறந்தது என்பதையும் திரு. பொன்னம்பலம் மனதார உணர்வார். ஆனால், தான் அல்லாமல் வேறொருவர் சமஷ்டிக் கோரிக்கையை விடுத்தமையினால், அது உதவாதது—தமிழ் பேசும் மக்களை படுகுழியில் அமிழ்த்திவிடும் — என்றெல்லாம் கூறத் தொடங்கிவிட்டார். தமிழரசுக்கட்சி திரு. பொன்னம்பலத்துடன் இணைவதானால், தனது அடிப்படை இலட்சியத்தை உதறியெறிந்து விட்டுத்தான் சேரவேண்டும். சமஷ்டியை அடைவதே தமிழரசின் இலட்சியம். சமஷ்டியை எதிர்ப்பதே திரு. பொன்னம்பலத்தின் ஒரே ஒரு அரசியற் கொள்கை.

2. திரு. பொன்னம்பலம் மக்களால் நிராகரிக்கப்பட்டவர். திரு. சுந்தரலிங்கமும் மக்களிடம் அதே தீர்ப்பைப் பெற்றவர்தான். இவ்வாறு அவர்கள் பாராளுமன்றத்துக்குப் போவதை மக்களே தடுத்துவிட்டதால்,போட்டித் தவிர்ப்பு உடன்பாடு மூலம் அவர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்கத் தமிழரசுக் கட்சிக்கு எதுவித உரிமையும் கிடையாது.

3. மேற்கண்ட இருநபர்களும் பாராளுமன்றத்துக்குச் சென்றால் தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கு மாறாகவே தங்களின் "திறமையையும் மதிநுட்பத்தையும்" பயன்படுத்துவார்கள். அவர்களின் கடந்த கால பாராளுமன்ற வாழ்க்கையே அதற்குச் சான்று.

4. போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொண்டாலும் கூட, அவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவார்களென்பதற்கு எத்தகைய உத்தரவாதமும் கிடையாது. ஏனெனில், இடதுசாரிகளும் சுயேச்சைகளும் அவர்களை எதிர்த்துப் போட்டியிடுவார்கள்.

1956ம் ஆண்டுத் தேர்தலில் திரு. பொன்னம்பலம் வெற்றிபெற்றாலும் அவருக்குச் சாதகமாகக் கிடைத்த வாக்குகளைவிட பாதகமாகக் கிடைத்த வாக்குகளே அதிகம். உண்மையில் அதுவும் அவருக்குத் தோல்வியே. அன்று பாராளுமன்றத்தில் முதலாவது அரியணைப் பிரசங்கத்தின் மீது நடந்த விவாதத்திலேயே அவர் தமிழரசுக் கட்சியைத் தாக்கத் தொடங்கிவிட்டார். தமிழரசுத் திருத்தப் பிரேரணைக்கு எதிராகவும் வாக்களித்தார்.

பாராளுமன்றத்தில் தமிழரசுப் பிரதிநிதிகள் பேசிய போதெல்லாம் அவர்களுக்கெதிராகவே பேசிவந்தார் திரு. பொன்னம்பலம். பிரதமர் பண்டாரநாயக்கா தமிழரசுப் பிரதிநிதிகளுக்குப் பதிலளிக்கும்போது, "அவர்களுக்குத் திரு. பொன்னம்பலம் ஏற்கனவே பதிலளித்துவிட்டார் ஆகவே, நான் பதில் கூறத் தேவையில்லை" என்று கூறுவதுண்டு.

1961ல் நடைபெற்ற சத்தியாக்கிரகம் மாபெரும் மக்கள் இயக்கமாகும். கருத்து வேற்றுமைகளை மறந்து மக்கள் அனைவரும் கலந்துகொண்ட இத்தகைய ஓர் இயக்கம் இலங்கை வரலாற்றிலே இதற்கு முன்பு நடைபெற்றதேயில்லை. துரையப்பா, சிவசிதம்பரம் போன்றவர்கள் கூட இதில் கலந்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மக்களின் தொடர்பு அற்றுப்போகுமே என்று அஞ்சி சமசமாஜிகளும் சத்தியாக்கிரகத்தில் ஓரளவு பங்குபற்றினர்.

சிங்கள வகுப்புவாதிகளான திருவாளர்கள் எஸ். டி. பண்டாரநாயக்கா, விஜயபாகு விஜயசிங்க, பாரிஸ்பெரேரா ஆகியோரா சத்தியாக்கிரகத்தை நேரில் பார்த்துவிட்டுமெய் மறந்து தமிழ்பேசும் மக்களுக்காகப் பரிந்து பேசும் நிலையை எய்தினர் என்றால் இச் சத்தியாக்கிரகத்தையிட்டு வேறு என்னதான் கூறமுடியும்!

ஆனால் திரு. பொன்னம்பலமோ, திரு. சுந்தரலிங்கமோ இந்த இயக்கம் எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்ப்பதற்குகூட வரவில்லை. அந்த அளவுக்கு அவர்கள் மக்கள் இயக்கங்களை வெறுப்பவர்கள், மக்களிடமிருந்து பிரிந்து சென்றவர்கள், தியாக உணர்ச்சியற்றவர்கள். கோழைகள்—கோழைகளின் மதிநுட்பமும், திறமையும் அவர்களுக்குத்தான் பயன்படுமேயன்றி, மக்களுக்குப் பயன்படா.

இம்மாதிரியான நபர்களுடன் ஐக்கியமுன்னணி அமைப்பதையோ, போட்டித் தவிர்ப்பு உடன்பாடுகள் செய்வதையோ மக்கள் அனுமதிக்கவே மாட்டார்கள்.

அரிசியிற் கலந்துள்ள கல்லை அகற்றினாலன்றி, அது உணவுக்கு உதவாது. அதேபோன்று தமிழ்பேசும் மக்களின் அரசியல் என்ற அரிசியில் கலந்து கிடக்கும் கல்லுகளான தனிப்பெருந் தலைவரையும் தனிக்காட்டு ராஜாவையும் அவர்களின் சகாக்களையும் பொறுக்கி தூர எறிந்தாலன்றி, தமிழ்பேசும் மக்களின் அரசியல் சீர்பட மாட்டாது. இக்கல்லுகளை தூர வீசிஎறிந்தாலன்றி தமிழ்பேசும் மக்கள் பாராளுமன்றத்தை தங்களின் உரிமைகளுக்காகப் போராடக் கூடிய ஓர் அங்கமாக மாற்றிக்கொள்ள முடியவே முடியாது. இத்தவிர்க்க முடியாத கடமையை தமிழ் பேசும் [illegible] சரிவர நிறை வேற் [illegible]

# தமிழுரிமை முழுங்கி வரும் தீரர்கள் புரிந்த தீவினைகள்

சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்க 50க்கு 50து விகிதம் பிரதிநிதித்துவம் கோரிய திரு. பொன்னம்பலம், திரு. டி. எஸ். சேனநாயக்கா அளிக்க முன்வந்த 40 சதவீதம் பிரதிநிதித்துவத்தையே ஏற்க மறுத்தார். இறுதியாக சோல்பறி அரசியல் திட்டம் 25 விகிதம்தான் சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவம் அளித்தது.

1947ல் முதலாவது பாராளுமன்றம் அமைக்கப்பட்டபோது, 101 பாராளுமன்ற உறுப்பினர்களில் வடக்குக் கிழக்கிலிருந்து 12 பேரும், மலைநாட்டிலிருந்து 8 பேரும் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய பகுதிகளிலிருந்து தமிழ் பேசும் 6 முஸ்லிம் பிரதிநிதிகளும் பாராளுமன்றம் சென்றனர். ஆக மொத்தம் 26 பிரதிநிதிகள் தமிழ்பேசும் பிரதிநிதிகளாகவிருந்தனர்.

தமிழ்பேசும் இனத்துக்கு விரோதமான, சிங்களம் மட்டும் சட்டம்போன்றவற்றை நிறைவேற்ற இப் பாராளுமன்றத்துக்கு வசதிகிடைக்கவில்லை இந்த நேரத்தில்தான் திரு. பொன்னம்பலம் தனது கோரிக்கைகள் எல்லாவற்றையும் பணயம் வைத்துவிட்டுசேனநாயக்கா அரசாங்கத்தில்தஞ்சமடைந்தார். 'மலைநாட்டு மக்களின் நலன்களைப் பாதுகாக்கத் நான் தயங்கமாட்டேன்' என்று மலையகத் தலைவர்களுடன் ஒப்பந்தமும் எழுதிக் கையொப்பமிட்டிருந்தும்கூட அர்ப்ப பதவிஆசை இனத்தையே விலைகூறி விற்கும் அளவுக்கு அவருக்குத் துணிவை ஊட்டியிருக்கிறது.


**3–1–65**
8-ம் பக்கத் தொடர்ச்சி


25 விதம் மட்டுமே பிரதிநிதித்துவம் அளித்த—சோல்பறி திட்டப்படி அமைக்கப்பட்ட முதல் பாராளுமன்றத்தின் மந்திரிசபையில் 50க்கு 50து பிரதிநிதித்துவம் கோரிய திரு. பொன்னம்பலம் அமைச்சரானார்.

## 'பானு'

### தமிழ் பிரதிநிதிகள் குறைந்தனர்

தமிழ்பேசும் இனத்தின் சரிபாதிக்கு மேலான தொகையினரான சுமார் 10 இலட்சம் இந்திய வம்சாவழியினரின் குடியுரிமையைப் பறிக்கும் இந்திய--பாகிஸ்தானிய பிரசாவுரிமைச் சட்டத்துக்குச் சாதகமாக வாக்களித்தார் திரு. பொன்னம்பலம். இதனால் 1947ல் பாராளுமன்றத்துக்கு மலைநாட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 8 தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 1952, 1956, 1960 மார்ச், 1960 ஜூலை ஆகிய நான்கு பொதுத்தேர்தல்களிலும் பாராளுமன்றம் வரமுடியாதுபோய்விட்டது.

தேர்தற் தொகுதி புனர் அமைப்பில் ஆட்சியாளர் கையாண்ட மனிதத்தன்மையற்ற தந்திரோபாயத்தினால் எட்டு தமிழ் பிரதிநிதிகளுக்குப் பதிலாக 12 சிங்கள உறுப்பினர்கள் மலைநாட்டிலிருந்து தெரிவு செய்ய வாய்ப்பு ஏற்பட்டு விட்டது.

50க்கு 50து கொள்கையை தமிழ்பேசும் மக்கள் முன்னிலையில் வைத்து தனிப்பெரும் தலைவரான திரு. பொன்னம்பலத்தின் புத்திக் கூர்மையும் திறமைசாலித்தனமும் செய்த இந்த அரிய கைங்கரியத்தினால் இன்று 13 சத விகிதம் பிரதிநிதித்துவம் தானும், தமிழ்பேசும் இனத்துக்கு இல்லாமற் போய்விட்டது.

### மொழியைக் காக்க...!

மொழியையும் இனத்தையும் காக்கப் புறப்பட்ட திரு. பொன்னம்பலம் அமைச்சர் பதவியிலிருக்கும்போதுதான், தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில்சிங்களவர்களைக் குடியேற்றி, தமிழ்பேசும் இனத்தை ஊடுருவல் மூலம் அழித்தொழிக்கும் திட்டங்களை திரு. சேனநாயக்கா வகுத்தார்.

முஸ்லிம்களும், தமிழ் விவசாயிகளும் பண்டு தொட்டு உரிமையுடன் கூடிக் குளாவி மகிழ்ந்திருந்த பட்டிப்பளை ஆற்றுப்படுக்கை இன்று சிங்களவர்களின் கைக்கு மாறிவிட்டது. கல்லோயா குடியேற்றத்தினால் பூர்வீகத் தமிழ் பிரதேசங்கள் பறிபோயின. இன்று சிங்களவர்களுக்கென அம்பாறையில் ஒரு தனிக்கச்சேரியும், ஒரு தனித் தேர்தல் தொகுதியும் ஏற்பட்டுவிட்டது.

மூதூர் பிரதேசமும் முஸ்லிம்களினதும், தமிழ் மக்களினதும் பூர்வீகச் சொத்து. அல்லை, கந்தளாய் குடியேற்றத் திட்டங்களால் இப் பிரதேசம் சர்வ சிங்களமயமாகிவிட்டது. மூதூருக்கும் கல்குடாவுக்கும் இடையே, ஒரு சிங்களவரைத் தேர்ந்தெடுத்து பாராளுமன்றத்துக்கு அனுப்பக்கூடிய தனித் தேர்தற் தொகுதி விரைவில்

(14-ம் பக்கம் பார்க்க)

### ஒரே பார்வையில்...

- 1956ம் ஆண்டு ஜூன் 5ம் திகதி காலிமுகத்தில் தமிழரசுக்கட்சி நடாத்திய சத்தியாக்கிரகத்தைக் குலைக்க காடையர்களை சிங்களவர்கள் ஏவிவிட்டதை அறிந்துகொண்டு ஒரு கோழையைப் போல் ஓட்டமெடுத்தவர் திரு. பொன்னம்பலம்.
- சிங்கள சிறிப் போராட்டம் நடைபெற்றபோது சட்டத்துக்குப் பயந்து கைதாகாமலிருப்பதற்காக ஒடி ஒளிந்துகொண்டவர் திரு. பொன்னம்பலம்.
- தமிழ்பேசும் இனம் அத்தனையுமே ஒரு குடையின் கீழ் இணைந்துவிட்டது என்று உலகமே போற்றும் அளவில் 1961ம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகம் சான்றாகவிருந்தபோது, எட்டியும் பாராமல், எதுவிதத்திலும் ஒத்துழைப்பும் நல்காமல் எங்கோ பதுங்கிவிட்டவர் திரு. பொன்னம்பலம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திரு. பொன்னம்பலம் புறமுதுகிட்டார்

## சரசுவதி மண்டப கூட்டத்தில் நடைபெற்ற சம்பவம்

**இத் திங்கள் 4-ம் நாள் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் இரு தமிழ் ஊழியரின் முயற்சியால் தமிழரசிக் கட்சியினருடன் திருவாளர்கள் சுந்தரலிங்கம், பொன்னம்பலம் ஆகியோரும் அழைக்கப்பட்டனர். ஒற்றுமை பற்றி இக் கூட்டத்தில் பேசப்பட்டது. ஈற்றில் தமிழ் ஊழியர் ஒருவரின் கேள்விக்குப் பதில் கூற முடியாது திரு. பொன்னம்பலம் புறமுதுகிட்டார். திரு. பொன்னம்பலம் இடை நடுவில் வெளியேறியதால் கூட்டம் அத்துடன் முற்றுப் பெற்றது.**

தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களும் மொழிப்பிரச்சினையும் என்னும் விடயம் பற்றி ஆராய சென்ற 4-1-65 மாலை கொழும்பு சரசுவதி மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு திரு. பொன்னம்பலம், திரு. சுந்தரலிங்கம், தமிழரசுக் கட்சிப் பிரதிநிதியாக மூதவை உறுப்பினர் திரு. மாணிக்கம் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

அழைப்பு விடுத்தவர்கள் ஒருபுறமிருக்க இறைசேரி ஊழியரும் திரு. பொன்னம்பலத்தின் ஆதரவாளருமான ஒருவர், தன்னைத் தானே தலைவராக்கிக்கொண்டு ஆங்கிலத்தில் தலைமையுரையை ஆரம்பித்தார்.

ஆங்கிலத்தில் தனது தலைமை உரையை நடாத்திய தலைவர் அரசாங்க ஊழியர் பிரச்சினையை விட்டு மூன்று தலைவர்களும் ஒன்றுபட வேண்டும் என்று கூறினார்.

நீண்ட நேரமாக வழவழவெனப்பேசிய தலைவர் பத்திரிகைச் சுதந்திரம் முக்கியமல்லவென்றும், சனநாயகமென்றுமென்ன சர்வாதிகாரமென்றுமென்ன அது பற்றித் தமிழ் மக்கள் கவலைப்படத் தேவையில்லையென்றும் கூறினார்.

மேலும் தொடருகையில், தமிழர்களைப் பொறுத்த முக்கிய பிரச்சினை உத்தியோகப் பிரச்சினையென்றும் அதற்காக திருவாளர்கள் செல்வநாயகம், பொன்னம்பலம், சுந்தரலிங்கம் ஆகிய மூவரும் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆதலால் தலைவர்கள் பழமையை மறந்து வருங்காலத்தை நினைத்து செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

### அதில் ஒற்றுமை

அடுத்ததாகப் பேசிய ஒரு வங்கி ஊழியர் கொள்கையில் வேறுபட்டவர்கள் என்ன கொள்கையின் கீழ் ஒன்றுபடுவது? கொள்கையில் ஒற்றுமையா அல்லது தலைவர்களது ஒற்றுமையா? மக்கள் ஒன்றுபடுவது முக்கியமா தலைவர்கள் ஒன்றுபடுவது முக்கியமா? என்பன போன்ற கேள்விகளை எழுப்பி இந்த ஒற்றுமைக் கதைகள் தேர்தல்களுக்கு அண்மையில் மட்டும் ஏன் எழவேண்டும் என்று கேட்டார்.

### திரு. சுந்தரலிங்கம் பேச்சு

இதைத் தொடர்ந்து திரு. சுந்தரலிங்கத்தைப் பேசுமாறு தலைவர் அழைத்தார். திரு. சுந்தரலிங்கம் பழைய அரசியற் கதைகளை கூறி, இடையிற் தமிழரசுக் கட்சியினரையும் வைதுவிட்டு, 'இந்த நிமிடத்திலிருந்து கடந்த காலத்தை மறந்து விட்டு ஈழம் என்ற எனது கொள்கைக்கு முரண்பாதட முறையில் ஒன்றுபடுவோம் என்றார்.

### திரு. மாணிக்கம் பேச்சு

அடுத்து தமிழரசுக் கட்சியின் சார்பில் சமூகம் கொடுத்த மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் அவர்களைப் பேசுமாறு தலைவர் அழைத்தார். திரு. மாணிக்கம் பேசுகையில்,

'திரு. சுந்தரலிங்கம் பழையதை மறந்து ஒன்று படுவோம் என்றார். ஆனால், இன்று காலை (4ம் திகதி டெயிலி மிரர், தினகரன் பத்திரிகைகளில் வெளியான சுந்தரலிங்கத்தின் அறிக்கை) அவர் இதை நினைத்துப்பார்க்கவில்லை.

கொள்கைகள், நோக்கங்கள் ஆகியவற்றில் மாறுபட்டவர்கள் ஒன்று சேர வேண்டுமென்று கூறப்படுகிறது தமிழ்பேசும் மக்களின் விடுதலையே நோக்கமாக விருந்தாலும் அதை அடைய செல்லும் வழியில் மாறுபட்டவர்கள் இங்கு கூடியிருக்கும் கட்சிப் பிரமுகர்கள். எனவே மக்கள் தீர்ப்புக்கே விட்டு விடுவோம். மக்கள் விரும்பியவர்களைத் தெரிவுசெய்யட்டும்' என்றார்.

### திரு. பொன்னம்பலம் பேச்சு

திரு. பொன்னம்பலம் பேசுகையின் திரு. சுந்தரலிங்கத்தைக் கண்டிப்பது போல் ஆரம்பத்தில் காட்டிவிட்டு, தமிழரசுக் கட்சியையும் அதன் கொள்கைகளையும் மிகவும் வேகமாகத் தாக்கினார். 'நான் ஒரு சிங்கள அரசியல்வாதியாக இருந்திருந்தால் இது வரையில் சமஷ்டி அரசியலைக் கொடுத்திருப்பேன், அந்த அரசியல் அமைப்பு முறை, அத்தனை தூரம் தமிழருக்குக் கேடு விளைவிக்கக் கூடியது" என்றார். மேலும் அவர் பேசுகையில் 'நாடு சர்வாதிகாரத்தை எதிர் நோக்கியிருப்பதால்சனநாயக சக்திகளுடன் நாம் ஒன்றுபட வேண்டும் என்றும், கடந்த காலங்களில் தான் எந்தப் பிரச்சினையிலும் தலையிடவில்லையென்று சிலர் கூறிவருவது தப்பானது என்றும், தான் ஒரு வழக்கில்லல பெரிய தொண்டில் (not a case but cause) ஈடுபட்டிருப்பதாகவும் கூறினார்.

'ஐக்கிய முன்னணிமூலம் நாம செய்யப்போகும் தொண்டில் சந்தேகத்திற்கு இடமுண்டா?' என்ற கேள்வியை திரு. பொன்னம்பலம் எழுப்பியதும் கூடியிருந்த அரசாங்க ஊழியரில் ஒருவர் 'உண்டு' என்று எழுந்தார். அவரைக் கிண்டல் செய்து உட்காரவைக்க முற்பட்டார் பொன்னம்பலம். இதைத் தொடர்ந்து கூடியிருந்த ஊழியர்கள் ஒவ்வொரு திசையிலிருந்தும் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தனர். ஒரு சிலரை உருட்டி விழித்து அடக்க முற்பட்டார் பொன்னம்பலம். தான்பேசாதுஇருந்து விடுவேன் என்றுமிரட்டினார் ஒருசந்தர்ப்பத்தில் அப்பொழுது திரு. சுந்தரலிங்கம் எழுந்து 'திரு. அல்பிறட் துரையப்பாவிலும் பார்க்க திரு. பொன்னம்பலம் குறைவா?' என்றார். உடனே ஒரு அரசாங்க ஊழியர் 'என்ன ஒற்றுமை' (what a comparison?) என்றார். உடனே மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் அனைவரும் 'கொல்' என்று சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

திரு. பொன்னம்பலம் தமிழரசுக் கட்சியைத் தாக்கிப் பேசுகையில் ஒரு அரசாங்க ஊழியர் எழுந்து 'பாராளுமன்றத்திற்கு உங்களை அனுப்பி வைத்தால் இதைத்தானே அங்கும் செய்வீர்கள்' என்றார். ஒரு அரசாங்க ஊழியர் கடந்த நாலரை ஆண்டுகளாக நாம் இன்னல் பட்டுக் கொண்டிருக்கையில் நீர் எங்கு சென்றீர் என்றார். உடனே வேறு ஒருவர் அவர் 'கூ கேஸ்' நடாத்தினார் என்றார். முதற் கேள்வியைக் கேட்டவர் இல்லை அவர் 'கூக்' காட்டினார் என்றார்.

தமது பேச்சு, நிலைமையை தமக்குப் பாதகமாக்கி விட்டதை உணர்ந்த திரு. பொன்னம்பலம், தமிழரசுக் கட்சியினர் வவுனியாத் தொகுதியில் திரு. சுந்தரலிங்கத்திற்கு எதிராக வேட்பாளரை நிறுத்தாவிட்டால் தாமும் நிறுத்தப் போவதில்லை' யென்று கூறிவிட்டு அமர்ந்து விட்டார்.

ஐக்கிய முன்னணி மூலம் நாம் செய்யப் போகும் தொண்டில் சந்தேகம் உண்டா என்ற கேள்வியை பொன்னம்பலம் எழுப்பிய பொழுது 'உண்டு' என்று பதிலைக் கூறிய அரசாங்க ஊழியர் அடுத்து தனக்குப் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பம் வேண்டும் என்றார். இதை திரு. பொன்னம்பலத்தின் ஆதரவாளர்கள் என்று கூறிக் கொண்ட மூவர் மறுத்தனர். ஏனையவர்கள் அந்த ஊழியருக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்றனர்.

### திரு. பொன்னம்பலத்துக்கு கவசம்

[illegible] வர் மண்டபத்தில் கூட்டம் நடாத்துவதற்கு ஒன்பது மணிக்கு மேல் அனுமதி இல்லை என்ற கூறி அந்த அரசாங்க ஊழியரைப் பேச விடாது தடுக்க முற்பட்டார். அப்பொழுது மேலும் சில மணி நேரங்களுக்கு அனுமதி பெற்றுத் தருவதாகக் கூறினார் அந்த ஊழியர். இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு திரு. பொன்னம்பலம் கூட்டத்திலிருந்து நழுவிச் செல்ல முற்பட்டார். இதைக் கண்ட அந்த அரசாங்க ஊழியர் கைதட்டிப பொன்னம்பலத்தை அழைத்தார், தமது கேள்விக்குப் பதில் கூறும் வண்ணம் அந்த அரசாங்க ஊழியர் திரு பொன்னம்பலத்திடம் கேட்டதும்; தலையை குனிந்து கொண்டு வேகமாக வெளியேற முற்பட்டார் திரு. பொன்னம்பலம் அவரின் ஆதரவாளர்களாக வந்த மூவரும் பொன்னம்பலத்தை மறைத்துக் கொண்டு அவர்பின் சென்றனர்.

திரு. பொன்னம்பலம் இடை நடுவில் வெளியேறியதால் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்த முடியாது போகவே திரு. மாணிக்கத்தையும், திரு. சுந்தரலிங்கத்தையும் அழைத்துக் கொண்டு கூடியிருந்த நூற்றுக்கும் சற்று கூடுதலான அரசாங்க ஊழியர்களும் வெளியேறினார்கள்.

[குறிப்பு:- உண்மை இவ்வாறு இருக்க தினசரிப்பத்திரிகைகள் செய்தியைத் திரித்துவெளியிட்டதுடன் பேசாத பேச்சுக்களையும் ஒரு சிலரின் வாய்க்குள் திணிக்க முற்பட்டிருக்கின்றன. திரு. மாணிக்கம் 'பொன்னம்பலம் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவது நல்லது' என்று பேசியதாக பொய்யான செய்தி வெளியிட்டுள்ளது வீரகேசரிப் பத்திரிகை இதே போலவு மற்றுமொரு ஆங்கிலத் தினசரியும் பொய்யான தகவலைவெளியிட்டுள்ளது ]

## மக்களுக்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தது அவருக்கு 'சிகரெட்' குடிக்க வேண்டுமென்ற எண்ணம், கேவலம் ஒரு 'சிகரெட்'டுக்காக தமிழ் அரசாங்க ஊழியர் சம்பந்தமான தீர்மானத்திற்கு வாக்களிக்காத திரு. சிவசிதம்பரம் தான் அறப் போரைத் தொடர்ந்து தலைவர்கள் கைது செய்யப்பட்ட வேளை தாம் இனிமேல் 'சிகரெட்' குடிக்கப் போவதில்லையென்று நீர் வேலியில் பொதுக் கூட்டமொன்றில் பகிரங்கமாக அறிவித்து, ஒரு வாலிபரிடமிருந்து ஒரு பாக்குவெட்டி பரிசாகப் பெற்றுக் கொண்ட மகானுபவர். அவர் நோக்கம் வாய்ச்சொல் வீரம் பேசி 'அப்ளாஸ்' வாங்குவதாக இருந்ததே தவிர செயலில் எதையும் சாதிக்க வேண்டுமென்பதாக இருந்ததில்லை.

(அடுத்த இதழில் முடியும்)

## தமிழரசுப் படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)



சாவகச்சேரி
வ ந நவரத்தினம்



ஊர்காவற்றுறை
வ. நவரத்தினம்

## நாகநாதனுக்கு தேர்தல் நிதி

நல்லூர் தொகுதியில் தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் டாக்டர் இ. மு வி. நாகநாதன் அவர்களின் தேர்தல் செலவுக்கான தொகையில் பெரும் பகுதியை சேர்ப்பதில் கொழும்பு வாழ் கொக்குவில் மக்கள் ஈடுபட்டிருப்பதாக தெரிகிறது. இந் நிதிக்கு இதுவரை கணிசமான தொகை சேர்ந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் டாக்டர் நாகநாதனுக்கான பிரசார வேலைகளில் ஈடுபட்டுழைக்க கொக்குவில் வாசிகள் இலங்கையின் எப்பகுதியிலிருந்தாலும், நல்லூர் செல்ல வேண்டும் என்றும் வேண்டுகோள் விடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## யாருக்கு உதை?

தான் அமைத்த அரசாங்கத்தில் திரு. பொன்னம்பலத்தை அமைச்சராகச் சேர்த்துக் கொண்ட திரு. கொத்தலாவலை, சில மாதங்களில் பொன்னம்பலத்தை உதைத்துத் தள்ளினார். அந்த உதை திரு. பொன்னம்பலத்துக்கு விழுந்த உதையல்ல. அது தமிழ் பேசும் இனத்துக்கே விழுந்த உதையாகும்.


## காய்கறி விதைகள்-பூக்கள்

இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும்
அன்றலர்ந்த மலர்கள்—காய்கறி விதைகள்

விநியோகிப்பதில் 23 வருடங்களாகப் பிரசித்திபெற்ற நிலையம்

எஸ். ஏ. பெர்னுண்டோ

23 ஆண்டுகளாக நம்பிக்கைக்கு பிரசித்தி பெற்று ஈடிணையற்று விளங்குகிறது.

எல்லோரும், எஸ். ஏ. பெர்னுண்டோவிடமிருந்து ஓடர் செய்வதற்குக் காரணம்.
அவர்களது மதிப்பு என்றும் நிலைத்திருப்பதாகும்.

தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்!

**எஸ். ஏ. பெர்னுண்டோ,**

த. பெ. இலக்கம் 16, பழைய பஜார்,
நுவரெலியா.

தொலைபேசி : 283 தந்தி : பாத்திமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரச் சிறுகதை

# விடி வெள்ளி

அரு. கணேஷ்

வைகறைப் பொழுது, துயில் நீங்கி எழுந்தேன். கீழ்வானில் விடிவெள்ளி சுடர்விட்டு ஒளிர்ந்தது. அருணோதய நினைவு உள்ளத்தில் ஆயிரம் நம்பிக்கைகளை வளர்த்தது. பசும் புற்றரையில் தூங்கும் பனி நீர் பாதங்களை நனைத்தது. இதழ் விரித்த மலர்க் கூட்டம் சிரிப்புக் காட்டும் சிங்காரிகளை நினைவூட்டியது. நெடுந்தூரம் நடந்து கொண்டேயிருந்தேன். விடிவெள்ளி என்னை விடுவதாய் இல்லை. என்னருகே வந்து விட்டது. உடல் முழுதும் ஒளிப்பிரகாசமாய் மாறிவிட்டேனோ என்ற ஐயம் எழுந்தது. விடிவெள்ளி விடுவதாய் இல்லை, பேசவே ஆரம்பித்துவிட்டது.

'தம்பி வைகறையிலேயே எழுந்து விட்டோம். பொழுது புலர்வதற்கு இன்னும் நேரம் உள்ளது. என்னைப் போல் சுறுசுறுப்பாளிகள் யார் உண்டு? போர்வையை விட்டு அகல மனமில்லாமல் நித்திராதேவியின் அரவணைப்பில் ஆனந்த அனுபவங்காணும் அனந்த கோடி பேர்களில் நானும் ஒருவன் அல்லவே என்ற அகங்காரம் உனக்கு; அப்படித்தானே?' என்று ஒரு கேள்வியைப் போட்டு வைத்தது. ஒரு புன்னகையை வீசினேன். பதில் சொல்லவில்லை. எனது மௌனம் சம்மதத்திற்கு அறிகுறியாயிற்று. விடிவெள்ளி தொடர்ந்தது.

'தவறு தம்பி, சிலர் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது உண்மைதான். ஆனால் அனைவருமே அப்படித்தான் என்று அசடனாயிராதே! நீ எழுவதற்கு முன்னே துயில் நீங்கியோர், நீண்ட தூரம் சென்று விட்டனர். அவர்களின் அடிச்சுவடுகளைப் பார். இறுமாப்புக் கொண்டு விடாதே! உன்னையும், முன்னுலே சென்றவர் இகழக் கூடும்' என்றது. நின்றேன் சிந்தித்தேன்.

'உன்னை ஈன்ற பூமிமாதாவின் காப்பத்தில் இருந்து கணத்துக்குக் கணம் கோடிக் கணக்கான புதுப் படைப்புகள் உருவாக்கப் படுகின்றன. எங்கும் மரகதக் கம்பளம் விரிக்கப்பட்டது போன்ற பச்சைப் பசுமை கூறும் 'இன்ப இரகசியம்' உன் காதுகளில் விழவில்லையா?'

அங்குமிங்கும் பார்த்தேன். அகன்ட ஆகாயம், மங்கும் வயிரக் குப்பை, பரந்த வையகம்.

'நீ நடக்கிறாயே, அந்த மண்ணுக்குள்ளே, உனது பாதத்திற்குக் கீழே, பூமியின் வயிற்றிலே, லட்சோப லட்சம் சின்னஞ் சிறு விதைகள், எத்தனையோ இரவு பகல்கள், மேல் விளிம்பிற்கு வருவதற்கு ஜீவமரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பது உனக்கு எங்கே தெரியப் போகிறது?'

என்று சொல்லி வைத்தது. அதோடு விடுவதாயில்லை. 'அவை ஒரு நாள் பூமியின் மேல் தளத்திற்கு வந்து விடுகின்றன. அப்போது என்ன சொல்கிறாய்' என்றேன்.

'நீயும் ஒரு முளை தான். அரும்பு என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்.'

'பெயரிலே ஒன்றுமில்லை என்பது எனக்குப் புரிகிறது. ஆனால்...'

'ஆனால் என்ன, அந்த ஆனால்...?'

'முளையும், முகில் கூட்டத்தைத் தொடும் மரமும் ஒன்றாகுமா?'

'பைத்தியக்காரனே! தாழ்வு மனப்பான்மை கொள்ளாதேடா தம்பி. உன் முன்னேற்றத்திற்கு அது உலை வைத்து விடும். பழமரமாயிற்றே பலன் நிறைய உண்டே, கிளையும் வேரும், அடர்த்தியும், கீர்த்தியும் இந்தச் சிறு முளைக்கேது என்கிறாயா? இது வளர்ந்து நீடித்துக் கொண்டே போக முடியாது. உன் நிலை அதுவல்ல.'

'என் நிலை என்னவாம்?'

'என்னவா? பயிர் செய்யப்படாது எத்தனையோ தரிசு நிலங்கள், பல பசும் புற்றரைகள் உன் வருகைக்காக காத்திருக்கின்றன.

எவ்வளவு நேரம் பிறரே கேள்விகளைக் கேட்டுக் கொண்டேயிருப்பது. நான் இரண்டொன்று போட்டு வைக்க வேண்டாமா? எனவே எனது கேள்விக்கணை ஆரம்பமாகியது.

'இந்த உலகம் வசதியுள்ளவர்களை—வளமுள்ளவர்களை—தோட்டமும் துரவும், பங்களாவும், பணமும், கனகமணிக் கட்டிலும், கன்னியர் குழாமும் புடைசூழ உள்ளவர்களைத்தானே 'பெரிய மனிதர்கள்' என்று அழைக்கிறது. அந்தஸ்து சூட்டி அகமகிழ்கிறது. அப்படித்தானே?'

'அறவேயில்லை தம்பி! என்னுடைய கருத்தில் 'பெரிய மனிதர்கள்' கூட அல்ல. செல்வந்தர்களை யார் தெரியுமா? என்று நிறுத்தியது...'

'சொன்னால் தெரிந்து கொள்கிறேன்.'

'எவன் இரவு பகல் என்று பாராமல், ஓய்வு மாடம், உறக்கக் கூடம் என்று ஒரு விநாடியும் ஒதுங்காமல், அல்லும் பகலும் வெற்றிச் சிகரத்தை எட்டிப்பிடிப்பதற்கு விடா முயற்சியில் ஈடுபட்டுள்ளானோ, எந்த ஆற்றலாளனிடம் பிடிவாதமிக்க அந்தப் போர்க் குணம் கொலுவீற்றிருக்கிறதோ அவன் தான் என் அகாரதிப்படி செல்வவான், சீமான் எல்லாம். அவனது ஆற்றல் பொக்கிசம் குன்றாதது; குறையாதது.'

'அழகான தத்துவம், ஆனால், வாழ்க்கைக்கு உதவ வேண்டாமா.'

'இல்லை யென்று சொல்லவில்லை. மாலை நேரம். மந்தாரவேளை. செக்கர் வானம். மறைவுக் காட்சி. கவிஞன் வசீகரக் கவிதை தீட்டுவான். ஓவியன் வண்ணக் கலயமும் தூரிகையும் தேடுவான். கண்ணிற்கு ரம்மியத்தைச் சேர்க்கத் தவறுவதில்லை. ஆனால் உதயசூரியனின் ஒரு ஒளிக்கதிரின் ஆற்றலும் அழகும் மறைவுக் காட்சி முழுவதைக் காட்டிலும் எவ்வளவோ எழில் நிரம்பியது. ஏற்றம் கொண்டது!'

உதயசூரியன் தோன்றினான். விடிவெள்ளி விடை பெற ஆரம்பித்தது. சூரியோதயத்திடம் என்னை ஒப்படைத்துவிட்டு பிரிவு வேதனையால் விடிவெள்ளியின் முகத்தில் சோகம் படர்ந்தது. சோபை இழந்தது. 'பிரிவு கொடிது' என்றேன். 'கடைசிச் செய்தி' என்றது. காதலனைப் போர்க்களத்திற்கு அனுப்பு முன்பு இனி மணாளனைக் காண்போமா, மாட்டோமா என்று கருதும் மங்கை நல்லாளின் நடுக்கம் அந்தக் குரலில் இருந்தது. பாசமும், பரிவும் குழைந்த சொற்கள் உதிர்ந்தன.

'யார் இந்தப் 'புதுவரவு'? எங்கிருந்து வந்தான்? எப்படி வந்தான்? எங்ஙனம் பெற முடிந்தது இந்தப் போற்றலை இவனால்? இப்படியெல்லாம் கேட்பர், பெருமூச்செறிவர். அச்சத்தின் பிம்பமும் ஆவர். அது பற்றிக் கவலையும் கூடாது. கரைந்து விடவும் கூடாது. பெருமரம் ஒன்று—அதன் அருகே ஒரு இளஞ் செடி—இடமில்லையென்ற நிலையில் வேரோடு களையப்பட்டது, என்ற நிலை என்றும் இல்லை—ஏனெனில் பரந்த உலகம். ஆலமரமானாலும் கோல மல்லிகைக் கொடியானாலும் எதனுடைய வேரினையும் நிலமடந்தை மறப்பதில்லை.

எனவே உலகம் என்னை நிராகரித்து விட்டது. நிழலில்லை நிற்க, என்பது கோழையின் கூக்குரல. பரந்த உலகில் உனக்கென்று ஒரு இடமுண்டு. உனக்கு மட்டுமல்ல விழித்திருப்பவர்கள் அனைவருக்கும் இடமுண்டு ஆனால் செத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இடம் அமைக்க எவரும் இணங்குவதில்லை. ஆசை மனைவியானாலும், அன்புக் குழந்தையானாலும், பரிவைக் கொட்டி வளர்த்த தாய் தந்தையரானாலும் பிணத்தை நெடுநேரம் வீட்டில் வைத்திருப்பதில்லை. ஆனால் புது வாழ்வின் சிறகடித்து வரும் தங்க மதலைகளுக்கு—பிள்ளைக் கனியமுதுகளுக்கு—பேசும் பொற்சித்திரங்களுக்கு தங்கத் தொட்டில்கள் எல்லா இல்லங்களிலும் தயாராக உள்ளன' என்று முடித்தது. விடிவெள்ளியைக் காணேம்; உதய சூரியனின் பவனி வான வீதியில் ஆரம்பமாகியது.

(யாவும் கற்பனை)

---

# குறுந்தொகைக் காதலும் சங்ககால உள்ளுறை உவமமும்

—பேரம்பலம் சிவயோகம்

இலக்கியப் பூஞ்சோலை

தாம் உணர்ந்த ஒன்றை பிறர்க்கு உணர்த்தவும், பிறர் உணர்ந்த ஒன்றைத் தாமுணரவும் பயன்படுவதே மொழி. உணர்தலும் உணர்த்தலுமாகிய இத் தொழிலுக்கு உறுதுணையாய் நிற்பது உவமை. இவ்வாறு தாம் உணர்ந்த ஒன்றை அதை உணராதார்க்கு, உணர்த்த விரும்புவோர்க்கு, அச் செயலை எளிதாக்கித் துணை புரிவதில் உவமைபோற் சிறந்தது வேறில்லை.

சொற் சுருக்கத்துக்கும், பொருட் பெருக்கத்துக்கும் நன்கு பயன்படுகிறது இவ்வுவமை. சங்ககால இலக்கியங்களில் இவ்விளக்கத்துக்கு முற்றும் பொருந்தக் கூடிய உவமையணிகள்—சிறப்பாக உள்ளுறை உவமம்—எடுத்தாளப்பட்டுள்ளன.

## குறுந்தொகை

குறுந்தொகையில் இத்தகையதொரு சாதாரண தலைவன் தலைவி காதல் நிலையை வர்ணிக்கும் கட்டம் ஒன்று வருகின்றது. குறிஞ்சி நாட்டின் இயற்கைக் காட்சியை உள்ளுறை உவமமாகக் கொண்டு தோழிமூலம் தலைவன் தலைவி காதலை வர்ணிக்கின்றார் கபிலர்.

தலைவனும் தலைவியும் ஒருவரின்றி ஒருவர் வாழமாட்டாப் பெருங்காதலுடையோராய் வாழ்கின்றார்கள். பல இடையூறுகள் காரணமாகக் களவொழுக்கத்திற் கலந்து அவர்களால் மகிழமுடியவில்லை. ஒருவரை ஒருவர் காணலே அரிதாயிற்று.

## தலைவியின் வருத்தம்

தலைவியின் வருத்தம் மீதுறுகின்றது. உள்ளக் கவலை பிறர்க்குப் புலனாகுமாறு தலைவியின் உடல் நலனும் கெடுகின்றது. இந்நிலை மேலும் நீடித்தாற் தலைவி இறந்து விடுவாளோ என்ற பயம் தோழிக்கு.

அஞ்சிய தோழி தலைவனிடம் திருமணத்தின் இன்றியமையாமையைக் கூற விரும்புகிறாள். அவள் தலைவனை நோக்கி, "உன் ஊரில் வேர்ப் பலாக்களைச் சூழ மூங்கில் வேலியாக அமைந்ததினாலும், பழங்கள் பழுத்தாலும் வேரிலேயே பழுப்பதினாலும், நன்கு பழுத்து விட்டாலும் அவை கீழே விழுந்து பாழாய் விடுமென அஞ்ச வேண்டியதில்லை. ஆதலின் இதோ நிற்கும் இப் பலாவினைக் கண்ணுற்று உன் உள்ளத்தில் எத்துணை அச்சமும் உண்டாகவில்லையா?

## தலைவனின் கடமை

வேலியொன்றும் சுற்றியமையாததினால் இப் பழத்தை எவராலும் எளிதிற் பறிக்க முடியும். மேலும் பழத்தின் பருமையையும் அதைத் தாங்கிக் கொண்டிருக்கும் காம்பின் சிறுமையையும் நோக்கின் அக்காம்பு பழத்தை இதுவரையிற்றுங்கி இருப்பதே அரிய செயல். பழுக்கத் தொடங்கினாற் பழத்தைப் பிறர் பறித்துப் போவதேயன்றி, தாங்கிய கிளை முறிய, கீழே விழுந்து தானே அழிதல் உறுதி. பழுக்கும்வரை பாதுகாப்பதுதான் எம் கவலை. மிகுதியெல்லாம் உம் கடன்" —எனக் கூறி மேலும் தொடர்ந்து:—

"இங்கு பழத்தின் நிலையே தலைவி. பாதுகாப்பற்ற தலைவியை யாரும் மணக்க விரும்புவர். மிகவும் மெல்லியது தலைவி உயிர், நின்பால் அவள் கொண்டுள்ள காதலோ அளவிடற்கரியது. அக்காதல் கனிந்தால் அதைத் தாங்கி நிற்க அவளால் முடியாது. அவள் காதலும் பாழாம். உரிய காலத்தில் மணத்தலே அறி[illegible]த் தான் தோழி.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செல்வியை ஆகுமதி
யார் அஃது அறிந்திசினோரே சாரல்
சிறு கோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர் தவச் சிறிது காடமோ பெரிதே".

இத்தகைய சொற் சுருக்கத்தையும் பொருட்செறிவையும் உள்ளுறை உவமம் மூலம் ஏனைய சங்க இலக்கியங்களிலும் நாம் கண்டு தெளியலாம்.

இயற்கையோடு நெருங்கி வாழ்ந்த மக்களின் அகவாழ்வு புலவனைத் தூண்டியமையினால் மேற்கூறிய சிறந்த கற்பனை புலவன் மனதிற் தோன்றிற்று. பாடலைப் படித்த பின்பு அக்காட்சி எம் மனக்கண் முன்னேயே ஓடி வருகிறதெனின், பாடலின் சிறப்பைக் கூறவும் வேண்டுமா?

---

பாட்டில் உள்ள சொற்கள் ஒரு பொருளை விளக்கவில்லை; அந்தப் பொருளையே நம் மனதில் படைத்து விடுகின்றன.

பாட்டு என்பது, அனுபவத்தையே சொற்களாக மாற்றித் தரும் மொழி பெயர்ப்பாகும்.

ஆபர்கிராம்பி.

---

# வெண்சுருட்டு வீரர் சிவசிதம்பரம்

பாராளுமன்றத்தில் தமிழ் அரசாங்க ஊழியர்களின் கட்டாய ஓய்வு பற்றிய பிரச்சினை வந்த பொழுது தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினரான உடுப்பிட்டிப் பிரதிநிதி மட்டும்தான் அதைஎதிர்த்துக் குரல் எழுப்பினார் என்று முன்னாள் உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம் யாழ்ப்பாண முற்ற வெளியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியுள்ளார்.

தமிழ் அரசாங்க ஊழியர்பிரச்சினைபற்றிய விவாதத்தின்மீது 4-11-64ம் திகதி பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெறும்பொழுது சபையிலிருந்த அன்றைய உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம் திடீரென்று மாயமாகமறைந்தது ஏன்? ஒரு வெண்சுருட்டுப் புகைப்பதற்காக திரு. சிவசிதம்பரம் வாக்கெடுப்பை பொருட்படுத்தாது சபையிலிருந்து வெளியேறினார். தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினையிலும் பார்க்க வெண்சுருட்டுப் புகைப்பது திரு. சிவசிதம்பரத்துக்கு மிக முக்கியமானது. இந்த வெண்சுருட்டு வீரர் தான் தமிழர் உரிமைபற்றியும் தமிழ் அரசாங்க ஊழியர் பற்றியும் முற்ற வெளியில் முதலைக் கண்ணீர் வடித்தாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா செல்வதில் பயனில்லை

## அங்கு உணவுப் பஞ்சம்

இந்தியாவில் இப்பொழுது இருக்கும் நிலைமையை இலங்கை-இந்திய ஒப்பந்தம் காரணமாய் இங்கிருந்துபோய் இந்தியாவில்குடியேற விரும்புபவர்கள் நன்றாக ஆராய வேண்டும். இதுவரை காலமும் போக்குவரத்து தடைபடுத்தப்பட்டிருந்ததினால் இப்பொழுது இந்தியாவுக்கு போகவேண்டும் என்ற உணர்ச்சி ஏற்படக் கூடும். அங்கு இருக்கின்ற பொருளாதார நிலைபற்றி அங்கிருந்து வெளியாகும் பத்திரிகைகள் மூலம் காணக்கூடியதாய் இருக்கின்றது. உணவு கிடைக்காமல் சிலர் இறப்பதாகக் கூட செய்திகள் வருகின்றன. இப்பொழுது இருக்கும் மக்களுக்கே உணவு இல்லை என்றால், இனிமேல் அங்கு அனுப்பப்படவிருக்கும் இலட்சக்கணக்கான மக்களினது உணவுக்கு இந்திய அரசாங்கம் என்னசெய்யப் போகின்றது? இப்பொழுது தமிழ் நாட்டிலிருக்கும் கோடிக் கணக்கான மக்களுடன் சேர்க்கப்படுவதை விட வேறு எதைத்தான் இந்திய அரசாங்கம் செய்யப்போகின்றது?

இங்கிருந்து போகும் மக்கள் தமிழ்நாட்டில்தான் குடியேற்றப்படப் போகின்றார்கள் என்பதற்குதான் என்ன உத்தரவாதம்?

### வீடு நிலம் எங்கே?

சிலர் வீடு இருக்கின்றது அல்லது நிலம் இருக்கின்றது என்றுகூறலாம். ஆனால்இந்த வீடும், நிலமும் வேறு ஒருவரால் இப்பொழுது உபயோகப் படுத்தப் படுகின்றதே! அவரிடமிருந்து இவைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமா?

இந்தியாவுக்குப் போனால் உரிமைகளுடன் வாழலாம் எனக் கூறுபவர்கள் சிலர் உளர். அங்கு வாக்குரிமையைத்தவிர வேறு என்ன உரிமை இருக்கப்போகின்றது?

### இந்திபடிக்க நிர்ப்பந்தம்?

அங்கு சென்றாலும் இந்தி படிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். பிறமாகாணங்களில் குடியேற்றப்பட்டால் இப்பொழுது இந்தியாவில் இருக்கும் வகுப்பு வாத நிலைமையில் இங்கிருந்து போகும் மக்கள் மானத்துடன் சீவிக்க முடியாத நிலை ஏற்படும்.

இந்த நோக்கம்தான் இந்திய அரசாங்கத்துக்கு இப்பொழுது இருக்கின்றது என்று அறியக்கூடியதாய் இருக்கின்றது. பர்மாவிலிருந்து அகதிகளாக இந்தியாவுக்கு வந்தவர்களின் நிலை பற்றி தமிழ் நாட்டு பத்திரிகை ஒன்று கூறியிருப்பது ஞாபகப்படுத்தப்பட வேண்டியதே.

### நெருப்பிற் சாகிறோம்

'பர்மாவில்தான் நெருப்பைக் கைகளில் வைத்திருந்தோம், ஆனால் இங்கேயோ நெருப்புக்குள் கிடந்து சாகிறோம்' என இவ் வகதிகள் கூறியதாக இப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

**இ. நாகேந்திரம்,**
நிர்வாகச் செயலாளர்,
இ. தொ. கழகம்.

### தொழில் பறிக்கப்படும் நிலை

மலையகத் தமிழ் மக்களின் அரைப்பங்கினரை வெளியேற்றி விட்டால் மீதியாக இருப்பவர்களை அடிமைகள் போல் உபயோகிக்கலாம் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

சாற்றைப் பிழிந்தெடுத்த பின்னர் சக்கையை வீசி விடுவதுபோலத் தான் அரசாங்கமும் தமிழ்மக்களை நடத்துகின்றது.

## மலை நாடு

இலங்கை இந்திய அரசாங்கங்கள் தங்களினது வசதிக்காகத்தான் 15 வருடகால எல்லையை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருக்கின்றன. இலங்கை அரசாங்கம் 15 வருடகாலத்தில் சிங்கள மக்களைத் தோட்ட வேலைகளில் பயிற்றிவிடலாம்எனக்கனவு காண்கின்றது. இந்திய அரசாங்கம் இக்காலவரையறையுள் ஏதாவது ஏற்பாடு செய்துவிடலாம்எனஎண்ணுகின்றது.

### தொழிலுக்கு கட்டுப்பாடு

இவ்வொப்பந்தத்தில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், சுயமாகத் தொழில் செய்வோரை இத்தொழிலில் ஈடுபடாது செய்வதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. அது தவிர பிற தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களை 55 வயதானதும் அவர்களுடைய தொழில்களிலிருந்து நிறுத்துவதற்கு இவ்வொப்பந்தம் அதிகாரம் அளிக்கின்றது.

ஆனால், அவர்களுடைய முறை வரும்பொழுதுதான் அவர்களை இந்தியாவுக்கு அனுப்பும் நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே அரசாங்கம் விரும்பினால் ஒழிய வேலையின்றிப் பட்டினி கிடக்க நேர்ந்தாலும் இந்தியாவுக்குப் போவதற்கு ஒப்பந்தம் இடம் கொடுக்காது.

### எதிர்ப்புப் போராட்டம்

இவ்விடயங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது இந்தஒப்பந்தம் தமிழ் மக்களை எவ்வளவு கஷ்டத்தில் போடமுடியுமோ அவ்வளவு கஷ்டத்தில் போடக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கின்றது.

தமிழ்மக்கள் ஒன்று சேர்ந்து இவ்வொப்பந்தத்தை முறியடிப்பதைத் தவிர வேறு ஒரு வழியும் இல்லை. தமிழ் மக்கள் ஒரே மனதாக இவ்வொப்பந்தத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று கூறுவதுடன் எத்தகைய போராட்டத்தையும் நடத்துவதற்கு தயாராக வேண்டும்.

### காத்திருக்க நேரமில்லை

தங்களை பாதிக்காதெனக் கருதி எந்த ஒரு தமிழ் மகனும் இந்தப் போராட்டங்களில் ஈடுபடாது இருக்கக் கூடாது தங்களுடையமுறை வரும்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்றும்இருக்கக் கூடாது. இவ்வொப்பந்தம் அமுல் நடத்தப்படும் பொழுது இவ்விடயம்பற்றி ஆலோசிப்போம் என இருப்பதுகூட ஆபத்தாக முடியும். உடனடியாக போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.

> **பொற்தொழிலாளர் கழகம்**
>
> இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மஸ்கெலியா அலுவலகத்தில் 'பொற்தொழிலாளர் முன்னேற்றக் கழகம்' என்ற பெயரில் ஒரு ஸ்தாபனம் உருவாக்கப்பட்டுளது. இந்த ஸ்தாபனத்தின் ஆரம்பக் கூட்டத்துக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அட்டன் கிளைச் செயலாளர் திரு. இ. நாகேந்திரம் தலைமை வகித்தார்.
>
> பொற் தொழிலாளர்களின் முன்னேற்றத்துக்காக உருவாக்கப்பட்ட இக்கழகம் தமிழ் அரசுக் கட்சியின் போராட்டங்கள் எல்லாவற்றிலும் முன்னணியில் நின்று தமிழ் மக்களின் மானம் காப்பதையே, தனது முக்கிய குறிக்கோளாக கொண்டுள்ளது.
>
> பின்வரும் செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. தலைவர்: பொ. ஆறுமுகம் ஆசாரி, பொதுச்செயலாளர்: கே. பி. செல்லத்துரை, பொருளாளர்: சி.சிவலிங்கம் ஆசாரி, பிறஉறுப்பினர்: திருவாளர்கள்: ரா. மாணிக்கம் ஆசாரி, சு. திருவேங்கடம் ஆசாரி.

# திட்டமிட்ட வாழ்க்கை அவசியம்

## கவலைவேண்டாம்

'ரேவதி'
திருகோணமலை

உங்கள் பிரச்சினை மிகவும் சாதாரணமானது. உடல் நோய் பற்றி எம்மிடம் கூறுவதைவிட உள்ள நோய் பற்றிக் கூறியிருக்கலாம். உள்ளத்துக்கும் உடலுக்கும் தொடர்பு உண்டுதானே! பறவாயில்லை. நீங்கள் ஒரு நல்ல வைத்தியரைத் தேடிப் பிடித்து உடல் நிலையை முதலில் சீராக்குங்கள். உங்கள் உடல் நிலை சீரானால் உள்ளம் குணம் கண்டுவிடும்.

'மோகன்'
கொட்டாஞ்சேனை

உங்களுக்கு கலியாண வயது வந்துவிட்டதுதானே! குடும்பத்தை வைத்துப் பரிபாலிக்கத்தக்க வசதி இருக்குமானால், பெற்றோரின் விருப்பத்தை அனுசரித்து திருமணம் செய்து கொள்ளுங்கள்.

'சரோ'
கல்முனை

சிரத்தையுடன் படித்தால் தான் கல்வியில் மேன்மையுறலாம். கல்வி கற்கும் போது கவனம் சிதறலாகாது. கருத்தைச் சிதைய விடாது கல்வியைக் கற்க முனையுங்கள். வெற்றி பெறலாம்.

'ராஜு'
வெள்ளவத்தை

அடுத்தவர் வாழ்க்கை முறைகளைப் பார்த்துப் பொறுமைப்படுவதில் எள்ளளவும் பயனில்லை. நாமாக நமக்கான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். எத்தகைய வாழ்க்கையை நாம் அமைத்துக் கொள்வது என்பதை முன்னமேயே நாம் திட்டமிட வேண்டும். வாழ்க்கையில் இறங்கு முன்னர் நமது வாழ்க்கை அமையப் போகும் தன்மையைச் சீர்தூக்கிப் பார்த்து அதற்கேற்றபடி செப்பனிட்டு திட்டத்தைப் போட்டுக் சொல்லுவது அவசியம். நாம் நமது வாழ்க்கையைத் திட்டமிடுவதில்லை. அதனாலேயே நாம் நன்கு வாழ முடியவில்லை.

'மலர்'
ராகலை

உங்கள் சகோதரிக்கு பருவ காலத்தில் உண்டான ஆசை ஈடேறவில்லை என்பதனால் ஏற்பட்ட மனத்தாக்கமே இது என்று தெரிகிறது. பேய் பிசாசு முதலியவற்றால் ஏற்பட்டதில்லை என்று நாம் துணிந்து கூறலாம். மனோதத்துவம் அறிந்து வைத்தியம் செய்யத்தக்க ஒரு வைத்தியரை நாடுவதே நல்லது. மனோ வியாதிகளை மாந்திரீக சக்திகளாலும் ஓரளவு குணப்படுத்தலாம். ஏனெனில், மாந்திரீகங்களும் ஓரளவு மனோதத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படுவனவே!

அன்புடையீர்,

'கவலை வேண்டாம்' பகுதியினை இவ்வாரத்துடன் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டியிருக்கிறது. பொதுத் தேர்தற் காலம் நெருங்குகின்றமையினால் கவலை வேண்டாம் பகுதியையும் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இதுவரை நீங்கள் அனுப்பியவற்றிற்கு தேர்தல் முடிவடைந்த பின்னர் பதிலளிப்போம் என்று கூறிவைக்கிறோம்.

—ஆனந்தன்.

துரைராஜா,
கொட்டாஞ்சேனை.

வியாபாரத்தில் லாபமும் நட்டமும் ஏற்படுவது சகஜமே. கடன் படாமல் இந்த உலகத்தில் எவரும் வாழ்ந்ததில்லை. ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் வேறொருவருக்குக் கடனாளியாகவே இருப்பர். பெருந்தனக்காரர்களும் வங்கிகளில் கடன் பட்டேயிருப்பார்கள். கடன் பழுவை நினைத்துக் கலங்குவதில் காலத்தைக் கடத்தினால் எந்தக் காரியமும் ஈடேறாது. துணிவுதான் வியாபார வெற்றியின் திறவுகோல். நீங்கள் செய்யும் வியாபாரம் நீங்கள் தேர்ந்தெடுத்த இடத்துக்குப் பொருத்தமானதுதானா என்பதை ஆராய்ந்து செயற்படுங்கள். வெற்றி நிச்சயம்.

# சங்கப் பலகை

## புவியியல்

ஆசிரியர்: க. குணராஜா, பி. ஏ. ஆனசு.

வெளியீடு: அன்பு வெளியீடு, 5, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 1.00

(தனிப் பிரதி தேவையானோர் 1 ரூபா 10 சதப் போஸ்ரல் ஓடரை, க. குணராஜா, புவியியற் பகுதி, பல்கலைக் கழகம், பேராதனை என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.)

'புவியியலி'ன் இரண்டாம் பிரதி வெளிவந்துள்ளது. இதில் காலடியின் கீழுள்ள செல்வங்கள் (பேராசிரியர் கா. குலரத்தினம்) தென்மேல் பருவக் காற்று (கலாநிதி ஜோர்ஜ் தம்பையா பிள்ளை), யாழ்ப்பாணப் பகுதியின் மக்கட் பரம்பலும், நிலப்பயன்பாடும் (சோ. செல்வநாயகம்), இந்தியாவின் பயிர்ச் செய்கையில் கால நிலையின் ஆதிக்கம். (செல்வி த. சந்தானதேவி), படவெறிய ஆய்வில் நேருருவப் பண்பு (கலாநிதி ஜோர்ஜ் தம்பையா பிள்ளை) எனும் பயனுள்ள கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

புவியியலை ஒரு பாடமாகப் படிக்கும் மாணவர்களும், படிப்பிக்கும் ஆசிரியர்களும் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டிய நூல்.

—சுப்பிரமணியம்.

## தீவு

எழுதியவர்: குமணன்.

வெளியீடு: பாரதி நிலையம், 23, முகலன் இடம், கிரிலப்பனை, கொழும்பு-6.

விலை: 1.00.

வியப்பையும், திகிலையும் ஊட்டக்கூடிய சம்பவங்களை வைத்து எழுதப்பட்டிருக்கும் ஒரு பொழுது போக்கு நூலாகக் குமணன் எனும் இளம் எழுத்தாளரின் 'தீவு' என்ற நூல் விளங்குகின்றது. இதை ஒரு புதுமைக் கதை என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். புதுமைக் கதைகள் எழுதுவதும் ஓர் இலக்கியப் படைப்பே எனவும் குறிப்பிட்டுள்ளார். புதுமைக் கதை என்பதற்கு என்ன அர்த்தம் என விளங்கவில்லை.

எழுத விழையும் இளைஞர்களைத் தட்டிக் கொடுக்க வேண்டியது அவசியமே. (குமணனைப் பொறுத்த மட்டில் வளர வேண்டியவர். இளம் உள்ளங்களில் எழும் அவசர முடிவுகளும், எண்ணங்களும், அதீத கற்பனாவாதமும் தீவில் காணப்படுகின்றது. எனினும் படிப்பவர்களுக்குச் சலிப்பு ஏற்படாத வகையில் தீவு படைக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. சிறுவர்கள் படிப்பதற்கு உகந்த நல்லதோர் பொழுது போக்கு நூல் தீவு.

—ராதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி அரசமைப்பே நிலையான பரிகாரம்

## 18 ஆண்டுகளுக்கு முன் பகிரங்கமாகக் கூறினர் திரு. பொன்னம்பலம்



**சமஷ்டி அரசியலே தமிழருக்கு நிலையான பரிகாரம் என்று 1947ல் அடித்துக் கூறினர் திரு. பொன்னம்பலம். ஐ. தே. கட்சி அரசாங்கத்தில் அமைச்சரானதும் ஒற்றையாட்சியை வலியுறுத்தினர். திரு. ஜோன் கொத்தலாவலையால் அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டதும் தனித் தமிழ் நாடு என்ருர். தெற்கில் அரசியல் நிலைமை ஐ. தே. கட்சிக்கு சாதகமாக இருப்பதை உணர்ந்ததும் மீண்டும் ஒற்றையாட்சியை வலியுறுத்த முற்பட்டிருக்கிருர். இதுதான் "மதிநுட்பம் வாய்ந்த திறமைசாலியான" திரு. பொன்னம்பலம் 'தமிழ் சாதிக்கு'க் காட்டும் நிலையான அரசியல் வழியா?**

நடந்த பொதுத் தேர்தலில் வெற்றியை இழந்துவிட்ட துயரினுல் பீடிக்கப்பட்ட முன்னுள் தலைவர்கள் எல்லாம், கடந்த நாலரை ஆண்டுகளாக முக்காடு போட்டு மூலையில் இருந்தனர். இப்பொழுது முக்காட்டைத் தூக்கி மூலையில் போட்டு விட்டு மக்கள் அரங்கில் தோன்றி வீராப்பு பேசுகிருர்கள்.

இந்த நாலரை ஆண்டு கால இடைவெளிக்குள், தமிழ் பேசும் மக்கள் பட்ட இன்னல்கள் பலப்பல. அவற்றைப்பற்றி சிறிதும் எண்ணிப்பார்க்காத இவர்கள், இப்பொழுது மக்கள் மத்தியில் வந்து முதலைக் கண்ணீர் வடிக்கிருர்கள். தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட முடிவு தவருனது என்று மக்கள் மத்தியிலேயே பேசத் தலைப்பட்டுள்ளார்கள்.

### பொன்னம்பலத்தின் 'வீர சபதம்'

தமிழ் பேசும் மக்கள் அரசியல் அரிச்சுவடி தெரியாதவர்கள், கடந்தகால அரசில் வரலாற்றை மறந்து விட்டார்கள் என்ற எண்ணத்தினுல் இந்த முன்னுள் தலைவர்கள் எல்லாம் வாய்க்கு வந்தபடி மேடையில் உளறித் தள்ளுகிருர்கள். கடந்த காலங்களில் மக்கள் முன் தாங்கள் வைத்த நோக்கங்களை, கொள்கைகளையெல்லாம் இந்த முன்னுள் தலைவர்கள் இன்று மேடையில் நின்று மென்று தின்னத் தலைப்பட்டுள்ளார்கள்.

சென்ற வாரம் யாழ். நகரில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்தில் அதன் ஆயுள்காலத் தலைவர் திரு. பொன்னம்பலம் ஒரு சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

"சமஷ்டியின் மூலம் 'தமிழ்ச் சாதியை' ஒரு குடாவுக்குள் அடக்கி வைக்க நான் உயிருடன் இருக்கும் வரை விடமாட்டேன்" என்று அக் கூட்டத்தில் "சபதம்" செய்துள்ளார். ஆனல், இதே பொன்னம்பலம் இற்றைக்கு பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் சமஷ்டி அரசியலுக்காக வாதிட்டுள்ளார். இந்த உண்மையை அவர் தனது தொழிற்துறை முயற்சிகளுக்கு மத்தியில் மறந்திருக்கலாம். ஆகவே, திரு. பொன்னம்பலம் அவர்களுக்கு, அவரின் அன்றைய நிலையைச் சற்று நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

### தந்திச் செய்தி

1947ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம் திகதி திரு. பொன்னம்பலம் தமது கைப்பட எழுதிய ஒரு நீண்ட தந்தியில் சமஷ்டி அரசியற் திட்டத்தை வற்புறுத்தியுள்ளார். அன்றைய பிரதமர் காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயக்காவுக்கு அனுப்பிய இத் தந்தியில் "இலங்கைக்கு ஒரு சமஷ்டி அரசமைப்பு திட்டம் வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார். இத் தந்தியின் பிரதியை இங்கிலாந்திலிருந்த பிரித்தானிய குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கும் திரு. பொன்னம்பலம் அனுப்பியுள்ளார். இந்த உண்மையை திரு. பொன்னம்பலம் அவர்களால் மறுக்க முடியுமா?

சமஷ்டி அரசியல் திட்டம் கூடாதது, அது தமிழருக்குக் கேடானது என்பதெல்லாம் திரு. பொன்னம்பலத்தின் இன்றைய வாதம். 1947 ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி கொழும்புசென்ட். பீட்டர்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் திரு. பொன்னம்பலம், சமஷ்டி அரசியல் இலங்கைக்கு வேண்டும், அது தமிழருக்கு விமோசனம் கொடுக்கக் கூடியது என்று பலமாக வாதித்துள்ளார்.

### 1947ல் நடந்தது

அன்று திரு. பொன்னம்பலம் பேசிய பேச்சு அப்பொழுது கொழும்பிலிருந்து வெளியான 'கொழும்பு நகரச் செய்தி' (The Colombo City News) என்ற ஆங்கில வாரம் இரு முறைப் பத்திரிகையில் விரிவாக—முன்பக்க முதல் செய்தியாகப்-பிரசுரிக்கப்பட்டது.

1947ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் திகதி வெளியான (The Colombo City News) பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

"Tamil leaders prepare for partition. Co-operation with the Sinhalese in a federal constitution is the irrevocable Tamil goal declares Mr. Ponnampalam"

"தமிழ்த் தலைவர்கள் பிரிவினைக்குத் தயாராகுகிருர்கள். ஒரு சமஷ்டி அரசமைப்பின் கீழ் சிங்கள மக்களுடன் ஒத்துழைப்பதுதான் தமிழர்களுடைய நிலையான இலட்சியம் என்று திரு. பொன்னம்பலம் கூறினுர்" என்பதே மேற்படி ஆங்கில வாசகத்தின் தமிழாக்கமாகும்.

### ஒற்றையாட்சிக்கு வக்காலத்து

இது ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பாராளுமன்றத்திற்குள் நுழைந்த திரு. பொன்னம்பலத்தின் இலட்சியம். பாராளுமன்றம் சென்ற திரு. பொன்னம்பலம் கனம் அமைச்சர் பொன்னம்பலம்பலமாக மாறியவுடன் ஒற்றையாட்சித் திட்டத்தை வலியுறுத்த முற்பட்டார்.

**பூங்குன்றன்**

ஆனல் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களும் அவரைச் சேர்ந்தவர்களும் சமஷ்டி அரசியற் திட்டத்தை தொடர்ந்து வற்புறுத்தினுர்கள். இன்னும் வற்புறுத்தி, அதைத் தலையாய இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டு வருகிருர்கள். திரு. செல்வநாயகம், திரு. வன்னியசிங்கம் போன்ருேர் சமஷ்டி அரசியற் திட்டத்தை வற்புறுத்தி வருவதை கனம் அமைச்சராகவிருந்த பொன்னம்பலம் கண்டிக்கவே செய்தார்.

அன்றைய பிரதமர் திரு. ஜோன்கொத்தலாவலை அமைசரவையிலிருந்து திரு. பொன்னம்பலத்தை உதைத்துத் தள்ளும்வரை ஒற்றையாட்சித் திட்டத்தை வலியுறுத்திய பொன்னம்பலத்திற்கு ஞானேதயம் பிறந்தது. அவரது வழமையான கூடுவிட்டுக் கூடுபாயும் கைங்காரியத்தின்படி தனித் தமிழ் நாட்டை வலியுறுத்த முற்பட்டார்.

### தனித் தமிழ் நாடு

1956ம் ஆண்டு சனவரி மாதம் 21ம் திகதி கொழும்பு சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற ஒற்றுமை முன்னணி பற்றிய கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் தனித் தமிழ் நாட்டை வற்புறுத்தி வாதிட்டர். இதைத் தொடர்ந்து ஒரு சில ஆண்டுகள் தனித் தமிழ் நாடு என்பதே தமது இலட்சியம் என்று 'முரசறைந்து' வந்தார்.

### மீண்டும் ஒற்றையாட்சி

இதைத் தொடர்ந்து மௌனியாகி விட்ட திரு. பொன்னம்பலம், இப்பொழுது மக்கள் அரங்கிற்கு வந்து ஒற்றையாட்சி, ஒன்றுபட்ட இலங்கை என்ற கோஷத்தை முன் வைக்கிருர். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் அமைசராகவிருக்கையில் எந்தத் திட்டத்தை வலியுறுத்தினுரோ, அதே திட்டத்தை இன்றும் வலியுறுத்த முற்பட்டுள்ளார். ஐ. தே. க. அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கும் பொழுது எந்த சமஷ்டி அரசியற் திட்டத்தைக் கண்டித்தாரோ அதே திட்டத்தை மீண்டும் கண்டிக்க முற்பட்டுள்ளார்.

சமஷ்டி அரசியற் திட்டத்துக்காக ஆரம்ப காலத்தில் வாதிட்ட திரு. பொன்னம்பலம் இன்று சமஷ்டி அரசியற் திட்டத்தைக் கண்டிக்கிருர். அது தவருனது என்றும்— தமது காலத்தில் அத்திட்டம் உருவாக அனுமதியேன் என்றும் 'வீர சபதம்' செய்கிருர்.

### இறுதிப் பேச்சு

திரு. பொன்னம்பலத்தின் அரசியல் வரலாறு முன்னுக்குப் பின் முரணுக ஒரு வழியற்றதாக அமைந்துள்ளது. திரு. பொன்னம்பலம் அவர்களுக்காகத் தமிழ்க் காங்கிரசும்தமிழ்க்காங்கிரசிற்காக தமிழ் பேசும் மக்களும் என்ற இலட்சியமே திரு. பொன்னம்பலத்தின் இலட்சியம். இந்த இலட்சியத்தை சர்வாதிகார ஆட்சியிற் தானும் செயற்படுத்த முடியாது. எனவே திரு. பொன்னம்பலத்தின் "சமஷ்டியின் மூலம் 'தமிழ்ச் சாதியை' ஒரு குடாவுக்குள் அடக்கி வைகக விடமாட்டேன்" என்று 'வீர சபதம்' வெறும் வீம்புப் பேச்சு. அன்னுரின் அரசியல் வாழ்வின் மரண ஒலி. இறுதிப் பேச்சு. இது அரசியல் வரலாற்றை உணர்ந்து அறிந்தவர்களின் தீர்ப்பு.

---

**வட மாகாணப் புதினம்**

## ஐக்கிய முன்னணியும் மாவலி கங்கையும்

வட மாகாணத்தில் யாழ்ப்பாணத் தொகுதியில் மட்டுமே தேர்தற்களம் அமைக்கப்பட்டுள்ளது என்று கூறினுற் தவருகாது. ஏனைய தொகுதிகளில் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை. உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிடும் தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. க. ஜெயக்கொடி அதிகப்படியான பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெறுவார். அதேபோன்று கிளிநொச்சித் தொகுதியிலும் தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. கா. பொ. இரத்தினம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெறுவார்.

யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. மாட்டினின் வெற்றி உறுதி என்பது தெரிந்தும் தேர்தற் தினத்திற்கு முன்னர் அமர்களப் படுத்தி தமக்கே ஆதரவு இருப்பதாகக்காட்டி, பொது மக்களை ஏமாற்றிவிட முடியாதா என்று எண்ணுகிருர்கள் தமிழ்க் காங்கிரசுக்கட்சியினர்.

### தமிழரசுத் தந்தையின் பதில்

யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியைத் தவிர்ப்பதற்கு தனிப்பெரும் தலைவர் தலைகீழாக நின்ருர். முடியவில்லை. 'ஐக்கிய முன்னணி', ஒற்றுமை, மதிநுட்பம் வாய்ந்த திறமைசாலிகள்' என்ற தமிழ்க்காங்கிரசின் கோஷங்களுக்கெல்லாம் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் நல்ல சூடு கொடுத்துள்ளார். 'எல்லோரும் போட்டியிடுவோம் மக்கள் தங்கள் தீர்ப்பை வழங்கட்டும்' என்று திரு. செல்வநாயகம் இணுவிலில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பகிரங்கமாக அறிவித்து விட்டார்.

மக்களின் தீர்ப்பை எதிர்நோக்க முடியாதவர்கள் தங்களை மக்கள் தலைவர்கள் என்றே, அல்லது மக்களின் பாதுகாவலர் என்றே கூறிக் கொள்வதில் அர்த்தமில்லை. தமிழ்க்காங்கிரசாருமனைவர்களும், மக்களைச் சந்திக்கத் தயங்குகிருர்கள். எனவே தான் 'ஒற்றுமை முன்னணி', முப்பெரும் தலைவர்கள்' என்ற கோஷங்களை முன்வைக்கிருர்கள்.

### மக்கள் ஐக்கியம் வேண்டும்

தமிழர் ஐக்கிய முன்னணி என்றகோஷம் 1956ம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. [illegible] களில், இன்று ஐக்கிய முன்னணி [illegible] எழுப்புவார்கள் அரசியற் பலத்துடன் விளங்கினுர்கள். மக்களை எதிர்நோக்கிய பிரச்சினைகளை மூடி மறைத்து பாராளுமன்றப் பதவியைக் காப்பாற்றி வந்தார்கள். தமிழ்பேசுமினத்தை எதிர்நோக்கும் ஆபத்தை அன்று தமிழரசார் மக்கள் முன் வைத்தபொழுது அவற்றையெல்லாம் அரசியற் பலத்துடன் விளங்கிய தமிழ்க் காங்கிரசார் மூடிமறைத்தார்கள். ஆபத்தை அன்று உணர்த்திய தமிழரசார் பாராளுமன்றப் பதவிக்காக தலைவர்கள் ஐக்கியம் பற்றிப் பேசவில்லை.

தமிழரசார் அன்று கூறியதெல்லாம் மக்கள் ஐக்கியம் வேண்டும் என்பதே. அந்த ஐக்கியம் 1956ம் ஆண்டில் ஓரளவு உருவாகியது. இன்று முழு உருப்பெற்று விட்டது.


### விரட்டப்பட்டனர்

தமிழ் பேசும் மக்கள் ஆபத்தை உணர்ந்து தமிழரசுக்கட்சியின் தலைமையில் ஒன்றுபடுகிருர்கள் என்பதையும். தாங்கள் இனி மக்களை ஏமாற்ற முடியாது என்பதையும் உணர்ந்த 'தனிப் பெரும் தலைவர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களாக இருந்தவர்களும் ஐக்கிய முன்னணி மூலம் பாராளுமன்றம் செல்ல முயன்றனர். முடியவில்லை. மக்களைச் சந்தித்தனர். தோல்வியைப் பெருமளவில் அணைத்தனர். 1960ம் ஆண்டுடன் பழைய நூரோக்கு கும்பல் முற்று முழுதாக மக்கள் அரங்கிலிருந்து விரட்டப்பட்டது.

இன்று, மீண்டும் ஐக்கிய முன்னணி என்ற கோஷத்தை எழுப்பி இழந்த பதவிகளைப் பெற்றுக் கொள்ளலாமா என்ற முயற்சியில் இவர்கள்முனைந்துள்ளார்கள் கடந்த வாரம் கொழும்பில் இது போன்ற ஒரு கூட்டம் நடைபெற்றதாகவும், தமிழ் அரசாங்க ஊழியர்களின் கேள்விகளுக்கு பதில் கூற முடியாமல் பழம் பெரும் தலைவர் ஓட்டமெடுத்ததாகவும் இங்கு பேசப்படுகிறது. இந்த ஐக்கிய முன்னணி என்ற பேச்சு இத் திங்கள் 11ம் திகதி காலை 11

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



பேர்ட் லங்கஸ்டர், பிரெட்றிக் மார்ச், கேர்க் டக்ளஸ் ஆகிய முன்னணி நடிகர்கள் ஒருங்கு சேர்ந்து நடித்துள்ள 'செவின் டேயிஸ் இன் மே' என்ற ஆங்கிலப்படத்தில் ஒரு விறுவிறுப்பான கட்டம். கொழும்பு லிபேர்ட்டி திரையில் இப்படம் நடைபெறுகிறது.

# திருட்டுக் காதலை வரவேற்கும் தந்தை?

ஒரு இளைஞன் ஒருவனை திருட்டுத்தனமாகக் காதலிக்கிறுன் என்று கேள்விப்பட்டால் எந்தத் தந்தைக்குத்தான் கோபம் வராது. ஆனுல், தன் மகன் திருட்டுத்தனமாக ஒரு பெண்ணைக் காதலிக்கிறுன் என்று கேள்விப்பட்டதுமே ஆனந்தம் மேலிடுகிறது. மகிழ்ச்சியூட்டும் சேதியைக் கூறிய மகனின் நண்பனையும் அழைத்துக்கொண்டு மகனிடம் ஓடுகிறுர்.

'மகனே நீ காதலிக்கிற பெண்ணையே அடுத்தமுகூர்த்தத்தில் உனக்குக் கலியாணம் பண்ணி வைச்சிடுறேன்! சொல்லுமகனே யார் அந்தப் பொண்' என்று கேட்டுவிடுகிறுர்.

வெட்கம் மேலிட மகன், 'என்னப்பா, என்னை பைத்தியமாக்கி விடுவீர்கள் போலிருக்கே' என்கிறுன். உடனே அவன் அப்பா, 'ஆசை வைத்திருக்கிற பொண்ணுமேலே பைத்தியம் பிடிக்கிறது தப்பா?' என்று கேட்க அருகிலிருந்த அவனுடையநண்பன், 'இல்லயில்ல; ஆசையை அடக்கி வைக்கிறதுதான் பெரிய தப்பு' என்று கூறிவிடுகிறுன்.

கல்யாணமே செய்யாமல் தடிப் பிரமச்சாரியாகத் தன் மகன் இருந்துவிடப் போகிறுனேஎன்று இதுவரை கருதி வந்த தகப்பனுக்கு மகனின் திருட்டுக் காதல் மகிழ்ச்சியூட்டியதில் ஆச்சரியமில்லையே!

இச் சுவாரசியமான கட்டம் விஜயாவில் ஆர். ஆர். பிக்சர்சின் 'பணம் படைத்தவ'னுக்காகச் சுடப்பட்டது. அப்பாவாக டி. எஸ். பாலையாவும், மகனுக புரட்சி நடிகரும், அவர் நண்பனுக நாகேஷும் தோன்றினர். ராமண்ணு டைரக்ட் செய்கிறுர்.

# ஐக்கிய முன்னணியும்...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

மணிவரை தமிழ்க் காங்கிரசார் மந்திரிவிலிருந்து வந்து கொண்டே இருக்கும். இது தவிர்க்க முடியாதது.

### மாவலிகங்கை

தமிழ்க் காங்கிரசார் ஐக்கிய முன்னணி என்ற கோஷத்தை ஒரு புறத்தில் கூறி வருகையில், மறு புறத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் அன்றைய அரை அமைச்சர் திரு. குமாரசாமி மாவலிகங்கையை கிளிநொச்சித்தொகுதிக்கு "மட்டும்" திருப்பப்போவதாகப் பிரசாரம் செய்துகொண்டுள்ளார். கிளிநொச்சித் தொகுதி மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள். ஆகவே மாவலிகங்கையை கிளிநொச்சிக்குத் திருப்பி விடுவதாகக் கூறினுல் கிளிநொச்சித் தொகுதி வாக்காளர்கள் ஏமாந்துவிடுவார்கள் என்று திரு. குமாரசாமி எண்ணுகிறுர்.

தமிழ்க் காங்கிரசார் என்னும் பொது மக்களை அரசியல் அறிவற்றவர்கள் என்று எண்ணிக்கொண்டு ஐக்கிய முன்னணிக் கோஷத்தை எழுப்பி வருகிறுர்களோ, அதுபோன்று திரு குமாரசாமியும் கிளிநொச்சித் தொகுதி மக்கள் ஏதோ ஒன்றும் தெரியாதவர்கள் என்று எண்ணிக்கொண்டு 'மாவலிகங்கையை திருப்புவேன்' என்ற கோஷத்தை எழுப்பி வருகிறுர்.

திரு குமாரசாமி அவர்கள் அரை அமைச்சராக இருந்தகால் திருப்ப முடியாத மாவலிகங்கையை இப்பொழுது எப்படித் திருப்பப் போகிறுர் என்ற கேள்வியை கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் கேட்கிறுர்கள். திரு. குமாரசாமியை கிளிநொச்சித் தொகுதியில் வரவேற்கமுன் வந்திருப்பவர்கள் எல்லாம் முன்னுளைய ஐ. தே. கட்சியினர் என்பதும் கிளிநொச்சித் தொகுதி மக்களுக்கு நன்கு தெரியும்.

### வரவேற்பும் மாலையும்

கடந்த வாரம் கிளிநொச்சித் தொகுதியில் அன்னருக்கு ஒரு வரவேற்பு நடைபெற்றது. வரவேற்பு நடாத்தியவர்கள் முன்னுள் ஐ. தே. கட்சியினர். இவர்கள் மாலைகளை வாங்கி இலவசமாகக் கடைக்காரர்களுக்கு கொடுத்து அன்னருக்குச் சூட்டுமாறு கேட்டனராம். இப்படிக் கேட்டவர்களுக்கு கடைக்காரர்கள் நல்ல பதில் கொடுத்து அனுப்பினுர்களாம். 'இன்று யாருக்கு மாலை மரியாதை செய்ய வேண்டுமென்பது எமக்குத் தெரியும். நீங்கள் வந்த வழியே போகலாம்' என்றும் சில கடைக்காரர்கள் கூறினுர்களாம்.

### நிறம் மாறுகிறுர்

கிளிநொச்சித் தொகுதியில் கூட்டுறசாங்கத்தின் வேட்பாளராகப் போட்டியிட முன்வந்த திரு. ஆனந்தசங்கரி நிறத்தை மாற்றிக்கொள்ளப் போகிறுராம். சமசமாஜக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டால் கட்டுப் பணமும் கிடைக்காது போய் விடுமென்று அவரது சமசமாஜ நண்பர்கள் கூறியதைத் தொடர்ந்து இவர் சுயேச்சை வேட்பாளராக முன் வரலாம் என்று கிளிநொச்சியில் செய்தி அடிபடுகிறது.

—சங்கிலியன்

# புயல் நிவாரண நிதிக்காக 'பறந்ததே பைங்கிளி'

புயலினுல் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குமாகாண அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் பொருட்டு சேர்க்கப்படும் புயல் நிவாரண நிதிக்காக வானெலிக் கலைஞர்கள் நடிக்கும் 'பறந்ததே பைங்கிளி' என்ற நாடகம் 14-1-65 வியாழக்கிழமை கொழும்பு றேயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நாடகம் திரு. சி. சண்முகம் அவர்களால் எழுதப்பட்டது.

திரைப்படத்துறையில்

# இந்தியாவுக்கு 3 வது இடம்

திரைப்படம் தயாரிக்கும் நாடுகளுள் இந்தியா மூன்றுவது இடத்தைக் கைப்பற்றியிருப்பதாக அதிகார பூர்வமற்ற ஒரு கணக்கெடுப்புக் கூறுகிறது.

கணக்கெடுப்புக்குள் சேர்க்கப்பட்ட 1962-63 ஒரு வருட காலத்துள் மொத்தம் 305 படங்களை இந்தியா தயாரித்துள்ளது. அவற்றுள் இந்திப்படங்கள் 93, தமிழ்-56, தெலுங்கு-46, வங்காளி .39. ஏனையவை பிறமொழிப் படங்கள்.

இந்திய திரைப்படங்களுக்காக மொத்தம் சுமார் ரூ85 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளதாம். தயாரிப்புகளிலும் திரைப் படத்துறைப் பணிகளிலும் சுமார் ஒரு லட்சம் பேர் தொழிலிலீடுபட்டுள்ளனர்.



கொழும்பு காமினி திரையில் ஓடிக்கொண்டிருக்கும் பல வர்ணச் சித்திரமான 'ஹொங் கொங்' என்றபடத்தில் சரோஜாதேவி அசோக் குமார் முதலானேர் நடித்துள்ளனர்.

# ஜனவரி 23ல் திரைப்பட விழா ஆரம்பமாகும்

ஜனவரி 23ம் திகதி சென்னையில் சர்வதேசத் திரைப்பட விழா ஆரம்பிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டு விட்டன என்று கூறப்படுகிறது. தமிழ் நாடு தற்கால கவர்னர் சந்திரரெட்டி இவ்விழாவினை சாந்தி தியேட்டரில் தொடங்கி வைப்பார். முதல் அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் தலைமை தாங்குவார்.

36 சர்வதேசப் புகழ் பெற்ற படங்கள் இத்திரைப் பட விழாவின் போது திரையிடப்படும். இத்துடன் இந்தியப் படங்களும் திரையிடப்படுமாம்.



சினிமாஸ் தயாரித்துவரும் திகிலூட்டும் சம்பவங்கள் நிறைந்த சிங்களச் சித்திரமான 'சண்டியா'வில் காமினி பொன்சேகாவும், ...வும் இப்படித் தோன்றுகின்றனர்.




# குடிசையை அகற்றி பூங்கா அமைக்க எண்ணம்

ஏழை விவசாயியான கணேசன் தன் குடிசையின் வாசலில் கை கட்டி பயபக்தியுடன் நிற்கிறுன். அவனுடைய நண்பர்களும் சிலர் நிற்கின்றனர். கணேசன் கடமைபார்க்கும் பண்ணை முதலாளியின் கையாளான பேயாண்டி கணேசனை அணுகுகிறுன். வலிந்து ஒரு புன்னகையை உதிர்த்துக் கொண்டு பேயாண்டி, 'கணேசா நம்ம முதலாளி உன் வீட்ட தன் பேருக்கு மாத்திக்கிட்டு உனக்கு வேறு நல்ல இடமாப் பாத்துக் குடுக்க எண்ணியிருக்காரு. நீ சொல்ற விலையைக் கொடுக்கச் சொல்றன்' என்றுன்.

'இந்தஓட்டைக் குடிசைதான் எங்க அப்பா ஞாபகமாயிருக்கு. இத பத்திரமா பாத்துக்கண்ணு எங்கஅப்பா சாகப்போறப் போ கூடச் சொன்னுர்' என்று கணேசன் சொல்கிறுன்.

இதைக்கேட்ட பேயாண்டி இடி இடியென்று சிரித்துவிட்டு, 'அவர் கண்ண மூடி வருசக்கணக்காச்சு. நீ எழுதிக் குடுக்கிறப்போ முழிச்சா பாக்கப்போறுரு?'

'நீங்க இப்படி பேசிறது நல்லா இல்ல. நீங்க வாங்கணுமென்னு வேற குடிசைகளா இல்லே...? வேறு எத்தனையோ வாங்கலாமே!' என்று கணேசன் கூறுகிறுன்.

'அதுக்கில்ல கணேசா காலையில் எழுந்தா கண்ணுக்கு முன்னுல கண்ணுவிக் குடிசையப் பாக்க வேண்டியிருக்கேன்னு முதலாளி அருவசைப்படுகிறுர். இந்த இடத்திலே ஒரு சிங்காரப் பூங்கா எழுப்ப எங்க முதலாளி திட்டமிட்டுள்ளார். ஒட்டிக்கு இரட்டியாக பணம் வாங்கித் தாரன் குடுத்துடு' என்று பேயாண்டி ஆசை வார்த்தை காட்டுகிறுன்.

இதைக் கேட்டதும் கணேசனின் நண்பர்களுக்கு கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. பேயாண்டியை அடிக்க முற்பட பேயாண்டி ஓட்டம் பிடிக்கிறுன்.

அனுஜன் பிக்சர்ஸ் தயாரிக்கும் 'செல்வப் பிரபு' படத்துக்காக இக் கட்டம் சுடப்பட்டது.

புதுமுகமான பெருமாள் ராஜு கணேசனுகத்தோன்றுகிறுர். முத்துராமன், நாகேஷ் ராஜஸ்ரீ, யசோதா, செஞ்சி கிருஷ்ணு சௌந்தர் ஆகியோர் தோன்றுகின்றனர்.

# படிக்காத கடிதம்

பேராதனை வைத்தியக் கல்லூரி மாணவர்கள் தேவன்—யாழ்ப்பாணம் எழுதிய 'படிக்காத கடிதம்' என்னும் நாடகத்தை இத்திங்கள் 15ம் நாள் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் மேடையேற்றுகிறுர்கள். இந்நாடகம் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இரண்டு தடவை மேடை யேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இத்திங்கள் 22ம் நாள் இந்நாடகம் கொழும்பிலும் மேடை யேற்றப்படலாம் என்று தெரிகிறது.



என்டர் பிரைஸ் மென்ஸ் திரைகளில் ... ஓடிக் கொண்டிருக்கும் 'மாயாவின் இரகசியம்' (... ) என்ற சிங்களப்படத்தில் ... ஏதோ முக்கியமான பிரச்சினையை ... மும் கட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இன்று

# ஓடி ஒளித்து விட்டு ஒற்றுமை நாடுவதேன்

## தகுதியும் திறமையும் உள்ள தலைவர்களைக் கண்டுவிட்டோம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்துவதற்கான கிளர்ச்சியும் ஆரம்பித்துவிட்டது.

### பூமி பறிபோகிறது

எம் தந்தையர்நாடென்று தமிழ்பேசும் இனம் பாத்தியதை கொண்டாட ஏதுவாக அமைந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களை அபகரித்து, நீர்கொழும்பு, களுத்துறை, பாணதுறை, போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் இனம் மறைந்ததுபோல், இனத்தை அழித்தொழிக்க அடிகோலும் குடியேற்றத் திட்டங்களை வகுத்த சேனநாயக்கா அரசாங்கத்தில் திரு. பொன்னம்பலம் மந்திரியாக வீற்றிருந்தார்.

தமிழ்மொழி சிறப்புற்று வாழ வழியமைக்கவல்ல தமிழ்பேசும் மக்களின் புராதனப் பூமியும் வெற்றிகரமாகப் படிப்படியாகப் பிடுங்கப்படுகிறது.

திரு. பொன்னம்பலம் அமைச்சராக விருந்தபோது தான் ஆட்சிபீடம் தமிழ் மொழியையும் தமிழ்பேசும் இனத்தையும் வேரறுக்கும் திட்டங்களை இரகசியமாகவும், வெளி வெளியாகவும் செய்யத் தலைப்பட்டது.

அமைச்சுகளிலும் திணைக்களங்களிலும் தமிழ் மறைந்து பெயர்ப்பலகைகள், கடிதத் தலைப்புகள், ரப்பர் ஸ்டாம்புகள் யாவும் தனிச்சிங்களத்தில் மாற்றமடைந்தன.

சிங்கக் கொடியை தேசியக் கொடியாக்கும் திட்டம் தயாரானது கூட திரு. பொன்னம்பலம் அமைச்சராக விருந்தபோது தான்.

தமது அமைச்சுக்கும்மேற்கூறப்பட்ட தமிழ் விரோத நடவடிக்கைகளுக்கும் சம்பந்தம்எதுவும் இருக்கவில்லை என்று திரு. பொன்னம்பலம் கூறலாம். ஆனால், அமைச்சுகளில் நடைபெறும் எந்த ஒரு மாற்றத்துக்கும் சகல அமைச்சர்களும் கூட்டுப் பொறுப்பாளிகளாவர் என்பது நியதி.

இக்காலங்களில் திறமைசாலிகள், தகுதியானவர்கள் என்பனபோன்ற வரிசையில் வர்ணிக்கப்படுகிறவரான திரு. சி. சுந்தரலிங்கமும் அன்று அமைச்சராக இருந்துள்ளார்—தமிழ் பேசும் இனத்தை சீர்குலைக்கும் திட்டங்களுக்கு அவரும் உடந்தையாக விருந்தார் என்பதனை மறைக்க முடியாது.

### எங்கே திறமை?

தகுதியும் திறமையும் உள்ளவர் என்று திரு. பொன்னம்பலத்தை நாம் கருதுவதானால், திரு. சேனநாயக்காவின் சூழ்ச்சித் திட்டங்கள் அவருக்கு நன்கு புரிந்திருக்கவேண்டுமே. சூழ்ச்சி புரிந்திருந்தும், அதற்கு மாறுபட்டுச்செயல்படாமலிருந்தாரானால் இனத்தின் நன்மையைவிட அமைச்சர் பதவியை மேலென அவர் கருதியிருந்திருக்கவேண்டும்.

அப்படியானால் திரு. பொன்னம்பலம் வடித்தெடுத்த சுயநலவாதி என்பதும், ஒரு இனத்தையே தன்னலத்துக்காக விற்றுவிடத் தயங்கமாட்டாரர் என்பதும் தெள்ளெனத் தெரிகிறது.

அவரது 'திறமையும் மதிநுட்பமும்' மாற்றானிடம் சரணாகதியடையவும் அமைச்சரவையில் ஒரு பதவியை வேட்டையாடவுமே தகுதியானவை என்பது ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுவிட்டது.

### தேர்தல்காலக் காளான்

தமிழ் காங்கிரஸ் நிறுவனத்துக்கு எந்தக் காலத்திலும் தானே தலைவராகவிருக்கும் திரு. பொன்னம்பலம் அந் நிறுவனத்தை ஒரு அரசியற் கட்சியாக மாற்றி அமைக்க முற்படட்டேயில்லை. இன்று இந்நிறுவனம் தேர்தல் காலக் காளானாகவே முளைத்தெழுந்துவிட்டு தேர்தல் காலம் முடிந்ததும் மறைந்துவிடுகிறது.

இந்நிறுவனத்தை இனத்தின் நன்மைக்காகப் பாவித்ததாக திரு. பொன்னம்பலம் கூறமுடியாது. தன்னுடைய சுயநலத்துக்காகவே இதைக் கட்டிக்காத்து வருகிறார். சில நல்லவர்களையும் இந் நிறுவனத்துள் முன்பு இணைத்துக்கொண்டு சர்வாதிகாரியாகவே திரு. பொன்னம்பலம் விளங்கிவந்திருக்கிறார் என்பது அனைவரும் அறிந்ததே.

தகுதிவாய்ந்த தலைவர் என்று வர்ணிக்கப்படும் பட்சத்தில் ஒரு அரசியல் இயக்கத்தை நடாத்தும் தகுதி திரு. பொன்னம்பலத்துக்கு இருக்கவேயில்லை என்பதை தமிழ்காங்கிரஸ் நிறுவனத்தின் தன்மையே புலப்படுத்துகிறது.

### தியாகம்செய்யத் தயாரா?

உரிமைகளனைத்தையும் இழந்து தவிக்கும் தமிழ்பேசும் இனம் போராட்டங்களின் மூலமும் தியாகங்களின் மூலமுமே உரிமைகளைப் பெறமுடியும். எந்தப் போராட்டத்தையும் நடத்தவோ, எத்தகைய தியாகத்தையும் செய்யவோ பொன்னம்பலத்துக்கு முடியாது என்பது பலமுறை நிரூபிக்கப்பட்டுவிட்டது.

போராட்டம் என்ற பேச்செடுத்தாலே காத தூரம் ஓடி ஒதுங்கும் கோழைத்தனம் குடிகொண்டவரான திரு. பொன்னம்பலம் தமிழ் பேசும் இனத்துக்காக இதுவரை எதையுமே செய்துவிடவில்லை என்பது தெளிவு.

## உபத்திரவம் கொடுக்காது ஒதுங்கிவிட்டால் போதும்

சிங்கள சிறிப் போராட்டம் நடாத்துவதற்கு தமிழரசுக் கட்சி தக்க ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தபோது ஒப்புக்காக திரு. பொன்னம்பலமும் தலைகாட்டினார். போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள் கைதாகி அவர்கள் மேல் வழக்குகள் பதிவாக்க எத்தனங்கள் நடைபெற்ற தருணத்தில் திரு. பொன்னம்பலம் தென்படவேயில்லை. அப்பொழுதே திரு. பொன்னம்பலத்தின் தகுதிக்கு பொது மக்கள் எடைபோட்டுப் பார்த்து விட்டனர்.

### பிரசித்தமான ஓட்டம்

1956ம் ஆண்டு ஜூன் மாதம்5ம்திகதி காலிமுகக் கடற்கரையிலே தமிழ்அரசுத் தலைவர்கள் சத்தியாக்கிரகம் செய்தபோது, காடையர்களின் கல்வீச்சும், கயமைத்தனத்தின் தாக்குதலும் உருவெடுத்தன. அஞ்சா நெஞ்சுடன் எதையும் ஏற்கச் சித்தமாயிருந்த தமிழரசுத் தலைவர்கள் மத்தியில் திரு. பொன்னம்பலமும்காணப்பட்டார். காடைத்தனம் உருவெடுத்ததையும், தலைவர்கள் தாக்கப்படப் போகிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டதும் சத்தியாக்கிரகிகள் மத்தியிலிருந்து வெளியேறி பாராளுமன்றத்துக்குள் ஓடி ஒளிந்துகொண்ட திரு. பொன்னம்பலத்தின் 'வீரத்தனத்தை' கண்ணாரக் கண்டவர்கள் இன்னும் உயிருடன் தானுள்ளனர். அவர் அன்று ஓடிய ஓட்டத்தின் வேகம் வரலாற்றில் இடம்பெற வேண்டியதாகும்.

1960ம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் வெளியானதும், மக்கள் மத்தியில் இனிமேல் தமது தந்திரோபாயங்கள் செல்லுபடியாகாது என்பதை' உணர்ந்துகொண்டு, அரசியலே வேண்டாம் என ஒதுங்கிவிட்டவர் மீண்டும் தலைகாட்டியிருக்கிறார்.

தமிழ்பேசும் மக்கள் பல துறைத் தாக்குதல்களுக்குள்ளும் சிக்கித் தவித்தபோது எதுவிதத்திலும், எள்ளளவேனும் குரல் காட்டாதிருந்துவிட்டவர், தேர்தல் என்ற குரலைக் கேட்டதும் ஒற்றுமை முழக்கமிட ஆரம்பித்துள்ளார்.

### எங்கோடி ஒளித்தார்?

1961-ம் ஆண்டு 'தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒரே கொடியின் கீழ் ஒன்றுபட்டு உரிமைப் போர் தொடுத்துவிட்டனர்' என்று இந்த உலகமே கூறிய வேளையில், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஆட்சியே நடைபெறவில்லை என்ற நிலைக்கு சத்தியாக்கிரகப் போர் வலுவடைந்த போது 'திரு. பொன்னம்பலம் எங்கு சென்றுவிட்டார்?' என்று மக்கள் கேட்கும் அளவுக்கு தன்னை பிரித்துக் கொண்டிருந்தவர்,இன்று 'எந்த முகத்துடன் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தலை காட்டுகிறார்' என்று பலரும் கேட்பதில் ஆச்சரியம் எதுவுமே இல்லை.

இவற்றிலிருந்து திரு. பொன்னம்பலம் தம் இனத்தின் மேன்மைக்காக எதுவுமே செய்ய வல்ல இயக்கங்களை நடத்தவோ, தியாகம் செய்யவோ தகுதியற்றவர் என்பது நன்கு புலப்படுகிறது.

ஒன்று திரண்டு தமிழ் பேசும் மக்கள் சத்தியாக்கிரகப் போரில் ஈடு பட்டிருந்த வேளையில் ஒளிந்து கொண்டவர், இன்று ஒற்றுமைக்காகப் பாடுபட முன் வந்திருப்பதை தமிழ் பேசும் மக்கள் எள்ளி நகையாடுகின்றனர்.

கட்சி பேதங்களை மறந்தும், போட்டியிலிருந்து விலகியும் தமிழ்த் தலைவர்கள் சிலரையாவது பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என்று கூக் குரல் எழுப்பும் இவர்கள் அதே கோரிக்கையை விடுக்கும் மேடையில் தமிழரசுக் கட்சிக்கும் தலைவர்களுக்கும் வசை புராணம் பாடத் தலைப்பட்டு வருவது பொது மக்களுக்கு ஆத்திரத்தையே ஊட்டுகிறது.

போட்டி தவிர்ப்பு பற்றிக் குரல் எழுப்பியவர்களே குரலின் ஒலி தாழ்வதற்கு முன்னர் தொகுதி வாரியாக தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்களின் பட்டியலையும் வெளியிட்டு விட்டனரே! முன்னுக்குப் பின் முரண்பட்டுள்ள இவர்களின் நடவடிக்கைகள் வேடிக்கையும் விநோதமுமாகவே யுள்ளன.

### வழக்காடும் தியாகம்!

திரு. பொன்னம்பலம் தாம் அரசியல் அஞ்ஞாத வாசம் மேற்கொண்டமைக்கு விசித்திரமான காரணம் ஒன்றையும் காட்டுகிறார். ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்கும் பொறுப்பில் சட்ட உதவி புரியும் பணியிலேத் தாம் மேற்கொண்டிருப்பதையே ஒரு பெரிய தியாகமென்றும், அதுவே தனது இலட்சியமென்றும் திரு. பொன்னம்பலம் காரணம் கூறுகிறார் போலும். அப்படியானால் இப்பணியினை நாட்டுக்கான சேவைகளிலோ, தமது இனத்துக்கான நற்பணிகளிலோ சேர்க்க முடியுமா, என்பதை தமிழ் பேசும் மக்கள் சிர்தூக்கிப் பார்க்காதிருக்க மாட்டார்கள்.

ஒரு வழக்கில் வாதாடுவது தான் ஒருவரின் அரசியல் இலட்சியமென்றால், அந்த இலட்சியத்துக்காக மக்கள் அவரை ஆதரிக்க வேண்டிய தேவையே கிடையாது.

### மக்கள் அளித்த தீர்ப்பு

தமிழரசுக் கட்சியின் கொள்கைகளில் தமிழ் பேசும் மக்கள் பரிபூரணமான நம்பிக்கை வைத்து விட்டனர். 1956-ம் ஆண்டிலும் 1960-ம் ஆண்டில் நடந்த இரு தேர்தல்களிலும் தமிழ் பேசும் மக்கள் தங்களுடைய ஏகோபித்த தீர்ப்பை அளித்து தமிழரசுக்கட்சியின் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் உரமளித்து விட்டனர்.

திடமான கொள்கையும், தீவிரமான போராட்டத் திட்டங்களையும் மக்கள் மத்தியிலே வைத்து, பல உரிமைப் போராட்டங்களை நடாத்தி, தியாகத் தழும்புகளை ஏற்ற தமிழரசுக் கட்சியே தமிழ் பேசும் மக்களின் இயக்கமாக மாறிவிட்டபின்னர் பதவி வேட்டையையும், சுயநலத்தையும்இலக்குகளாகக்கொண்டுமென் மேலும் ஏமாற்று வித்தைகள் காட்ட முனையும் அரசியல் சூதாடிகளை தமிழ் பேசும் மக்கள் இனியும் நம்பப்போவதில்லை என்பது உறுதி.

தமிழ்த் தலைவர்களை ஒற்றுமைப் படுத்தி, போட்டியின்றி அவர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என்றும், அது ஒரு பெரிய சேவை என்றும் கருதி பிரசாரத்திலீடு பட்டிருக்கும் சில நல்லவர்களுக்கு இறுதியாக ஒரு வார்த்தை கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழ் பேசும் இனத்தின் உரிமைகளைப் பெற்றுத்தரத் தகுதியும் திறமையும் உடையவர்கள் யாவர் என்பது பல்லாண்டுகளுக்கு முன்பே நிரூபணமாகி விட்டது.

எண்ணற்ற தியாகங்களைப் புரிந்து, எடுத்த பணியை முடித்து வைக்கத்திட சங்கற்பம் கொண்டவர்களை தமிழ் பேசும் மக்கள் தங்கள் தலைவர்களாகத் தேர்ந்தெடுத்ததனால், தகுதியற்றவர்களும் திறமையற்றவர்களும் தங்கள் தங்கள் சுய அலுவல்களை மேற்கொள்ள ஒதுங்கி விட்டனர்.

மக்களின் நல்லாதரவைப் பெற்று, கொண்ட கொள்கையில் இம்மியளவும் விட்டுக் கொடுக்காது உழைத்து வரும் தமிழரசுக் தலைவர்களை போட்டியின்றி மீண்டும் பாராளுமன்றத்துக்கு அனுப்புவதை விட்டு விட்டு, தகுதியற்றவர்களை திறமையற்றவர்களை, கோழைகளை, வீரர்கள் தீரர்கள் என்று வர்ணித்து வாழ்த்தி வரவேற்பதில் வீண்பொழுதையும் பொருளையும் பாழடிக்காமல் சற்றே ஒதுங்கி நில்லுங்கள்.

## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ANANDA MEDICAL HALL TRADE MARK 174 SEA STREET, COLOMBO 11

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு; திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3,00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதுமைகள் பாரீர் பாரினிலே-(28)

—அன்ரனி பெர்னுண்டோ, கிரிலப்பனை—

## பூலோக சொர்க்கத்தைக் காண்போம்

சொர்க்கத்தைப் பற்றி நாம் பலவகையாகக் கற்பனை செய்கிறோம் பூவுலகிற் போல் இல்லாமல் சொர்க்கத்தில் சுகபோகமாக இருக்கலாம் என்றே பலர் நினைக்கிறார்கள். இவர்கள் இனிமேல் சொர்க்க மடைவதற்கு எவ்வித சிரமமும் படவேண்டி இருக்காது. ஏனென்றால், இன்னும் இருபது ஆண்டுகளில் இவர்கள் விரும்பும் அந்தச் சொர்க்கம் பூவுலகுக்கே வந்துவிடும் என்று அமெரிக்க அறிவர்கள் சொல்கிறார்கள்.

ஆம். இன்னும் இருபது வருடங்கள் சென்றதும் மனிதர்கள் சிரமப்பட்டு எதையும் செய்யவேண்டி இருக்காது. நாம் நினைத்ததை எல்லாம் அருகிலுள்ள ஒரு பொத்தானை அழுக்கியவுடன் மின்சாரத்தின் உதவியால் நொடிக்குள் பெறக்கூடியதாக இருக்கும்.

நமது உடைகள் வண்ண வண்ணக் காகிதங்களால் செய்யப்பட்டிருக்கும். ஒருமுறை உடுத்ததும் கசக்கி எறிய வேண்டியதுதான். இவை அவ்வளவு மலிவாகக் கிடைக்கும். அது மட்டுமன்றி நமது வீட்டடியிலேயே விற்பனைக்குக் கிடைக்கும்.

விலையுயர்ந்த உடைகள் கசங்காத உயர்ந்தரகக் காகிதத்தில் செய்யப்பட்டிருக்கும். இவற்றை அணிந்துவிட்டு அலுமாரியில் வைத்து மறுமுறை எடுக்கும்போது மின்சாரத்தின் உதவியால் அலுமாரியினுள்ளேயே கழுவிச் சுத்தம் செய்யப்பட்டுத் தயாராக இருக்கும்.

நாம் உணவு பரிமாறும் தட்டுகள் கூட காகிதத்தால் செய்யப்பட்டிருக்கும். ஒருமுறை பாவித்துவிட்டு வீசிவிடலாம். சாப்பாடுகள் சமைக்க வேண்டியதில்லை. நமக்குப் பிடித்தமான சாப்பாட்டு வகைகள் எல்லாம் தகரடப்பாக்களில் அடைக்கப்பட்டு எப்போதும் தயாராக இருக்கும். விரும்பியதை உடனே எடுத்துச் சாப்பிட வேண்டியதுதான்.

நாம் வீடுகளிலும், பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் செய்யும் அன்றாட அலுவல்களை எல்லாம் வகை வகையான எந்திரங்கள் நொடிப்பொழுதில் செய்து முடிக்கும். சும்மா உண்டு, உடுத்துக், களித்துச் சுகபோகத்தை அனுபவிப்பதே மனிதர்கள் செய்ய வேண்டிய வேலையாக இருக்கும். இதை நாம் நேரில் காண்பதற்கு அதிகநாள் இல்லை. இன்னும் இருபதே ஆண்டுகளில் காணப்போகிறோம் என்று அமெரிக்க அறிவர்கள் உறுதியாகக் கூறுகிறார்கள்.

## நீங்களும் அறிவீர்களா?

—செட்டிநகர் மதியரசு—

வினாக்கள்

(1) ரட்னலிய நீர் வீழ்ச்சியின் உயரமென்ன?

(2) சிமேந்தைக் கண்டு பிடித்தவர் யார்?

(3) இலங்கையில் முதன் முதல் தபாலட்டை வெளி வந்தது எத்தனையாம் ஆண்டு?

(4) 'தேம்பாவணி' என்னும் நூலை இயற்றியவர் யார்?

(5) கடுகணுவைக் குகை எப்போது தோண்டப்பட்டது?

(6) "சாட்" ஏரி எங்குண்டு?

(7) அமெரிக்கா சுதந்திர மடைந்தது எந்த ஆண்டில்?

(8) மார்க்கோபோலோவின் பிறப்பிடம் எது?

(9) மயில் மாளிகை எங்குண்டு?

(10) சினிமாக் கருவியைக் கண்டு பிடித்தவர் யார்?

சரியான விடைகள்

(1) 365 அடி.
(2) ஆஸ்படீன்.
(3) 1872-ல்.
(4) வீரமாமுனிவர்.
(5) 1823-ல்.
(6) ஆபிரிக்காவில்.
(7) 1876-ல்.
(8) வெனிஸ்.
(9) அநுரதபுரியில்.
(10) எடிசன்.

## அறிஞர் அமுதம்

மொழி இறந்துபடின் நாமும் இறந்து படுவோம் அன்றோ?

—திரு. வி. க.

அதிகாரம் ஒரு பலம்; அதே சமயத்தில் அது ஒரு பலவீனம். பலம் வலுக்க வலுக்க, ஒருங்கே பலவீனமும் பலப்படுகிறது.

—யாரோ.

நீயும் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழ விடு, இதுவே பொது நீதி.

—ஸ்ரேஞ்ச்

தியாகம் இன்றேல் வெற்றி இல்லை.

—பக்ஸ்டன்.

அரைப்பட்டினி, அரைகுறை சுபீட்சம், பாதி அடிமை, பாதி சுதந்திரம் என்பவைகளை எல்லாம் மனித வர்க்கம் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது.

—இந்திய சனுதிபதி.

தொகுத்தவர்:

—ந. தமிழேந்தி மாத்தளை.

## 'வகுப்பில் நடந்தது....'

விரைவில் எதிர்பாருங்கள்

# புயல் (1)

வானம் ஒரே இருட்கிடங்காகத் தோன்றியும் 22ம் திகதி பகல் எமதுபகுதிகளில் மழை சரியாகப் பெய்யவில்லை. அன்று முழுவதும் ஊதல் காற்று உடலை வாட்டியது. பகற்பொழுது இப்படியாக ஊர்ந்து மறைந்தது.

எங்கும் ஒரே காரிருள். நிலைமை வரப்போகும் ஏதோ ஒரு அபாயத்தை நமக்கு வெளிக் காட்டியது. இருள் கவ்வத் தொடங்கியதும் காற்றின் உதைப்பில் சிறிது வேகம் காணப்பட்டது. ஆண்டவன் பேரில் பழியைப் போட்டு விட்டு எல்லோரும் படுக்கையை நாடினோம்.

வெளியிலே 'சோ'வென்ற பேரிரைச்சலுடன் காற்று தன் வேகத்தைக் கூட்டியது. சிறு தூற்றல்களுக்கிடையே பேய்க் காற்றின் பயங்கர ஓசை கேட்டுக் கொண்டே இருந்தது. நேரத்துக்கு நேரம் காற்றின் ஒலியும் வேகமும் அதிகரித்தது. ஒருவருக்கும் உறக்கம் பிடிக்கவே இல்லை.

தொடர்ந்து மரங்கள் முறிந்து 'படார் படார்' என்ற ஓசையுடன் சாய்ந்தன இரவு நேரமானதால் புயலின் நிலையைப் பார்க்க முடியவே இல்லை. எப்போ, பொழுது விடியும் என்று ஏங்கிக் கொண்டே இருந்தோம்.

பொழுது புலர்ந்ததும் புயலும் மெல்லென அடங்கிச் சென்றுகொண்டிருந்தது. வெளியில் சென்று பார்த்த போது புயலின் கோரம் தெள்ளென விளங்கியது.

நிலப்பரப்பெங்கும் குழைக் காடாய் மாறி இருந்தது கடந்த வருடம் மழை இன்றி நமது பூமி வரண்டு கிடந்ததால் அநேகமான மரங்களை வேரோடு பெயர்த்து விடும் சக்தி புயலுக்கு இல்லை. மரங்களின் கொம்பர்கள் முறிந்து கிடந்தன.

வாளுேங்கிய இனிய வாழைத் தோப்புகள் காயும் பூவும் பிஞ்சுமாக நாசமுற்று மண்ணில் தலை சாய்ந்து கிடந்தன. தாயின் மடியில் கண்கலங்கி நிற்கும் சேய் போல இளநீர்க் குலைகள் தென்னையின் அருகே பரிதாபமாகச் சிதறிக் கிடந்தன. யாழ். நகரின் கற்பக விருட்சமாம் பனை மரங்கள் முறிந்து பாதைகளை அடைத்துக் கிடந்தன. இன்னும் சில முடியிழந்த மன்னர் போல் மேற் பாகத்தைப் புயலில் பறிகொடுத்துவிட்டு மொட்டையாக நின்றன.

புயல் நமது பயிர்களுக்கு விளைவித்தபெருஞ்சேதத்தை எண்ணிக் கலங்கிய நமக்கு மற்றும் பகுதிகளில் புயல் செய்த கொடூரங்களையும் அதனுல் பலர் உயிரிழந்தனர் என்பதையும் கேட்டவுடன் இதயத்தில் பேரிடி இறங்கியது போலாயிற்று. அந்தோ! நெருக்கடியான இந்நேரத்தில் நம் உற்ற சகோதரர்களைப் பறிகொடுத்து விட்டோமே!

இன்று வரும் நாளை வரும் சென்றாலும் திரும்பி வரும் செல்வம். ஆனால், இழந்து விட்ட மக்களை நாம் திருப்பிப் பெற முடியுமா? இது வரை நமக்குதவியவர்களு இனி நாம் தான் ஆறுதல் கூறி, உதவி புரிந்து மீண்டும் அவர்கள் வாழ்வு மலர உதவ வேண்டும்.

சின்னத்தம்பி சொல்லி
ஏழாலை மேற்கு.

## சிட்டுக் குருவி

—"ஜெயம்"—

சின்ன சின்ன சிட்டுக் குருவி
வண்ண வண்ண சிட்டுக் குருவி,
உன்னை நானும் தொட்டு தொட்டு
இன்பங் காண்பேன் சிட்டுக் குருவி.

கல்லைக் கையால் எடுத்து வந்து
உன்மேல் வீசி எறிய மாட்டேன்
கொள்ளை கொள்ளும் சிட்டுக் குருவி
கொண்டு தாயேன் தேனும் தானே.

பச்சை நிறம் கொண்ட குருவி
பார்க்க அழகாய் இருக்கும் குருவி
இச்சை கொண்டேன் உன்மேல் நானே
இன்பம் தருவாய் சிட்டுக் குருவி.

# இருவித தர்மவான்கள்

—தமிழழகன், ஊவாகட்டவளை—

ஒரு ஊரிலே ஒரு தர்மவான் 'இலைமறை காய் போல' இருந்தான். அவன் புகழுக்காக தர்மம் செய்யான். எனினும் அவனுடைய புகழ்பரவத் தொடங்கியது.

அதனைக் கேட்ட அயலூரிலுள்ள உலோபி ஒருவன், தானும் அவ்வாறு பெரிய தர்மவான் என்ற பட்டத்தைப்பெற அவாவுற்றான். அவனிடம் எவ்வளவு செல்வங்களிருந்தும் எச்சில் கையாலும் காக்கை ஒட்டான்'.

எனவே தன்னை தர்மவான் என்று காண்பிக்க எண்ணி ஒரு நாள் அயலூர் தர்மவானை தன்மனைக்கு விருந்தினராக வருமாறு அழைத்தான். பின் தன் வேலைக்காரன் ஒருவனை அழைத்து;'வருகிற வெள்ளிக் கிழமை யன்று, அயலூரிலிருந்து ஒரு தர்மபிரபு வருகிறார். அவருடன் விருந்து முடிந்து, பேசிக் கொண்டிருக்கும் போது, நீ பலப்பல வேடங்களில் வந்து என்னிடம் பணம் கேள். நீ எத்தனை முறை வருகிறாயோ அப்போதெல்லாம் 100 ரூபாய் தருவேன். அதனை பின் எனக்கு நீ கொடுத்து விடு' என்றான்.

வேலைக்காரனுக்கு பல வேடங்களுக்கான உடைகளையும் தயார் செய்து கொடுத்தான். வெள்ளிக் கிழமை வந்து, விருந்தும் முடிந்து விட்டது. விருந்தினருடன் பேசிக் கொண்டிருக்கும் போது, ஏழை ஒருவன் வந்தான் அவனுக்கு 100 ரூபாய் கொடுத்தான் உலோபி.

உலோபியின் திட்டப்படி பத்து வேடங்களில் வந்து விட்டான் வேலைக்காரன். எல்லாமாக 1000 ரூபாவை கொடுத்து விட்டான் உலோபி. பின் தர்மபிரபு அவனை வெகுவாக புகழ்ந்து விட்டுச்சென்றான் உலோபி.

பின்னர் அவன் வேலைக்காரனைப் பார்த்து, "ஏய் நீ பத்து தடவை வந்து விட்டாய் ஆகவே 1000 ரூபாவையும் கொடு" என்றான். அதற்கு வேலைக்காரன் ஐயோ "இது பொய் நான் எட்டு தடவை தான் வந்தேன்" என்றான்.

இருவருக்குமிடையில் வாதம் முற்றியது. 'மாதர்மபிரபு' அவனை அடக்க ஒரு தடியை எடுத்து ஓங்கினார். அதனை ஒரு கரம் தடுக்கவே நிதானமாக யார் எனப் பார்த்தான். அவர் வேறு யாருமல்ல, சற்று முன்பு வந்த தர்மபிரபுதான்.

உடனே உலோபி, நடந்தவைகளை மறைக்க "டேய் என்னடா நிக்கிறே ஐயாவுக்கு ஆசானத்தைப் போடு, காபி கொண்டு வா" என்றார்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம், உங்கள் வேலைக்காரன் சொல்வது சரியே; அவன் எட்டு வேடங்களில் தான் வந்தான். மற்ற இரண்டு வேடங்களிலும் எனது வேலைக்காரன் வந்தான். இதோ அந்த 200 ரூபா. இனிமேல் இவனை அடிக்காதிர்கள்" என்றுகூறி அவர் முன் பணத்தை வைத்தார்.

உடனே அதர்மவான் அவர் கால்களில் வீழ்ந்து, வணங்கினான். அவனது முகம் உயரவில்லை. அவனை மேலும் துன்புறத்த விரும்பாத தருமவான் அவ்விடத்தை விட்டு நகன்று விட்டார்.

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட சகலரும் உறுப்பினர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் உறுப்புரிமைப் பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். உறுப்புரிமைப் பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். 'வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று உறுப்புரிமைப் பத்திரங்களை "வளர்மதி"யில் உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" மே/பா சுதந்திரன், தபாற் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படி அனுப்புவோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு உறுப்புரிமை இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரம்

இல. 6

பெயர் ____________________

பாடசாலை ____________________

முகவரி ____________________

____________________

____________________ ____________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பொழுது
காண்பிக்கப்படுகிறது

எல்பின்ஸ்டன்
(மருதானை)
ரேக்ஸி (வெள்ளவத்தை) வின்சர் (யாழ்ப்பாணம்)
இர்பீரியல் (இரத்தினபுரி) வேல்ஸ் (கண்டி) நீ... (கம்ப...)
நீல் (நீர்கொழும்பு) ஸ்ரீமுருகன் (வவுனியா) நீகஸ் (நுவரெலியா)
ஆகிய திரைகளில்!

சிவாஜி கணேசன்—சரோஜாதேவி
ராதா—ரங்கராவ்—ராமராவ் நடித்த

பக்ஷிராஜா அளிக்கும்

## கல்யாணியின் கணவன்



கெபிட்டலில்
11 வது கடைசி வாரம்!
எம். ஜி. ஆர்., சரோஜாதேவி, எம். ஆர். ராதா நடித்த

## என் கடமை

ஜனவரி 29-வ முதல்
செல்லமஹால் மற்றும் 7 திரைகளில்

எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி
சௌகார் ஜானகி, அசோகன், நாகேஷ்
நடித்த

## அல்லி

4-வது கடைசி வாரம்

தாராசிங், அமீதா, கிங்கொங்
நடித்த

## காட்டு வீரன்

(முழு நீள ஈஸ்ட்மென் கலர்) தமிழ் சித்திரம்



புகழூட்டும் 3-வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) மொடேர்ன் (பதுளை)
14ம் திகதி முதல் வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில்!

இறந்தும் போதும் இரப்போர்க்கு இல்லையெனக் கூறாது
உடலைப் பந்தமெல்லாம் அளித்த வள்ளலின் வரலாறு

சிவாஜி கணேசன்—அசோகன்—ராமராவ்—முத்துராமன்
சாவித்திரி—தேவிகா—எம். வி. ராஜம்மா
மற்றும் பலர் நடித்த

பத்மினி பிக்சர்ஸ் **கர்ணன்** (ஈஸ்ட்மன் கலர்)

கதை வசனம் : சக்தி கிருஷ்ணசாமி
பாடல்கள் : கண்ணதாசன்
இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி
டைரக்ஷன் : பி. ஆர். பந்தலு

## 3-வது மகத்தான வெற்றி வாரம்!



சுயாவின் ரகசியம் இன்று பரகசியமாய் விட்டது! பல்லாயிரக் கணக்கான மக்கள்
ரகசியத்தை அறிந்து விட்டனர்! அறியத் துடிக்கும் இன்னும்
ஆயிரமாயிரம் மக்கள் எண்டெர்டெயின்மெண்ட்ஸ் தியேட்டர்களை
முற்றுகையிட வண்ணமிருக்கின்றனர்!!

'சுரத்தலி'—'சுனீதா'—'சுந்தர பிரிந்தா'

ஆகிய அற்புதப் படங்களை அளித்து ரசிகர்களை மகிழ்வித்த சிலோன்
எண்டர்டெயின்மெண்ட்ஸ் ஸ்தாபனத்தார் பெருமையுடன் அளிக்கும்

ஜாபீர் ஏ. காதரின் **சுயாகே ரஹச** (சுயாவின் ரகசியம்)



டைரக்ஷன்: ப. நீலகண்டன்

ஜீவராணி—ரவீத்திர ரூபசேன—ஆனந்த ஜயரத்ன—லீனடி சில்வா—சாந்திய குமாரி—விஜித மல்லிகா—எல். எம். பெரேரா—
...ர்யசிரி ...ணதுங்க மற்றும் பலர் நடித்த

இசை: டீ. ஆர். பாப்பா—ரொக்சாமி

பின்னணி : மொஹிதீன் பெய்க், லதா தர்மதாச வல்பொல, ஜி. எஸ். பி. ராணி, மில்டன் பெரேரா, சுஜாதா பெரேரா

சென்ட்ரல் (மருதானை) தினசரி : 2, 6, 9-30
ஈரோஸ் (பாமன்கடை) தினசரி : 2-30, 6-30, 9-30
ஜேஸிமா (கிராண்ட்பாஸ்) தினசரி : 2, 6, 9-30
லவீனியா (நுகேகொட) தினசரி : 2-30, 6-30, 9-30

மற்றும் இலங்கையெங்கும் பல திரைகளில்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் ஜனவரி மாதம் 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.